சி
வா
ஜி





சித்திரை மலர்

உடைகள் நீடித்து உழைக்க...

வண்ண ஆடைகள் பொலிவுடன் பிரகாசிக்கவும்... வெள்ளை ஆடைகள் மேலும் வெண்மையாக விளங்கவும் காவேரி பார் கைகண்ட சலவை சோப். உடைகளின் உழைப்பை சிக்கனச் செலவில் நீடிக்கச் செய்யும் ஒப்பு உயர்வற்ற சலவைச் சாதனம்.



காவேரி
பார் சோப்

மேட்டூர் கெமிகல் & இண்டஸ்ட்ரியல் கார்ப்பொரேஷன் லிமிடெட்

மேட்டூர் அணை R. S. சேலம் ஜில்லா

மானேஜிங் ஏஜெண்ட்ஸ்:

சேஷசாயி பிரதர்ஸ் பிரைவேட் லிமிடெட்

MC 62/6

சித்திரைப் புத்தாண்டு மலர்

சோபகிருது.

> ஊன்றிய கொள்கையும் ஒன்றே கணந்தொறும்
> தோன்றும் கடமைகள் ஆற்றுதல் நன்றே.

ஆசிரியர் :

திருலோக சீதாராம்.

'SHIVAJI' SPRING SPECIAL

14th APRIL 1963.

அலுவலகம் : **24. A-தேரடிக்கடைத் தெரு
திருச்சிராப்பள்ளி 2.**

சென்னையில் : **12. நல்லதம்பி முதலி தெரு
திருவல்லிக்கேணி - சென்னை 5.**

ஜி. டி. நாயுடு நன்கொடைக் காட்சி : மேலட்டை

SHIVAJI
TAMIL WEEKLY

சிவாஜி

ஞாயிறு வாரப்பதிப்பு

கிராம, சமுதாய நல, கலை, இலக்கியப் பத்திரிகை

புத்தாண்டுச் செய்தி

எல்லையில் போரும், எண்ணற்ற தொல்லைகளும் கொண்டு குவித்த பழைய ஆண்டு, நமது தேசீய வாழ்வில் புது விழிப்பை உண்டாக்கி விட்டுச் சென்றது. சுதந்திரம் என்பது எவ்வளவு அருமையானது, அதைப் பேணிக் காப்பதில் நமது பொறுப்புக்கள் எத்துணை மகத்தானவை என்பதை சென்ற ஆண்டைப் போல் முன் எந்த ஆண்டும் இவ்வளவு தெளிவாக உணர்த்தியதில்லை. எனவே நம்மைத் தொல்லைக்குட்படுத்திய போதிலும் நமக்கு நம்மை உணர்த்திய காரணத்துக்காகவே சென்ற ஆண்டுக்கு நன்றியுடன் விடையளிக்கிறோம்.

ஆண்டுகள் ஒன்றை ஒன்று தொடர்ந்து பின் விளைவாய் மலர்கின்ற ஒரு காலத்தின் தப்படிகளே. வந்து முன் நிற்கும் புதிய ஆண்டு, சென்ற ஆண்டின் தொடர் விளைவாக நம்மில் முன்னிலும் அதிகப் பொறுப்புக்களை உணர்த்தவே பிறந்திருக்கிறது. சமதர்மப் பாங்கில் சமுதாயம் உருப்பெற வேண்டுமென்ற உன்னதமானதொரு நெடிய இலக்கை நோக்கி முன்னேறிச் செல்ல, பல புதிய தியாகங்களை இந்த ஆண்டில் நாம் செய்ய வேண்டிவரலாம். பாரதப் பண்பாட்டின் சிகர ஜோதியான விவேகானந்தரின் நூற்றாண்டு அல்லவா இது !

வடக்கே மேல் மட்டத்தில் அமைதி நிலவிய போதிலும் அடிப்படையில் பெரும் பகையின் சூழ்ச்சிகளும் சதிகளும் திரை மறைவில் உருப்பெற்று வருவது கண்கூடு. அண்டை அயலில் உள்ள சிறு நாடுகள், அவற்றில் பழையவையும் புதியவையும் உண்டு, அவையவையும் தங்கள் நலனைக் காப்பதாகவே நம்பி, நமக்கு எதிராகவும் நமது சீனப் பகைவரின் நட்புக்கு வளைந்து கொடுக்கும் போக்குடன் இயங்குவதைப் பார்க்கிறோம். தார்மீக வலியும் தன்னம்பிக்கையும் இல்லாத சுற்றுச் சார்புகளுக்கிடையில் உள்ளுணர்வில் நேர்மையும் உலக நாடுகளின் நன்னம்பிக்கையும் கொண்டு தற்காப்பிலும், உள் நாட்டு மக்களின் வாழ்வில் மேற்கொண்ட பல திட்டங்களின் தீவிர முன்னேற்றத்திலும் குன்றாத ஊக்கத்துடன் பாரதம் முன்னேறுகிறது.

சென்ற பதினைந்தாண்டுகளில் உருப்பெற்று ஆரவாரித்துக் கொண்டிருந்த தீய சக்திகளும் பிரிவினைப் பாங்குகளும் தேசீயப் பொதுப் பாதுகாப்பின் காரணமாகத் தங்கள் கோரப் பற்களை மூடிக் கொண்டு விட்டது ஒரு நல் வாய்ப்பு. வருகின்ற ஆண்டில் இந்த நிலை உயர்ந்த உணர்ச்சி அடிப்படையில் வலுப் பெற்று பாரதம் ஒரு பெரும் நாடு என்ற உண்மை உணர்வு விரிவடைய வேண்டும்.

பிற நாடுகளிலிருந்து நாம் பெறும் பொருள்கள் ராணுவத் தேவைக்காக மட்டுமே அமையுமாறும், அன்றாட வாழ்க்கைத் தேவைகளுக்குப் பிற நாட்டுப் பொருள்களை எதிர்பாராமல் நமது தேவைகளை மட்டுப் படுத்திக் கொள்ளும் தன்னடக்கமும் தியாக சீலமும் நம்மில் பெருக வேண்டும்.

அரசியல் பதவிகளிலுள்ளவர்கள், வீணான புதிய சிக்கல்களுக்கு இடங் கொடாமல், செய்யுங் காரியங்களெல்லாம் மக்களின் பேராதரவையும் அனுதாபத்தையும் திரட்டக்கூடிய முறையில் இயங்குவது நாட்டின் வலிமையை உருவாக்கும். மொழிப் பிரச்னைகள், எல்லைப் பிரச்னைகள், நீர்ப் பங்கீட்டுப் பிரச்னைகள், உணவுப் பிரச்னைகள் இவற்றிலெல்லாம் அகில இந்திய மனப்பான்மை முதலிடம் பெறுமானால், புதிய ஆண்டில் நமது தேசீய பலம் மேலும் ஒரு படி முன்னேறும் என்பது உறுதி. நாட்டுப் பாதுகாப்பில் ஒவ்வொருவரும் இயன்ற அளவு பங்கு கொள்ள வேண்டுமென்பதே புத்தாண்டின் செய்தியாகும். **

சொல்லுக்கு அடங்கா

— பரமஹம்ஸதாசன்

நித்தம் அலுப்பின்றி
நெடுயாத் திரைசெல்லும்
உத்தமச் செம்பரிதீ !
நீசெல்லும் ஊரெங்கே ?
சொல்லுக் கடங்காத் தொலைதூரம் தம்பி அது!

தேய்ந்துகால் ஓய்ந்துவிடத்
தேசமெல்லாம் சுற்றிவரும்
காந்திமதீ ! நீதேடும்
கட்டழகுக் காதலன்யார் ?
பேர்வடிவொன் றில்லாப் பெரும்பித்தன் காண் –
அவனே !

கங்குற் பொழுதெல்லாம்
கண்விழித்துக் காத்திருக்கும்
தங்கமணித் தாரகைகாள் !
உங்கள் தவம்யார்க்கோ ?
காலத்தே ரோட்டும் கருணைப்பொற் சோதி
யர்க்கே !

அங்கம் குலுங்க
அழகுச் சிரிப்பொலிக்கும்
பங்கயங்காள் ! உங்கள்
பரவசத்தின் காரணமென் ?
கண்ணுக்கெட்டாதோன் கரந்தொட்ட காரணமே!

பூங்கிளிகாள், மாங்குயில்காள்,
புள்ளினங்காள், வண்டினங்காள் !
தீங்குரலில் நீங்கள் தரும்
தேம்பா மலர்யார்க்கோ ?
கற்பனைகட் கெட்டாக் கவிஞர் தனிமுதற்கே !

பொங்கி வளர்ந்துயரும்
பொன்மலைகாள், பூந்தருக்காள்,
தெங்கு கமுகினங்காள் !
மேல்நோக்கும் செய்தியெதோ ?
வானுறையும் வள்ளல் மலரடியைத் தீண்டுதற்கே !

ஆயிரம் ஆயிரர்பல்
லாயிரத் தாண்டுகளாய்
ஓயா தலைகடலே !
உன்கதறல் யார்க்கு ஓதாய் ?
வேதா கமங்கள் வியந்துரைக்கும் நாதனுக்கே !

★

கண்ணோட்டம்

— ரா. நா.

★

வங்க ராஜ்யத்தில் 5 தொகுதிகளில் ராஜ்ய சட்டசபைக்கு இடைத் தேர்தல் நடந்தது. இந்த ஐந்து தொகுதிகளிலும் காங்கிரஸ் அபேட்சகர் களே வெற்றி பெற்றனர் எனும் நற்செய்தி நாட்டு நலனில் அக்கறையுள்ளவர்களுக்கு மகிழ்ச்சியளிக் கும். மத்திய அரசு புது வரிகள் விதித்ததனுலும், தங்கக் கட்டுப்பாடு அமுல் செய்யப்பட்டதனுலும் மக்கள் மனம் நொந்து காங்கிரஸைக் கவிழ்த்து விடுவார்கள் என எதிர்க்கட்சியினர் கனவுகண்டு வந்தனர். அது பகற்கனவாகப் போய்விட்டது. நமது வாக்காளர்கள் அறிவற்றவர்களல்லர்.

காங்கிரஸ் ஆட்சியில் குற்றம் குறைகளிருப்பி னும் பாமர மக்களின் சுகவாழ்விற்கு காங்கிரஸ் போல் பாடுபடும் வேறு ஸ்தாபனங்கள் இல்லை என்பதை அவர்கள் உணர்ந்திருக்கின்றனர் என் பதை இந்த வெற்றி தெளிவாக எடுத்துக் காட்டு கிறது. இந்தத் தேர்தல் வெற்றியில் குறிப்பிடத் தக்க விஷயம் என்னவெனில் இந்த 5 தொகுதி களில் ஒன்றில் முன்னம் கம்யூனிஸ்ட் அபேட்சகர் வெற்றி பெற்றிருர். இப்போது அதைக் காங்கிரஸ் கைப்பற்றி விட்டது. காலஞ்சென்ற டாக்டர் பி. ஸி. ராய் பிரதிநிதியாயிருந்த தொகுதியில் மீண் டும் காங்கிரஸ் வெற்றி பெற்றதுடன் காங்கிரஸ் அபேட்சகரை எதிர்த்த நால்வரும் டிபாசிட் தொகையை இழந்து விட்டனர்.

வங்கத்தைப் பின்பற்றி நமது தமிழகமும் காங் கிரஸையே வரப்போகும் இடைத் தேர்தலில் பரி பூரணமாக ஆதரிக்கும் என எதிர்பார்க்கலாம்.

★

டில்லியில் கூடிய அ. இ. கா. கூட்டத்தில் விவாதிக்கப்பட்ட இரு விஷயங்கள் கவனத்திற் குரியவை. விவசாயத் துறையில் கணிசமான பலன் கிடைக்கவில்லை. இதன் காரணங்களை ஆராய்ந்து விவாதம் நடந்தது. திட்ட முறை களில் கோளாறுதான் இதற்குக் காரணம் என உணவு மந்திரி திரு. எஸ். கே. பட்டீல் கூறினர். இதை மறுத்துப் பேசிய திட்ட இலாகா மந்திரி திரு. நந்தா சில உண்மைகளை எடுத்துக் கூறி ஞர். பல ராஜ்யங்களில் அமைச்சர்களே நேர் மாருக நடந்து கொள்கின்றனர் என்றும், விவசா யத்திற்காக அளிக்கப்பட்ட மான்யத் தொகை யைச் சில ராஜ்ய அரசினர் செலவு செய்யவில்லை எனவும், சில ராஜ்யங்களில் விவசாயத்திற்கு அளிக்கப்பட்ட தொகையை பயனற்ற படா டோப விஷயங்களுக்குச் செலவு செய்துள்ளனர் எனவும் திரு. நந்தா குற்றம் சாட்டினர்.

மூன்ருவது ஐந்தாண்டுத் திட்டத்தை அமுல் செய்யும் கட்டத்தில் வெறும் விவாதத்தில் காலத் தைப் போக்காமல், பயனுள்ள வகையில் பணத் தைச் செலவு செய்வதற்கான வழிகளை ராஜ்ய அரசுகள் வகுக்க வேண்டும். தங்களிடமிருந்து வசூலிக்கப்படும் பணம் வகையான வழிகளில் செலவு செய்யப்படவில்லை என்பதை மக்கள் அறிந்தால் என்ன ஆகும் என்பதை ஆட்சியினர் நன்கு அறிந்து பணிபுரிய வேண்டும்.

கட்சிச் சார்பற்ற அயல்தேசக் கொள்கை பற்றி விவாதம் நடந்தது. அரசாட்சியின் இந்தக் கொள் கையைக் கமிட்டி ஆதரித்தது. இந்தக் கொள் கையை எதிர்ப்பவர்கள் அதற்குக் கூறும் காரணங் களைப் பிரதமர் நேரு ஆராய்ந்து பதிலளித்திருக் கிருர். நமது சார்பற்ற கொள்கையை எதிர்க்க வேண்டிய அமெரிக்கர் இதை வரவேற்கின்றனர். ஏனெனில் இந்தக் கொள்கையின் பயனுகத்தான் ரஷ்யா சீனவுக்கு உதவியளிக்காமலிருக்கிறது.

புற கம்யூனிஸ்டு நாடுகளும் சீனவிடம் அனு தாபம் காட்டவில்லை. நம் நாட்டில் இந்தக் கொள்கையை எதிர்ப்பவர்கள் நமது பொருளா தாரத் திட்டங்களை எதிர்ப்பவர்கள். அப்படிப்பட்ட பிற்போக்காளர்கள் நமது கட்சிச் சார்பற்ற கொள் கையை எதிர்ப்பதில் ஆச்சரியமில்லை என நேரு கூறினர். சுதந்திரா கட்சியினர் கூறுகிற மாதிரி இந்தியா மேற்கத்தி நாடுகளே கதி என்று இருந்து விட்டால் ரஷ்யா நேர்முகமாக சீனவை ஆதரிக்க முன்வரும் என்பதை இவர்கள் கவனிக்கவில்லை. விஞ்ஞானத் துறையில் முதல் இடம் பெற்றுள்ள ரஷ்யா நவீன நாச சாதனங்களைச் சீனவுக்கு

அளித்தால் நம் கதி என்ன ஆகும் என்பதை இந்த வாய்ச்சொல் வீரர்கள் எண்ணிப் பார்க்க வேண்டும்.

*

இந்தியாவில் அமெரிக்காவின் தூதராக திரு. செஸ்டர் போல்ஸ் நியமிக்கப்பட்டது. ஒரு நற்செய்தி. திரு. போல்ஸ் ஏற்கனவே இந்தப் பதவியை வகித்தவர். சமாதானத்தின் புதிய பரிமாணங்கள் என்று இவர் எழுதிய நூலில் சீனா கம்யூனிஸ்ட் நாடாக இருந்தும் ரஷ்ய ஆட்சியினர் ஏன இந்தியாவை ஆதரிக்கின்றனர் என்பதன் காரணங்களை நன்கு எடுத்துக் காட்டியுள்ளார்.

கீழ்த் திசையில் சீனா பலம் பொருந்திய நாடாகத் திகழ்வது கம்யூனிஸ உலகிற்கு ரஷ்யாதான் வழிகாட்டி என்கிற நிலையை பாதிக்கும் என்பதனால்தான் ரஷ்யா இந்தியாவை ஆதரிக்கிறது என அந் நூலின் போல்ஸ் கூறியுள்ளார். இந்தியாவின் முன்னேற்றத்தில் அக்கறையும் அபிமானமும் உள்ள போல்ஸ் மீண்டும் இந்தியாவில் பணியாற்றும் வாய்ப்புப் பெற்றிருப்பது நம் நாட்டிற்கு நன்மை என்பதில் சந்தேகமில்லை.

★

இந்தியாவிலிருந்து சீனாவிற்கு சமாதான தூது கோஷ்டி புறப்பட்டுச் செல்வது தெரிந்த விஷயம். கால்நடையாக 18 மாதம் சென்று இவர்கள் பீகிங்கை அடைவர். இந்த 18 மாத காலத்தில் உலகில் என்ன நடக்குமோ, அந்தக் காலத்திற்குள் சண்டை முடிந்துவிடுமோ நீடித்து நடக்குமோ திட்டமாகக் கூறமுடியாது, ஆனால் இவர்கள் யாத்திரையினால் சுமுகமான சூழ்நிலை ஏற்படலாம் எனச் சிலர் நம்பினர்.

இந்த நம்பிக்கை பொய்த்து விட்டது. இந்த கோஷ்டியினர் செய்யும் பிரசாரத்தினால் இந்த கோஷ்டியைச் சேர்ந்த ஒரு அமெரிக்கர் சீன இந்தியத் தகராறில் யார் கட்சி நியாயமானது என்பதைச் சொல்ல முடியாது எனக் கூறியுள்ளார். மற்றும் சிலர் இந்தியாவைக் குறைகூறிப் பேசுகின்றனர். சமாதான நோக்குடன் செல்லுபவர்கள் நடு நிலைமையில் பற்றுள்ளவர்களாயிருக்க வேண்டும். ஆனால் இந்தக் கோஷ்டியினர் விருப்பு வெறுப்பின்றிப் பணியாற்றும் ஆற்றல் இல்லாதவர்கள் என்பது தெளிவாகிவிட்டது.

அதுதான் போகட்டும் என்றாலும் இந்தக் கோஷ்டியில் சில சர்வோதயத் தொண்டர்கள் சேர்ந்திருப்பதும், இதற்குக் காந்தி நினைவு நிதியினர் ஆதரவளிப்பதும்தான் ஆச்சரியமாக இருக்கிறது.

*

ARC

பாதுகாப்பு,
நீடித்த உழைப்பு,
சிக்கனம்
இவற்றின்
சின்னம்.

கார், டிரக், பஸ் டயர்களை புதுப்பிக்க

அமெரிக்க முழு வட்ட லோடி மோல்டுகள் அமைக்கப்பட்ட சிறந்த நிறுவனம்

தந்தி: 'ARC' த. பெ. எண்: 263 தொலைபேசி: 3400

ஆனைமலைஸ் ரிட்ரெடிங் கம்பெனி,

டாக்டர் நஞ்சப்பா ரோடு, :-: கோயமுத்தூர் 1.

வாடிக்கையாளர்களின் குறித்த கால சேவைக்காக
எங்கள் திருநெல்வேலி கிளைத் தொழிற்சாலையும்
31—1—1963 முதல் இயங்குகிறது.

சுதாவின் அதிர்ஷ்டம்

சிறிய கதை

— பி. சாவித்திரி, பி. ஏ., பி. டி.

★

நாராயணய்யர் ஓர் பெரும் பணக்காரர். தவிர "செல்வர்க்கழகு செழுங்கிளை தாங்குதல்" என்ற ஒளவையின் மொழிக்கிணங்க அவர் தம் எளிய உறவினர்களுக்குப் பல விதங்களில் உதவி செய்து வந்தார். "கடவுளும் வழி காட்டுவாரே தவிர ஊட்டமாட்டார்" என்ற பழமொழி ஒன்று உள்ளது. அதற்கிணங்க நாராயணய்யரும், எல்லோரும் ஏதாவதொரு தொழிலை மேற்கொண்டு ஜீவனம் நடத்த உதவுவாரேயன்றி தண்டச்சோறு போட்டு மக்களை அதிகச் சோம்பேறியாய்ச் செய்ய மாட்டார். அவர் தயவில் படித்து முன்னுக்கு வந்த பையன்கள் பலர். நல்ல குடும்பங்களில் வாழ்க்கைப் பட்டு "இல்லற மல்லது நல்லறமன்று" என்ற குறளை மெய்ப்பித்த பெண்கள் பலர்.

ஞானம்பாள் நாராயணய்யரின் ஒன்றுவிட்ட அத்தையின் மகள். எதிர் பாராத தருணத்தில் கைம்பெண் ஆகி, தன் ஒரே பெண் சுதாவுடன் திக்கற்றுத் தவித்து நிற்கையில் சமய சஞ்சீவிபோல் நாராயணய்யர் அவளுக்கு ஆறுதல் கூறி அவர்களுக்குத் தன் வீட்டில் இடமும் உணவும் தர முன் வந்தார்.

சுதாவைப் பள்ளியில் படிக்க வைத்து வீட்டில் பாட்டுக் கற்கவும் ஏற்பாடு செய்தார். ஆனால் பலன் தான் இல்லை. படிப்பு, பாட்டு இவைகளுக்கும் சுதாவுக்கும் வெகு தூரம். "அசடு" என்ற பெயர் அவள் நெற்றியில் ஒட்டி இருந்தது.

ஐயோ! இந்தப் பெண்ணுக்குக் கல்யாணம் ஆக வேண்டுமே, கணவன் இவள் சமர்த்துக்கு ஒழுங்காய் வைத்துக் கொள்ள வேணுமே, இவளுக்கு ஜோடி யார் என்ற விசாரத்தில் எல்லோரும் மூழ்கினர்.

★

ஒரு நாள் மழை ஜோ வென்று விடாமல் பெய்தது. மழையினின்றும் ஒதுங்க ஒரு வாலிபன் தன் தாய் தந்தையுடன் நாராயணய்யர் வீட்டுத் திண்ணையில் ஒதுங்கினான். நாள் முழுவதும் மழை ஓயவில்லை. இளகிய மனமுள்ள நாராயணய்யர் அவர்களை உள்ளே அழைத்து உணவு அளித்தார். எல்லோரும் சம்பாஷித்துக் கொண்டிருந்தார்கள். அதிகம் வளர்த்துவானேன்! சுந்தரேசன் என்ற அந்த வாலிபனுக்கும் சுதாவுக்கும் திருமணம் நிச்சயமாகி சீக்கிரமே விவாகமும் இனிதே நடந்தது.

சுதா புக்ககம் போய்விட்டாள். அவள் எப்படிக் குடித்தனம் செய்கிறாளோ, சுந்தரேசன் அவளைக் கைவிடாமல் வைத்துக் கொள்ளவேண்டுமே, என்றெல்லாம் நாராயணய்யர் குடும்பத்தார் கவலைப் பட்டுக் கொண்டிருந்தனர்.

★

ஒருநாள் மாலை சுதா தன் கணவனுடனும் மாமியாருடனும் நாராயணய்யர் வீடு வந்தாள். சுதா தான் சந்தோஷமாய் இருப்பதாயும், மாமியார் மாமனார், கணவர் மூவரும் தன் புத்திக்கு மிகவும் மெச்சுவதாகவும் சொன்னாள்.

ஆச்சரியத்தில் எல்லோரும் மூழ்க, சுதாவின் மாமியார், என் நாட்டுப் பெண் மிகவும் கெட்டிக்காரி, காரியங்களெல்லாம் நன்றாகச் செய்கிறாள் என்று பெருமை அடித்துக் கொண்டாள்.

எல்லோரும் சுந்தரேசன் பக்கம் திரும்பினர். சுதாவின் சாமர்த்தியத்தைக் கேட்கவும் வேண்டுமா? சமையல் நள பாகந்தான். பாட்டோ, அடடா, என்ன இனிமை! கணக்கு, வழக்கு எல்லாம் அவள் தான் கவனித்துக் கொள்கிறாள். அவள் காலடி வைத்ததும் எங்கள் தெருவுக்கே ஓர் அழகு வந்துவிட்டது. தெருவில் யார் புடவை வாங்க வேண்டுமானாலும் சரி, நகை செய்து கொள்ள வேண்டுமானாலும் சரி, பூ தைக்க வேண்டுமானாலும் சரி, இவளைக் கேட்காமல் செய்வதில்லை. டிசைன்தான் எப்படிப் பொறுக்குகிறாள் என்று வர்ணித்துக் கொண்டே போனான் சுந்தரேசன். கேட்பவர்களுக்கோ சிரிப்பை அடக்க முடியவில்லை. எப்படியோ சமாளித்து அவர்களை ஒரு வகையாய் வழி அனுப்பினர்.

நாராயணய்யர் தம் மனைவியிடம் வந்து, அடியே, மாமியார் மெச்சிய மருமகள் இல்லை என்பாயே இப்போ சுதா விஷயத்தில் என்ன சொல்கிறாய் என்றார்.

என்னமோ போங்கோ, அவா குடும்பமே, ஏன் தெருவே, ஒன்று முழு அசடாய் இருக்க வேண்டும்; அல்லது கொஞ்சம் பைத்தியமாய் இருக்க வேண்டும். எப்படி இருந்தால் என்ன? நீங்கள் ஒரு நாளாகிலும் என்னைப் புகழ்ந்ததுண்டா? சுந்தரேசன் எப்படிப் பெருமையாகப் பேசுகிறான்! என்ன இருந்தாலும் சுதா அதிர்ஷ்டசாலிதான் என்றாள் நாராயணய்யர் சம்சாரம். ✽

ஜி. டி. நாயுடுவின்

★

தென்னாட்டில் ஒரு தனி மனிதர் இரண்டரை லட்ச ரூபாய் பாதுகாப்பு நிதிக்கு நன்கொடை வழங்கினர் என்பதை ஒரு அதிசயச் செய்தி போலச் சென்ற மாதம் தினசரிப் பத்திரிகைகள் கொட்டை எழுத்தில் தலைப்பிட்டுப் பிரசுரித்தன. 67 வயதுக்கு மேற்பட்ட இந்த அதிசய மனிதர் சென்ற அரை நூற்றாண்டுக்கு மேலாக லட்சோப லட்சங்கள் எத்தனையோ நன்கொடைகளை வாரி வழங்கிய காலத்திலெல்லாம் இந்த நாட்டுப் பத்திரிகைகள் அவற்றை அறிந்து வெளியிட்டதில்லை. இப்படி ஒரு அபூர்வ மனிதர் இந்த நாட்டில் பிறந்திருக்கிறார் என்ற செய்தியைக்கூட பத்திரிகைகளோ அரசாங்கமோ நெடுங்காலம் வரையில் புரிந்துகொண்டதில்லை. புரிந்துகொள்ள விரும்பாமலும் கூட இருந்திருக்கின்றனர். காரணம் ஜி. டி. நாயுடுவின் சுயேச்சையான போக்கும், நேர்மையும் கண்டிப்பும், அதிசயமான ஆராய்ச்சி மூளையும் அவரை ஏதோ விசித்திரப் பொருளைப் போலக் கருதி வேடிக்கை பார்க்கும் நிலையில் மற்றவர்களை வைத்துவிட்டது போலும்.

நம்முடைய நாட்டில் நவீன விஞ்ஞான சாதனைகளைப் பெருக்குவதற்காக முப்பது ஆண்டுகளுக்குமேலாக அவர் மேற்கொண்ட முயற்சிகளும் அரும் பெரும் செயல்களும் கொஞ்சநஞ்சமல்ல. அந்த நாள் முதல் இந்த நாள் வரை வருமான வரி இலாகாவும், ஏற்றுமதி இறக்குமதித் துறையும், அவருக்குக் கொடுத்து வந்த தொல்லைகளும் கொஞ்சமல்ல.

இவையெல்லாம் பழங்கதைகள். நிலைமை இன்று மாறுதலடைந்து, ஜி. டி. நாயுடுவின் கலைத்திறனும், நிர்வாக சாமர்த்தியமும் இந்த நாளில் பல புதிய தொழில் ஊக்கங்களில் ஈடுபட்டு வரும்போது, பழைய வேதனைகளைப் பற்றிக் குறிப்பிடுவது பொருந்தாமல்கூட இருக்கலாம். என்றாலும் அவருடைய வரலாற்றில் நம்முடைய நாட்டின் நெடுங்கால வேதனைகளும், முயற்சிகளும், தோல்விகளும், வெற்றிகளும் அடங்கியிருக்கின்றன. அவற்றை இந்த நாட்டு மக்கள் அவசியம் தெரிந்து கொள்ளத்தான் வேண்டும்.

அவருடைய வாழ்வில் அவர் அனுபவித்து அறிந்துள்ள ஞானங்கள் எல்லையற்றவை. பொறியியல், விவசாயம், மருத்துவம், விஞ்ஞானம், மனோதத்துவம் போன்ற ஒவ்வொரு துறையிலும் அவராகவே முயன்று கண்டறிந்த உண்மைகள் அவருடைய பதினாயிரக் கணக்கான குறிப்பேடுகளில் சிதறிக் கிடக்கின்றன. அந்த பைல்களையெல்லாம் நூற்றுக்கணக்கான அடுக்கு வரிசை அலமாரிகளில் வகைப் படுத்தி அவர் பாதுகாத்து வந்திருக்கிறார். அவற்றையெல்லாம் ஆராய்ந்து தொகுத்துப் பற்பல அரிய நூல்களை உருவாக்கி வெளியிட முடிந்தால், நம்முடைய நாட்டுக்கு மட்டுமல்லாமல், உலகின் பொது அறிவியல் துறைக்கே பெரும் லாபமாக இருக்கும். யார் இவற்றைச் செய்வது ? காலம்தான் இதை நிர்ணயிக்க வேண்டும்.

அவருடன் நெருங்கிப் பழகியவர்கள், அவருடைய வாழ்வின் அருமைப்பாட்டையும், மேன்மையும் உணர்ந்த பொது நோக்குடைய கலைவல்லார்கள், அரசாங்கத்தார் அனைவரும் சேர்ந்து முயற்சி எடுத்து அவருடைய ஒத்துழைப்பையும் பெற்றுச் சாதிக்க வேண்டிய மகத்தான அறிவியல் திருப்பணியாகும் இது. இந்தத் துறையில் ஏதாவது பணி செய்யக் கூடுமோ என்ற ஆர்வத்தால், சில மாதங்கள் அவருடன் தங்கியிருந்து ஆராய்ந்து பார்த்த சிறிய அனுபவத்திலிருந்து இதை எந்தத் தனிப்பட்ட வரும் சாதிக்க முடியாது என்ற முடிவு இந்தக் கட்டுரையாளருக்கு ஏற்பட்டது.

அவரை அதிசய மனிதர் என்று சொல்லி வியந்து கொள்வதுடன் நின்றுவிடக் கூடாது. அவர் எவ்வளவு அபூர்வமான அறிஞர் என்பதையும் தெரிந்து கொள்வதுதான் உண்மையில் நாட்டுக்கு லாபம். பதினைந்து ஆண்டுகளுக்கு முன்பே அவருடைய வரலாற்றை ஆராய்ந்து நமது சிவாஜியில் தொடர்ச்சியாக இரண்டு ஆண்டுகளுக்குமேல் வாரந்தோறும் பல உண்மைகள் வெளியிடப்பட்டன. பின்னர் அவை சுருக்கித் தொகுக்கப்பட்டு, உயர்நிலைப் பள்ளி மாணவர்கள் படித்துப் பயன்படும் பொருட்டு "நான் கண்ட உலகம்" - "தொழில் மன்னர்" என்ற இரண்டு சிறு நூல்கள் நம்மால் வெளியிடப்பட்டன. பல மாவட்டங்களில் இவ்விரண்டு நூல்களும் பாட புத்தகமாகவும் இருந்தன.

அதற்கு முன்னால் நீல்கன் பெருமாள் என்ற ஆங்கில ஆசிரியர் நாயுடு அவர்களின் வரலாற்றை ஆங்கில நூலாக ஒரு அளவு எழுதியிருக்கிறார். நான்கண்ட உலகம் என்ற வெளியீட்டைப்பார்த்த பேராசிரியர் 'கல்கி' அந்த நூலைப் பற்றிய குறிப்புடன், நாயுடு அவர்களின் அற்புதமான வாழ்க்கையைப் பற்றி ஒரு உப தலையங்கமே எழுதி

தேசியக் கனவு

வெளியிட்டார். பின்னுல் ஆனந்தவிகடன், நாயுடு அவர்களின் சிறப்பை உணர்ந்து அவ்வப்போது குறிப்புக்களும் எழுதியதுடன், சென்ற மாதம் "சபாஷ் ஜி. டி. நாயுடு" என்ற தலையங்கமும் தீட்டிச் சிறப்பித்தது. நாயுடு அவர்களுடன் நட்புரிமை பூண்ட அறிஞர் ஈ. ஆர். கோவிந்தன் அவர்களின் "பிரீ இந்தியா" அடிக்கடி செய்திகளும் கட்டுரைகளும் வெளியிட்டு வந்திருக்கிறது. தமிழகத்தில் விடுதலையும், வடக்கே பிளிட்ஸ் போன்ற பத்திரிகைகளும் ஜி. டி. நாயுடு அவர்களின் சாதனைகளைப் பற்றி எழுதி வந்துள்ளன.

நாயுடு அவர்களின் சிறப்பை நாடு இப்பொழுது நன்கு உணரத் தொடங்கியிருப்பதைக் கண்டு நாம் அளவற்ற மகிழ்ச்சியும் பெருமையும் அடைகிருேம்.

பாதுகாப்பு நிதியளிப்பு விழாவில் நாயுடு அவர்கள் ஆற்றிய சொற்பொழிவின் சுருக்கம் இங்கு தமிழில் தரப்படுகிறது.

★

அறிமுகம்

"இன்றைய பிரதான விருந்தினர்களை அறிமுகம் செய்விக்கும் சம்பிரதாயமான காரியத்தை முன்னிட்டு நான் நீண்டதொரு சொற்பொழிவாற்றப் போவதில்லை. கேரள கவர்னர் வி. வி. கிரி, நமது முதலமைச்சர் காமராஜர் – இவ்விருவரையும் அறியாதார் ஒருவர்கூட இங்கு இல்லை என்பதை நான் அறிவேன்.

ஆறரை ஆண்டுகளுக்கு முன்னதாக, பொள்ளாச்சி சாலையில் "கார்பன் இங்க் தொழிற்சாலை"யைத் திறந்துவைக்க நமது முதலமைச்சர் காமராஜர் இங்கு எழுந்தருளியிருந்தார். இப்பொழுது அந்தத் தொழிற்சாலை நன்கு நடைபெற்று வருகிறது.

அப்பொழுது இங்குள்ள பொது மக்களுக்கும் அரசாங்கத்துக்கும் பல புதிய தொழிற்சாலைகளை அமைக்க வேண்டுமென்ற பேரார்வம் காணப்பட்டது.

நமது முதலமைச்சர் தலைமையில் செயல்படும் மாநில அமைச்சர்களும் தங்களால் இயன்ற அளவு தொழில் துறையில் ஊக்கங் காட்டி, புதிய தொழில்கள், அபிவிருத்தித் திட்டங்கள், தொழில் பண்ணைகள், கூட்டுறவு ஸ்தாபனங்கள், உயர்நிலைப்பள்ளிகள், தொழிற் பள்ளிகள், கலை நுட்பப் பள்ளிகள், பொறி இயல் கல்லூரிகள், கலைக் கல்லூரிகள், மருத்துவர் கல்லூரிகள், விவசாயக் கலைக் கூடங்கள் என்றெல்லாம் பெருவாரியாக அமைத்துத் தொழில் வளர்ச்சிக்கு உதவி வருகிருர்கள்.

நாட்டின் வளர்ச்சிக்கும் நல்வாழ்வுக்கும் வேண்டிய ஒவ்வொரு முயற்சியிலும் அவர்கள் இப்பொழுது நல்ல அக்கரை காட்டி உதவி வருகின்றனர். அதிலும் நமது முதலமைச்சர் புதிய பள்ளிகளைத் திறப்பதிலும், பகலுணவு வழங்கி, உயர் நிலைப்பள்ளி வகுப்பு வரையில் எல்லா மாணவர்க்கும் இலவசக் கல்வி தருவதில் அளவிறந்த ஊக்கமுடையவராயிருக்கிருர்.

தொழில் நுட்பக் கல்வி

குறிப்பாக, விவசாயப் பயிற்சி, ஆராய்ச்சிக் கல்விக்கான நிறுவனங்களையும், பொறி இயல் பள்ளிகளையும் அதிகமாக அமைப்பதில் முதலமைச்சர் கொண்டுள்ள ஆர்வம் குறிப்பிடத் தக்கதாக இருக்கிறது. இந்த ஆர்வம் நம்முடைய நாட்டு

பள்ளித் தலைவர்களான புனித அன்னையரிடம் நன்கொடைப் பஸ்கள் சம்பந்தப்பட்ட பத்திரங்களை முதலமைச்சர் வழங்குகிருர்.

மக்களுக்கு ஒரு வரப்பிரசாதமென்பதில் சந்தேக மில்லை. இவையெல்லாம் நமக்கு வேண்டிய அடிப்படையான தேவைகள். இந்தத் துறை களில் செலவிடப்படும் பொருளும் சக்தியும் நிச்சயம் பயன்தரக் கூடியவையாகும். ஆனால் தொழில் துறைக் கல்வி முயற்சிகள் தவிர ஏனையவை எது வும் எதிர்பார்க்கும் பலனைத் தரக்கூடியவையல்ல வென்பதைக் குறிப்பிட வேண்டும்.

சீன ஆக்கிரமிப்பின் காரணமாக எழுந்துள்ள இந்த நெருக்கடி காலத்தில் நம் எல்லோருடைய கவனமும் உடனடியான அவசரத் தேவைக்கான காரியங்களைச் செய்வதிலேயே ஈடுபட்டிருக்கிறது. இவற்றில் ஒன்று, தொழில் நுட்பம், விஞ்ஞானம் ஆகிய துறையில் நமது இளைஞர்களுக்கு மிகக் குறுகிய காலத்தில் அறிவு வளர்ச்சி உண்டாகுமாறு செய்வதாகும். அடுத்தது, இன்றியமையாத தேவைப் பொருள்கள் வீணாகாமல் தடுப்பது முக் கியமாக இருக்கிறது. பின்னர் தான் பாதுகாப்புக் கான வசதி வாய்ப்புக்களையும் நிதிகளையும் சேமிக் கும் காரியமாக இருக்க முடியும்.

ஏதோ என்னால் முடிந்த அளவில் இந்த அத் தியாவசியமான துறைகளில் நான் பாடுபட்டு வந்த போதிலும், நமது முதலமைச்சர், கேரள கவர்னர் மற்றுமுள்ளோர் மேற்கொண்டுள்ள பிரம்மாண்ட மான முயற்சிகளுக்கு முன்பு எனது முயற்சியும் உழைப்பும் சாதாரணமானவையேயாகும்.

இங்கு, ஆறு வார காலத்திற்குள் மாணவர் களுக்கு மோட்டார், ரேடியோ இரண்டு கலைகளி லும் மிகச்சிறந்த நேரிடைப் பயிற்சியைக்கொடுத்து வருகிறேன். இன்றைய சூழ்நிலையில் இது மிகவும் பயன்படக் கூடிய ஒரு காரியம். நம்முடைய நாட் டில் பற்பல அதிகாரிகள் இதுபோன்ற பயிற்சிகளை மாணவர்களுக்களிக்க முயன்று கொண்டிருக்கிறார் கள் என்றாலும் அவையெல்லாம் இன்னமும் ஏட் டளவில் திட்டங்களாகவே இருந்து வருகின்றன. எனவே இத்திட்டங்களெல்லாம் எப்படி, எங்கு, எம்முறையில், எந்த அளவு நிறைவேறப் போகின் றன என்பதை அறிய முடியவில்லை.

மேலும், விரயமாகும் விஷயங்களைப் பற்றியும் குறிப்பிட வேண்டியிருக்கிறது. எவ்வளவோ விஷயங்களில் பற்பல கட்டுதிட்டங்கள் அமுலாக் கப்பட்டு வந்த போதிலும் கூட, இன்னமும் பல அருமையான விலையுயர்ந்த பொருள்கள் முறை யாகவும் சிக்கனமாகவும் பயன்படுத்தப் படாமல் இருந்து வருவதுடன் பல வகையிலும் அவை வீணடிக்கவும் படுகின்றன. மாதிரிக்கு ஒன்றை எடுத்துக் காட்டுகிறேன். மோட்டார் பஸ்களையும், கார்களையும் நாம் உற்பத்தி செய்து வருகிறோம்.

ஆனால் அவற்றிற்கான சில பாகங்களை வெளி யிலிருந்து தருவிப்பதற்காக நமது நாணயச் செலா வணியில் பெரும் தொகையைச் செலவிடுகிறோம். நமது வெளி நாணயச் செலாவணிச் சக்தியைச் செலவிட்டு இப்படி நாம் இறக்குமதி செய்து கொண்டிருக்கும் போது, அத்தகைய பொருள்களை மிகுந்த கவனத்துடனும் சிக்கனமாகவும் இங்கே அத்தியாவசியமாக மட்டும் பயன்படுத்த வேண்டாமா?

பஸ்களில் சேதாரம்

பஸ் சர்வீஸ்களில் ஐந்தாறு ஆண்டுகளுக்கு முறை வண்டிகளை மாற்றுகிறோம். இதற்கும், தேய்மானத்திற்கும், அபிவிருத்திக்குமாக வருமான வரிக் கழிவுச் சலுகையால் நிறைந்த தொகை மிச்சமாகிறது. பழைய வண்டிகளுக்குப் பதிலாகப் புதிய வண்டிகளை வாங்குவதன் காரணமாக நமது தேசீயச் செல்வத்தில் நாணயச் செலாவணி இருப் பிலிருந்து ஓரளவு வெளி நாடுகளுக்குப் போகிறது. அத்துடன் நிறுத்தப்பட்ட வண்டிகள் சும்மா இருக்கின்றன. இதனாலும் நமக்கு நமது செல்வம் வீணாகிறது. இந்த வகையில் நாம் எவ்வளவு லாபத்தை அடைந்திருக்கக் கூடுமென்பதை நிரூ பிப்பதற்காக, பங்களூர், ஐதராபாத், சென்னை ஆகிய ஊர்களிலிருந்து பழைய வண்டிகள் சில வற்றை ஏலத்தில் எடுத்தேன்.

அவற்றைப் பழுது பார்த்துச் செப்பனிட்டேன், புதுப்பித்தேன். அந்த வண்டிகள் யாவும் நான்கு ஆண்டுகளுக்கு மேலாக ஒரு தொந்தரவு மின்றி நன்றாக ஓடிக்கொண்டிருக்கின்றன. புதுப்பிக்கப் பட்டு உபயோகத்திலிருந்துவரும் இந்த வண்டிகள், புதிய வண்டிகளைப் போலவும், இன்னும் அதிக நன்றாகவும் கூட வேலை செய்கின்றன. இந்த உண்மையை உணர அதிகாரிகள் மறுக்கிறார்கள்.

எனவே இப்படிப் பயன்படுத்துவதற்கு அவர்களு டைய அனுமதியைப் பெற முடியாமல் போகிறது. காரணம் இது பற்றிய அடிப்படை உண்மைகள் அவர்களுக்குத் தெரியாதது தான்.

இப்படிப் புதுப்பிக்கப்பட்ட வண்டிகள் தொ டர்ந்து பல ஆண்டுகள் உழைத்த பிறகு அவற்றை தொழில் உழைப்பாளர் நலச் சங்கமாகிய ILWA லிமிடெட்டுக்கு பெயரளவில் ஒரு விலை வைத்துக் கொடுக்கப்பட்டு விட்டன.

கல்வி மானியம்

பல கல்விச் சாலைகள் தங்கள் மாணவர்களின் பொருட்டு வாகன வசதி செய்ய வேண்டிய அவசி யத்தில் இருக்கின்றன. புதிய பஸ்களை வாங்கிப் பயன்படுத்த எண்ணினால் வண்டி ஒன்றுக்கு 50 ஆயிரமும் அதற்கு மேலும்கூட ஆகலாம். எனவே இத்தகைய பள்ளிகளின் தேவைக்கு உதவும் பொருட்டு பஸ் ஒன்றுக்கு 5 ஆயிர ரூபாய் வீதம் கூடு அமைக்கும் செலவிற்காகச் செலுத்தும்படி கேட்டேன். ILWA ஸ்தாபனத்திடம் உள்ள

பழைய வண்டிகளுக்குக் கூடு அமைத்துப் புதுப்பித்தபின் அவற்றை அந்தந்தப் பள்ளிகளின் உபயோகத்திற்காக வழங்கியிருக்கிறேன்.

இப்படி வாங்கிய ஐயாயிரத்தையும் கூட மறுபடியும் அரசாங்கக் கடன் பத்திரங்களில் முதலீடு செய்து அதன் வட்டி வருமானத்தைக் கொண்டு, குடும்பக் கலை பயிலும் மாணவர்களுக்குக் கல்வி மானியமாக வழங்க வகை செய்து வைத்திருக்கிறேன்.

இந்த அடிப்படையில் 1952ல் 6 பஸ்கள் வழங்கப்பட்டன. அவற்றில் இரண்டைத்தான் இப்பால் மாற்றியிருக்கிறார்களே தவிர, பாக்கி நான்கு பஸ்களும் இன்னமும் அந்தந்தப் பள்ளிகளில் பத்து வருடங்களுக்கு மேலாகவும் நன்றாக ஓடிக்கொண்டிருக்கின்றன.

கவர்னர் கிரி, கண்ணப்பர், முதலமைச்சர், ஜி. டி. நாயுடு மற்றும் நன்கொடை பெறும் இரண்டு பெண் பள்ளிகளின் புனித அன்னையர்.

இரண்டாண்டுகளுக்கு முன்பு மறுபடியும் இரண்டு பஸ்கள் இப்படிப் பள்ளிக் கூடங்களுக்குக் கொடுத்தேன். மறுபடியும் இப்பொழுது இரண்டு பஸ்களைத் தயாரித்து, ஒன்றைத் திருச்சி அர்ச் சூசையப்பர் ஆங்கிலோ — இந்தியப் பெண்கள் உயர்நிலைப் பள்ளிக்கும் மற்றொன்றை, தாம்பரத்திலுள்ள கிரைஸ்ட் கிங்க்கான்வெண்டுக்கும் வழங்குகிறேன்.

இந்தப் பஸ்களுக்காக இந்தப் பள்ளிகள் செலுத்திய தொகையை முதலீடு செய்து வரும் வட்டித் தொகையிலிருந்து மாணவிகளுக்கான உபகாரச் சம்பளங்கள் ஒவ்வொரு பாடசாலைக்கும் இரண்டு வீதம் மொத்தம் நான்கு மான்யங்கள் நிர்ணயிக்கப் பட்டிருக்கின்றன. இந்த நான்கு உபகாரச் சம்பளங்களும், டாக்டர் சுப்பராயன், சர். பி. டி. ராஜன், காமராஜ் நாடார் மற்றும் பி. கோபால் ரெட்டி ஆகிய நான்கு பெருந்தலைவர்கள் பேராலும் வழங்கப்பட வேண்டியவையாகும்.

மேலே குறிப்பிட்டபடி இறுதியாகப் பாதுகாப்பு நிதி பற்றிய விஷயம் வருகிறது. மத்திய வருவாய்த் துறையிலிருக்கும் பாதுகாப்பிலாகாவினருக்கும் சில யோசனைகள் தெரிவித்திருந்தேன். இங்கே சுமார் 25 தொழிற்சாலைகளிருக்கின்றன. ஜர்மனியிலுள்ள எனது நண்பர் ஒருவர், பாதுகாப்பு ராணுவத் தேவைகளுக்கான பொருள்களை உற்பத்தி செய்வதில் அனுபவமிக்க பல பொறியியல் வல்லுனர்களை இங்கு அனுப்பி உதவுவதாக அன்புடன் வாக்களித்துள்ளார்.

அவர்களுடன் நானும் ஒத்துழைப்பதாகவும், இந்த 25 தொழிற்சாலைகளில் உள்ள ஆள்பலம் முழுவதையும் பாதுகாப்புக் காரியங்களுக்கான பொருள்களைத் தயாரிப்பதற்கு உபயோகப்படுத்துவதாகவும் அதில் வாக்களித்திருந்தேன். இன்னமும் அதற்கு விடை வந்து கொண்டிருக்கிறது. மறுபடியும் அவர்களுக்கு அனுப்பிய நினைவுக் குறிப்புக்கும் யாதொரு எதிரொலியும் இல்லை. இந்தக் கடிதப் போக்கு வரத்துக்களைப் பார்வையிட்ட இன்றைய பிரதம விருந்தினரும் கேரள கவர்னருமான வி. வி. கிரி அவர்கள் தாமே பாதுகாப்பு இலாகாவுக்கு இதுபற்றி எழுதினர். வரப்பெற்றோம் என்ற விடை மட்டும் வந்தது. அதைத் தொடர்ந்து சம்பந்தா சம்பந்தமில்லாமல் எழுதப்பட்ட ஒரு கடிதமும் எனக்குக் கிடைத்தது. இந்த விஷயம் இத்துடன் நிற்கிறது. மற்றும் பெரும் நிதி சேர்ப்பதற்குரிய வழி துறைகளை விளக்கி மத்திய வருவாய்த் துறைக்கு நான் ஆலோசனை கூறி எழுதிய கடிதமும் கவனிக்கப்படவில்லை.

ஆயினும் இப்பொழுது என்னளவில் இரண்டரை லட்சரூபாய் பாது காப்பு நிதிக்கு வழங்குகிறேன். நிதியை முதலமைச்சரிடம் வழங்கும்படி கேரள கவர்னர் அவர்களையும், இந்த இரண்டு பஸ்களையும் அந்தந்தப் பாடசாலை அதிபர்களுக்கு வழங்குமாறு முதலமைச்சர் அவர்களையும் கேட்டுக்கொள்ளுகிறேன். ★

நாட்டின் தேவைக்கு உங்கள் சேமிப்பு தேவை.

அதிசய உரம்

பாக்டம்பாஸ்
(FACTAMFOS)
என்கிற

யானை மார்க்

ஆல்வாய் அமோபாஸ்

நைட்ரஜன் 16%, பாஸ்பாரிக் அமிலம் 20% விகிதத்தில் அமைந்தது.

விசேஷ அம்சங்கள்

★ பாக்டம்பரஸ் தாவர உணவு ஆகிய நைட்ரஜனும் பாஸ்பாரிக் அமிலமும் தகுந்த அளவில் கலந்துள்ள சம சீரான ஒரு கூட்டு உரம். நெல் பயிருக்கு ஏற்றது.

★ பாக்டம்பாஸ் 1 டன் அளவின் சக்தி, 4 டன் சல் பேட்டும், $1\frac{1}{4}$ டன் சூபர் பாஸ்பேட்டும் கலவை செய்யப்பட்ட உரத்தின் சமம். ஆதலால் சிரமம் இல்லை. சிலவும் சிக்கனம்.

★ பாக்டம்பாஸ் தூவுவதற்கு ஏற்றது. உரமிடும் போது காற்றடித்தாலும் சேதம் ஏற்படாது.

★ பாக்டம்பாஸ் நீண்ட காலம் சேமித்து உபயோகிக்கக்கூடிய உரம்.

★ பாக்டம்பாஸ் நிலத்தில் ஆழமாகவும், துரிதமாகவும் ஊடுருவிச் சென்று இளம் பயிர்களை ஊக்குவித்து அமோக வளர்ச்சியை உண்டுபண்ணுகிறது.

தயாரிப்பாளர்கள்:

பர்டிலைசர்ஸ் & கெமிகல்ஸ் திருவிதாங்கூர் லிட்,

பதிவு பெற்ற காரியாலயம்: ஏலூர்.

உத்யோகமண்டல் போஸ்ட், கேரள ராஜ்யம்.

கூட்டுறவில் தொழில் வளர்ச்சி

கனம் அமைச்சர்: நல்லசேனாபதி சர்க்கரை மன்றாடியார்.

★

உழவும் தொழிலும் ஒரு நாட்டின் பொருளாதார வளத்திற்கு அடிப்படைகளாகும். ஒன்று செழித்து, மற்றொன்று வாட்டமுற்றால், பயன் விளையாது. உழவும், தொழிலும் ஒன்றுக்கொன்று ஆதரவாகச் செழித்து வளர்ந்தால்தான், மக்கள் நல்வாழ்வு வாழ முடியும்.

நம் நாடு உழவுத் தொழிலை அடிப்படையாகக் கொண்டது. மக்களில் நூற்றுக்கு எழுபது பேர் கிராமங்களில் வாழ்கின்றனர். அவர்கள் உழவை நம்பியுள்ளவர்கள். வேளாண்மை வளர்ச்சியோடு தொழில் அபிவிருத்தியும் பெருக வேண்டும். அப்பொழுதுதான் நாட்டின் பொருளாதாரம் சீராக வளர்ச்சியடையும். எனவே, நாடு விடுதலை பெற்றதும், உழவு, தொழில் இவற்றின் வளர்ச்சியில் பெரிதும் கவனம் செலுத்தினோம்.

தொழில் வளர்ச்சி என்ற பெயரில் பெருந்தொழில்களையும், கனரகத் தொழில்களையும் நிறுவினால் மட்டும் போதாது. கிராமங்களில் ஆதரிப்பாரற்று, நசிந்து கொண்டிருந்த குடிசைத் தொழில்களுக்கும், சிறு தொழில்களுக்கும், புத்துயிர் அளிக்க வேண்டிய பொறுப்பும் நமக்கு இருந்தது. வேளாண்மை இல்லாத காலங்களில் வேலை வாய்ப்பு அற்றவர்களுக்கும் வேலை தேடித்தரவேண்டும். பரம்பரை பரம்பரையாகச் செய்யப்பட்டுவந்த கலை நுணுக்கத் தொழில்களைக் காக்க வேண்டிய கடமையும் முன் நின்றது. இத்தகு நிலையில் சிறு தொழில்களை வளர்க்கவும், மக்கள் அனைவருக்கும் - குறிப்பாக ஏழை மக்களுக்குத் தொழில் வாய்ப்புக்கள் பெருகவும் திட்டங்கள் வகுக்கப்பட்டன. இத்திட்டங்களின் பயன் பெரும்பாலான மக்களுக்குக் கிடைக்கவேண்டும், அனைவருக்கும் வசதியான வாழ்க்கை கிடைக்க வேண்டும் என்பதே நமது லட்சியம். ஆகையினால், இத்தொழில்களில் பெரும்பான்மையானவை கூட்டுறவு அடிப்படையில் அமைக்கப்பட்டன.

கூட்டுறவு என்பது, மக்கள் அனைவரும் சமுதாய நன்மைக்காகச் சேர்ந்து வாழ்வதாகும். ஒருவர் பலருக்காகவும், பலர் ஒருவருக்காகவும் உழைக்கின்றனர். இதனால், ஒருவர் உழைப்பை இன்னொருவர் அனுபவிப்பது என்ற நிலை இல்லை.

எளிய மக்கள் வாழ்க்கையில் முன்னேற இதைவிடச் சிறந்த சாதனம் இல்லை. ஆகையினால், சிறு தொழில்கள் எல்லாவற்றுக்கும் கூட்டுறவு அமைப்புக்களை அரசாங்கம் ஏற்படுத்தியுள்ளது. கூட்டுறவுச் சங்க அங்கத்தினர்களுக்குப் பயிற்சியளித்தும், மூலதனக் கடன், மானியம் ஆகியவை கொடுத்தும், தொழில் நுட்ப அலுவலாளர்களை உதவியும் இயன்ற வழிகளிலெல்லாம் அரசாங்கம் கைகொடுத்து உதவி வருகிறது.

கடந்த பதினைந்து ஆண்டுகளில் கூட்டுறவு உற்றுழி உதவித் தொழில்களை வளர்த்து வந்துள்ளது. முதல், இரண்டாம் ஐந்தாண்டுத் திட்டங்களின் கீழ் நாம் செய்து முடித்துள்ள கூட்டுறவுப் பணிகள் இன்று நல்ல பயனைக் கொடுத்து வருகின்றன. கிராமங்களில் கைக்குத்தலரிசித் தொழில், எண்ணெய் ஆட்டுதல், தோல் பொருள்கள் செய்தல், தீக்குச்சி தயாரித்தல், மண்பாண்டத் தொழில், காகிதம் தயாரித்தல், சுண்ணும்பு, செங்கல் தயாரித்தல் முதலிய பல்வேறு கிராமத் தொழில்கள் கூட்டுறவு முறையால்தான் இன்று பொலிவு பெற்றிருக்கின்றன. இவற்றின் வளர்ச்சிக்காகத் தமிழ் நாடு கதர் — கிராமத் தொழில் போர்டு நற்பணியாற்றுகிறது.

கிராமத் தொழில்களின் வளர்ச்சிக்காகத் தொழில் கூட்டுறவுச் சங்கங்கள் அமைக்கப்பட்டுள்ளன. அவற்றின் பங்கு மூலதனம், நடைமுறை மூலதனம், இயந்திரங்கள் வாங்க ஆகும் செலவு ஆகியவற்றிற்காகக் கடனும் மானியமும் அளிக்கப்படுகின்றன. பல்வேறு தொழில் நிபுணர்களின் சேவையும் தொழிற் கூட்டுறவுச் சங்கங்களுக்கு அளிக்கப்படுகிறது. இந்தச் சங்கங்கள் அங்கத்தினர்களுக்கு வேலை வாய்ப்பு அளிப்பதோடு, கிராமங்களில் கிடைக்கும் மூலப் பொருள்களைக் கொண்டு பல்வேறு தொழில்களை அபிவிருத்தி செய்யவும் உதவுகின்றன. தொழில் கூட்டுறவுச் சங்கங்களுக்குத் தமிழ்நாடு கதர்-கிராமத் தொழில்கள் போர்டு நிதி உதவி செய்கிறது. சில சமயங்களில் மத்திய கூட்டுறவுப் பாங்குகளும் உதவுகின்றன. மாநில, மத்திய கூட்டுறவுப் பாங்குகள் மூலம் நிதி அளிக்கவும் கதர் கிராமத் தொழில்கள் போர்டு எண்ணியுள்ளது.

கூட்டுறவுச் சங்கங்கள், உற்பத்திப் பொருள்களை விற்பனை செய்யவும் வழி செய்கின்றன. ஒரு மாநில பனைவெல்லத் தொழில் பெடரேஷனும், நான்கு மாவட்டப் பனைவெல்லத் தொழில் பெட

ரேஷன்களும் கூட்டுறவுச் சங்கங்களில் உற்பத்தியாகும் பனைவெல்லப் பொருள்களின் விற்பனைக்கு உதவுகின்றன. இதே மாதிரி எண்ணெய் தயாரிப்பாளருக்காக இரண்டு பெடரேஷன்கள் அமைப்பது பற்றி யோசிக்கப்பட்டு வருகிறது.

தமிழ் நாட்டின் கலை, பண்பாடு ஆகியவற்றைப் பிரதிபலிக்கும் கைத்திறத் தொழில்களின் வளர்ச்சிக்கும் கூட்டுறவு அரும்பாடுபட்டு வருகிறது. சுமார் 123 கைத்திறத் தொழில் கூட்டுறவுச் சங்கங்கள் உள்ளன. உறுப்பினர் எண்ணிக்கை 6898. பங்கு மூலதனம் ரூ. 283 லட்சமாகும். கிராமப்புறங்களில் முக்கியமான தொழிலாக விளங்குவது கயிறு தொழில். அந்தத் தொழில் செய்வோரின் நிலை இன்று உயர்ந்திருக்கிறது. கயிறு தொழிலுக்காக இரண்டாம் ஐந்தாண்டுத் திட்டத்தின் கீழ் ரூ. 839 லட்சம் செலவிடப்பட்டது. மூன்றாம் திட்டத்தில் முதலாண்டில் மட்டும் ரூ. 126 லட்சம் செலவாயிற்று. தற்போது சுமார் 33 சங்கங்கள் உள்ளன. அவற்றில் 2235 அங்கத்தினர்கள் உள்ளனர்.

சிறுதொழில்களுக்கான கூட்டுறவுகள் இரண்டாம் திட்டக் காலத்தில்தான் மிகுதியாக ஏற்பட்டன. ஏறக்குறைய 346 சங்கங்கள் இருந்தன. இவற்றின் அங்கத்தினர்கள் எண்ணிக்கை 24,158. இரண்டாம் திட்டக் காலத்தில் ரூ. 21.49 லட்சம் செலவிடப்பட்டது. தமிழ்நாடு தொழில் கூட்டுறவுப் பாங்கு, தமிழ்நாடு சிறுதொழில் கூட்டுறவுச் சங்கம், திருச்சி கூட்டுறவு உலோக உருட்டாலை, மற்ற 5 கூட்டுறவுகள் ஆகிய தொழில் கூட்டுறவுச் சங்கங்களில் அரசாங்கம் ரூ. 8 லட்சம் முதலீடு செய்திருக்கிறது.

சிறுதொழில் கூட்டுறவு அபிவிருத்தியில் சிறந்த சாதனை, தொழில் கூட்டுறவுப் பண்ணைகள் நிறுவியது ஆகும். இவற்றால் சிறு தொழிலதிபர்கள் தங்கள் தொழில் முயற்சிகளில் முன்னேற முடிகிறது. தொழில் கூட்டுறவு வரலாற்றில் குறிப்பிடத்தக்க ஒன்றாகத் தமிழ்நாடு தொழில் கூட்டுறவுப் பாங்கு நிறுவப்பட்டது. இந்தப் பாங்கு தனிப்பட்ட சிறு தொழில் அதிபர்களுக்கும், தொழில் கூட்டுறவுகளுக்கும் நிதி உதவி செய்கிறது. திருச்சியில் செயற்கை வைரம் செதுக்குவோருக்காகத் தொழில் கூட்டுறவுச் சங்கம் நிறுவப்பட்டது மற்றொரு சாதனையாகும். இது மூன்றாவது திட்டத்தின்கீழ், இந்தியாவிலேயே முதன்முதலாக நிறுவப்பட்ட சங்கமாகும். கூட்டுறவினால் தேயிலைத் தொழில் செழிக்கும் வகையில் கோத்தகிரியில் ஒன்றும், குந்தாவில் ஒன்றும் ஆக இரு தேயிலைக் கூட்டுறவுத் தொழிற்சாலைகள் நிறுவப்பட்டுள்ளன.

கூட்டுறவின் மூலம் வளர்ச்சி பெற்றுவரும் இன்னொரு முக்கியமான தொழில் கைத்தறித் தொழிலாகும். கைத்தறித் தொழிலை நம்பித் தமிழ் நாட்டில் 20 லட்சம் மக்கள் வாழ்கின்றனர். இந்தத் தொழிலின் அபிவிருத்திக்காக இரண்டாம் திட்டத்தில் ரூ. 712.42 லட்சம் செலவிடப்பட்டது. மொத்தமுள்ள 4.66 லட்சம் தறிகளில் 2 லட்சம் தறிகள் கூட்டுறவின்கீழ்க் கொண்டுவரப்பட்டன. மூன்றாம் திட்டத்தில் மேலும் ஒரு லட்சம் தறிகளைக் கூட்டுறவின்கீழ்க் கொண்டுவரத் திட்டமிடப்பட்டுள்ளது. நெசவாளர் சங்கங்களுக்கான நடைமுறை மூலதனத்தை இந்திய ரிசர்வ் பாங்கு கொடுத்துதவுகிறது. அதற்கு மாநில அரசாங்கம் உத்தரவாதம் அளிக்கிறது. நெசவாளர்களுக்கு நியாய விலையில் நூல் கிடைக்கச் செய்வதற்காகப் பேட்டை, ஸ்ரீவில்லிபுத்தூர், நாசரத் ஆகிய இடங்களில் மூன்று கூட்டுறவு நூற்பாலைகள் நிறுவப்பட்டிருக்கின்றன. ஒவ்வொரு மாவட்டத்திலும் ஒரு கூட்டுறவு நூற்பாலை நிறுவவேண்டும் என்பதே அரசாங்கத்தின் நோக்கம். அதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

இரண்டாவது திட்டக் காலத்தில் கூட்டுறவுத் துறையில் செங்கற்பட்டு, வட ஆர்க்காடு, கோவை மாவட்டங்களில் மூன்று சர்க்கரை ஆலைகள் நிறுவப்பட்டன. மூன்றாம் திட்டத்தில் 5 சர்க்கரை ஆலைகள் நிறுவத் திட்டமிடப்பட்டது. சேலம் கூட்டுறவுச் சர்க்கரை ஆலையும், கள்ளக்குறிச்சி கூட்டுறவுச் சர்க்கரை ஆலையும், மதுரை மாவட்டத்தில் தேசிய கூட்டுறவுச் சர்க்கரை ஆலையும் நிறுவப்பட்டு வருகின்றன. ஒவ்வொரு ஆலைக்கும் ரூ. 115 லட்சத்திலிருந்து ரூ. 150 லட்சம் வரை மூலதனச் செலவு பிடிக்கும். ஒவ்வொரு ஆலையிலும் தினம் 22 மணி நேரத்தில் சுமார் 1000 டன் கரும்பு பிழியப்படும். இதுவரை ஆரம்பிக்கப்பட்டுள்ள ஆலைகளின் செலுத்தப்பட்ட பங்கு மூலதனம் ரூ. 233.19 லட்சமாகும். இதில் அரசாங்க முதலீடு ரூ. 150 லட்சம்.

பல்வேறு தொழில் கூட்டுறவு நிறுவனங்களும் தமிழ்நாட்டின் தொழில் வளர்ச்சியில் அக்கறை கொண்டு பணியாற்றி வருகின்றன. இவற்றால் கிராமங்களிலும் நகரங்களிலும் தொழில் சிறந்த முறையில் வளர்ந்துள்ளது.

கூட்டுறவுப் பொது நலச் சமுதாயம் வேகமாக உருவாகி வருகிறது. இம்முயற்சியில் பொது மக்கள் அரசாங்கத்துடன் முழுவதுமாக ஒத்துழைக்க வேண்டும். அப்பொழுதுதான் விரைவில் சோஷலிச சமுதாயம் ஏற்பட்டு இந்திய மக்கள் அனைவரின் வாழ்க்கைத் தரம் நல்ல முறையில் உயரும். அதற்கான ஆக்க வேலைகளில் நாம் அனைவரும் ஈடுபடுவோமாக!.

கூட்டுறவில் பால் விநியோகம்

திரு. வி. பாலசுந்தரம், I. A. S.
தமிழ் நாடு கூட்டுறவு சங்கங்களின் பதிவாளர்.

★

அரசாங்கத் திட்டங்களில் விவசாயிகளின் முன்னேற்றத்திற்கு எப்பொழுதுமே முதலிடம் கொடுக்கப்படுகிறது. தமிழ் நாட்டில் பால் வினியோக கூட்டுறவு சங்கங்கள் ஆங்காங்கு அமைத்து அவைகள் மூலம் விவசாயிகளுக்கு ஒரு உப தொழில் ஏற்படுத்துவதுடன் கிராம நகர மக்களுக்கு சுத்தமான பால் நியாயமான விலைக்குக் கிடைக்கவும் நல்ல வழி ஏற்பட்டிருக்கிறது. இப்போது தமிழ் நாட்டில் அநேகமாய் எல்லா நகரங்களிலும் பெரிய பஞ்சாயத்துகளிலும் கூட்டுறவு பால் வினியோக சங்கங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

மக்களின் பால் தேவையில் சுமார் ஐந்தில் ஒரு பகுதியை இச்சங்கங்கள் மூலம் பூர்த்தி செய்யப் படுகின்றது. 30-6-1962 ல் தமிழகத்தில் 1222 கூட்டுறவு பால் வினியோக சங்கங்களும் 21 பால் வினியோக யூனியன்களும் இருந்தன. அவற்றின் அங்கத்தினர் தொகை 1,18,077. கூட்டுறவு பால் வினியோக சங்கங்கள் ஆங்காங்கு ஏற்படுத்த விண்ணப்பங்கள் வந்து கொண்டே இருக்கின்றன. ஆகையால் இச்சங்கங்களின் எண்ணிக்கையும் அங்கத்தினர் தொகையும் வருடாவருடம் அதிகரித்து வருகின்றது.

கூட்டுறவு பால் வினியோக முறையில் மிக முக்கியமான அம்சம் பொது இடத்தில் பால் கறப்பதாகும். சங்கத்தின் நிர்வாகஸ்தர்கள் அல்லது சிப்பந்திகளின் மேற்பார்வையில் அங்கத்தினர்கள் பாலைக் கறந்து கொடுக்கின்றனர். இதன் மூலம் சுத்தமான பால் சுகாதாரமான முறையில் சேகரிக்கப் படுகின்றது. அவ்வாறு சேகரிக்கப்பட்ட பால் பரிசோதனை செய்யப்பட்டு நகர மக்களுக்கு சீலிட்ட பெரிய பாத்திரங்களில் அல்லது கண்ணாடி புட்டிகளில் வழங்கப்படுகிறது. சங்கம், நேராகவோ அல்லது அது இணைக்கப்பட்ட பால் வினியோக யூனியன் மூலமாகவோ, பாலை பொது மக்களுக்கு வழங்குகின்றன.

தமிழ் நாட்டில் பால் உற்பத்தியை அதிகரிப்பதற்குக் கூட்டுறவு பால் வினியோக சங்க அங்கத்தினர்களுக்கு ஒரு ஆண்டிற்குள் சுலபமான தவணைகளில் திருப்பிச் செலுத்தக்கூடிய குறுகியகாலக் கடன்கள் அரசாங்கத்தால் வழங்கப்படுகின்றன. இக்கடன்களைக் கொண்டு அவர்கள் நல்ல கறவை மாடுகளை வாங்குகின்றனர். அரசாங்கமன்னியில் ரிசர்வ் பாங்கும் மத்திய கூட்டுறவு பாங்குகளும் கூட இக்கடன்களைக் கொடுக்கின்றன. 1962-63 ஆண்டில் மேற்படி கறவை மாடுகள் வாங்குவதற்காக கூட்டுறவு பால் வினியோக சங்கங்களுக்கு அரசாங்கம் ரூ. 14 இலட்சம் கொடுத்தது. இது தவிர, அதிக பால் தரக் கூடிய கறவை மாடுகளை வாங்குவதற்காகவும் பால் வினியோக சங்க அங்கத்தினர்களுக்கு மத்திய கால அல்லது மூன்று வருட காலக்கடனுக வழங்க, அரசாங்கம் பிரத்யேகமாய் ரூ. 4 லட்சம் கொடுத்தது. அரசாங்கத்தின் மேற்படி கடனுதவி அன்னியில் பால் வினியோக சங்கங்களுக்கு மத்திய கூட்டுறவு பாங்குகள் தங்கள் நிதியிலிருந்தோ அல்லது இந்திய ரிசர்வ் பாங்கிலிருந்து கிடைக்கும் நிதியிலிருந்தோ கடன்கள் வழங்குகின்றன. நமது மாகாணத்தில் 20 கால் நடை அபிவிருத்தி சங்கங்கள் இருக்கின்றன. இச்சங்கங்கள் நல்ல ஜாதி பொலிக் காளைகளை வைத்துப் பராமரித்து வருகின்றன. கூட்டுறவு பால் வினியோக சங்க அங்கத்தினர்களின் பசு எருமை இவைகள் இச்சங்கங்கள் மூலம் அபிவிருத்தியடைகின்றன.

பால் உற்பத்தி அதிகரிப்பது கறவை மாடுகளுக்கு கொடுக்கப்படும் தீனியைப் பொறுத்ததாகும். இதற்காக நமது நாட்டில் ஏழு கூட்டுறவு பால் வினியோக சங்கங்கள் கறவை மாடுதீனி தயாரிப்பு நிலையங்களை ஏற்படுத்தியுள்ளன. அரசாங்கம் இந்நிலையங்களுக்கு உதவி அளித்து வருகின்றது.

கறவை மாடுகளின் தேவையை அனுசரித்து நல்ல கலப்புத் தீனிகளை இந்த நிலையங்களில் தயாரித்து அங்கத்தினர்களுக்கு விற்கப்படுகிறது.

அரசாங்கத்தின் உதவியுடன், கூட்டுறவு பால் வினியோக சங்கங்கள் புல் வளர்க்கும் பண்ணைகளை ஏற்படுத்தி அங்கத்தினர்களின் கறவை மாடுகளுக்குத் தேவையான பசும்புல்லை வினியோகித்து வருகின்றன. தவிர, அரசாங்க உதவி பெற்று கூட்டுறவு பால் வினியோக சங்கங்கள் ஆங்காங்கு கறவை நின்ற மாடுகள் பராமரிப்பு பண்ணைகளை நடத்தி வருகின்றன. அங்கத்தினர்களின் கறவை நின்ற மாடுகள் இப்பண்ணைகளில் குறைந்த கட்டணத்திற்கு அடுத்த கன்று ஈனும்

வரையிலும் பராமரிக்கப்படுகின்றன. மேற்படி முறைகளால், கூட்டுறவு பால் வினியோக சங்கங்களின் மூலம் பால் உற்பத்தி நன்கு அதிகரித்துள்ளது.

கூட்டுறவு பால் வினியோக சங்கங்கள் பாலைப் பக்குவப்படுத்தி வினியோகம் செய்வதற்கு அரசாங்கம் பெருமளவில் உதவி புரிந்து வருகின்றது. இந்த உதவியின் மூலம், சென்னை, கொடைக்கானல், கோயம்புத்தூர் ஆகிய இடங்களிலுள்ள கூட்டுறவு பால் வினியோக யூனியன்கள் ''பாஸ்சுரை சேஷன்'' என்று சொல்லப்படும் பால் பக்குவப்படுத்தும் இயந்திரங்களை நிருவியுள்ளன. மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் மதுரை, திருச்சிராப்பள்ளி, தஞ்சாவூர் ஆகிய நகரங்களிலுள்ள கூட்டுறவு பால் வினியோக யூனியன்களில் இம்மாதிரி இயந்திர சாதனங்கள் அமைக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன.

மதுரை கூட்டுறவு பால் வினியோக யூனியனில் நிறுவப்படும் இயந்திரம் மணி ஒன்றுக்கு 1000 காலன் பாலைப் பக்குவம் செய்யும். இதை அமைப்பதற்கு சுமார் ரூ. 78 இலட்சங்கள் செலவாகும். அதில் சுமார் ரூ. 31 இலட்சங்கள் மதிப்புள்ள இயந்திரங்களை ஐக்கிய நாடு ஸ்தாபனம் வாங்கி உதவ முன் வந்துள்ளது.

கறவை மாடுகள் வாங்க கடன்கள் வழங்குவது, பால் பக்குவப் படுத்தும் இயந்திரங்கள் அமைப்பது, கறவை நின்ற மாடுகள் பராமரிப்பு பண்ணைகள் ஏற்படுத்துவது, புல் பண்ணைகள் ஆரம்பிப்பது இவைகளுக்காக இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் ரூ. 68·86 இலட்சங்கள் செலவிடப்பட்டது. இதனால் இரண்டாவது ஐந்தாண்டுத் திட்ட ஆரம்பத்தில் கூட்டுறவு சங்கங்களின் பால் உற்பத்தி தினம் ஒன்றுக்கு 39,000 பட்டணம் படியிலிருந்து திட்டத்தின் முடிவில் 63,000 பட்டணம் படியாக உயர்ந்தது.

மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் தமிழ்நாடு கூட்டுறவு பால் பண்ணைகளின் அபிவிருத்திக்காக ரூ. 141·75 இலட்சங்கள் ஒதுக்கப்பட்டுள்ளது. கூட்டுறவு பால் சங்க அங்கத்தினர்களுக்குக் கடன் வழங்குவது, மூன்று கூட்டுறவு பால் வினியோக யூனியன்களில் பால் பக்குவப்படுத்தும் யந்திரங்கள் அமைப்பது இப்பொழுது இருக்கும் கறவை நின்ற மாடுகள் பராமரிப்பு பண்ணைகளின் வசதிகளை அதிகரிப்பது, மேற்கொண்டு ஒரு புதிய பண்ணை அமைப்பது, கலப்புத் தீனி தயாரிப்பு நிலையங்கள் ஏற்படுத்துவது பசும்புல் பண்ணைகள் ஏற்படுத்துவது, வெண்ணெயும், பாலை படைகளும் தயாரிக்கும் இயந்திரங்களை நிறுவுதல் போன்ற காரியங்களுக்காக மேற்படி தொகையைச் செலவிடத் திட்டமிடப் பட்டிருக்கிறது.

பால் உற்பத்தித் தொழிலை ஹரிஜன மக்கள் தங்களது உப தொழிலாக மேற்கொள்ள அரசாங்கம் அவர்களுக்குக் கூட்டுறவு பால் சங்கங்களை அமைத்துக் கொடுத்து வருகின்றது. மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் இதற்காகப் பிரத்யேகச் சலுகைகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. ஹரிஜன அங்கத்தினர்கள் கறவை மாடுகள் வாங்கும் கிரையத்தில் பாதித் தொகை ரூ. 125க்கு மேற்படாமல் மான்யமாக வழங்கப்படுகிறது. மேலும், அவர்களுக்காக ஏற்படுத்தப்படும் பால் வினியோக சங்கங்களில் பங்குகள் எடுத்துக்கொண்டு அங்கத்தினர்களாகச் சேர்வதற்கு ஒவ்வொருவருக்கும் ரூ. 20 வரை ஒரு வருடத்தில் திருப்பிச் செலுத்தக் கூடிய வட்டியில்லாக் கடனாகக் கொடுக்கப்படுகிறது.

இச்சங்கங்களுக்கு பொதுக் கறவைக்காக கொட்டகை அமைக்க சங்கம் ஒன்றுக்கு ரூ. 4,000 வரையிலும், பாத்திரங்கள் வாங்க ரூ. 500-ம் சைக்கிள் வாங்க ரூ. 300-ம் மான்யமாக வழங்கப்படுகிறது.

இவ்வித சங்கங்களுக்கு முதல் ஆண்டில் கணக்கு எழுதுபவரை நியமிக்க ரூ. 360 மான்யமாக அளிக்கப்படுகிறது. இந்த வகைகளில் 1961-62 ஆண்டில் ஹரிஜனங்களுக்காக ஏற்படுத்தப்பட்ட கூட்டுறவு சங்கங்களுக்கு ரூ. 2.90 இலட்சங்கள் உதவியாக அளிக்கப்பட்டது. அதிகமான அளவில் இச்சங்கங்களை ஏற்படுத்தி ஹரிஜனங்களின் வாழ்க்கைத்தரம் முன்னேற்றமடைய 1962-63 ம் ஆண்டிலும் ரூ. 3,75 இலட்சங்கள் செலவிட ஏற்பாடு செய்யப்பட்டது.

தமிழ் நாட்டில் கூட்டுறவு பால் வினியோக சங்கங்களின் பால் உற்பத்தி இப்பொழுது 70,000 பட்டணம் படி அல்லது 1,40,000 லிட்டராக உயர்ந்திருக்கின்றது. மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டகாலத்தின் முடிவிற்குள் இதை 90,000 பட்டணம் படியாக (1,80,000 லிட்டராக) உயர்த்தத் திட்டமிடப்பட்டிருக்கிறது. இவ்வாறாக நம் தமிழகத்தில் பால் உற்பத்திப் பெருக்கத்தால் நாளடைவில் நம் மக்களின் தினசரி சராசரி பால் உட்கொள்ளும் அளவு 6 அவுன்சாக உயருமென்பதில் சந்தேகமில்லை.

நச்சுப் பொய்கை

— கே. நடராஜன்.

★

மலேயாவிலும், இன்னும் கீழை நாடுகளிலும் சுமார் முப்பதாண்டுகள் வாழ்ந்த காலத்தில், பல்வேறு தொழில்களில் ஈடுபட்ட, பலதரப்பட்ட சீனக்காரர்களுடன் பழகியிருக்கிறேன். அவர்களைப்பற்றி இரண்டாவது உலகப் போருக்கு முன்பே ஒரு குறிப்பு வரைந்திருந்தேன். இப்பால் அவர்களுடன் எனக்கு ஏற்பட்ட அனுபவங்கள் எனது பழைய கருத்துக்களில் அப்படியொன்றும் மாறுதல்களை ஏற்படுத்திவிடவில்லையாகையால், இன்றைய சூழ்நிலையிலும் அந்தக் குறிப்பு பயன்படக் கூடும் என்றே நம்புகிறேன்.

மலேயாவில் கிட்டத்தட்ட சரிபாதிக்கு மேலாக இருக்கிறார்கள் சீனர்கள். துணிந்து முன்னேறும் ஒரு சமூகத்தினர் அவர்கள். சீனக் காரன் காலடி வைக்காத ஒரு இடம் கூட மலேயாவில் கிடையாதென்று சொல்லி விடலாம். ஜன நடமாட்டமில்லாத பாகாங் காட்டுப் பகுதிகளில் ஒரு சீனன் தன் மனைவியுடன் தனியாக வாழ்ந்து வந்ததை நான் கண்டிருக்கிறேன். தானே நிலம் திருத்தி உருளைக் கிழங்கும் காய்கறிகளும் பயிர் செய்து பிழைத்தான். பன்றி மேய்ப்பதும் வாத்துக்களை வளர்ப்பதும் அவனுடைய உபதொழில்களாக இருந்தன. அங்கே ஒரு நதியின் உற்பத்தி ஸ்தானம் இருந்தது. பொறி இயல் துறையில் நான் அலுவல் பார்த்து வந்ததன் காரணமாக அங்கு ஆராய்ச்சி மேற்கொள்ளும் பொருட்டு சென்றிருந்தேன். அந்த நதியின் மணலில் பொன் கலந்திருந்தபடியால், மணலில் இருந்து பொன்னை அரித்தெடுப்பதில் நோக்கமாக அந்தச் சீனன் அந்த நிர்மானுஷ்யப் பிரதேசத்தில் குடியேறியிருந்தான். பதினைந்து கல் தொலைவில் இருந்த ஒரு நகருக்குச் சென்று தனக்கு வேண்டிய தேவைப் பொருள்களை அவன் வாங்கிவர வேண்டும். மூங்கில் கோலொன்றில் இருபுறமும் மூட்டை முடிச்சுக்களைக் கட்டித் தோளில் தொங்க விட்டுக்கொண்டு, அவன் நகரிலிருந்து காடு மேடுகள் கடந்து திரும்ப வேண்டும். எனினும் அவனுக்கு அது ஒரு பொருட்டில்லை. நல்ல கொழுத்த கடா அவன்.

சீனக் காரனுடைய சிறப்பு என்னவென்றால் இடத்திற்குத் தக்கபடி வளைந்து கொடுக்கிற இயல்புதான். வட்டிக் கடை வியாபாரியாக இருப்பதும், மூட்டை தூக்கிப் பிழைப்பதும் அவனுக்கு இரண்டும் ஒன்றுதான். சீனர்கள் இயல்பாக நல்ல உழைப்பாளிகள். மேஜையடியில் மாதச் சம்பளம் வாங்கிக் கொண்டு காமா சோமா வென்று காலந் தள்ளுகிற சங்கதியே அவர்களுக்குப் பிடிக்காது. பாடுபடுவதற்கேற்ற பலன் கிடைத்து அதனால் முன்னேறக் கூடுமானால் அதற்கான தொழிலை மேற்கொள்வதில் தான் சீனனுக்கு ஊக்கம் அதிகம். தம் அடிப்பதற்கான நேரம் தவிர மற்றப்படி ஒரு கணங் கூட வெறுமனே இருப்பதென்பது சீனனால் முடியாது. சதா எதையாவது முயன்று எதையாவது உற்பத்தி செய்து பொருளீட்டிக் கொண்டிருப்பான். எதைச் செய்தாலும் அதில் என்ன லாபம் கிடைக்குமென்பதில் தான் சீனக்காரன் மூளை வேலைசெய்யும். வியாபாரத்தில் சீனன் நிகரற்றவன். அதுவும் துணிந்தடித்து வியாபாரம் செய்யக்கூடிய சாதி அவனுடையது. அதிர்ஷ்ட தேவதையினிடத்தில் அபார பக்தியுடையவன் சீனன். அதிர்ஷ்டம் சதா எதிரே நின்று கண் காட்டுவதாக எண்ணி, அந்தப் பொன்மான் வேட்டையில் சளைக்காமல் முயற்சி செய்வான்.

கடை படுத்துவிட்டால் விலாசத்தை உடனே மாற்றிவிடுவான். வேறிடத்தில் கடை போடுவான். பழைய வியாபாரத்தை மூடி விட்டு, வாய்ப்பாகப் புதிதொன்று கிடைத்தால் அதைப் பிடித்துக் கொள்வான். அதிர்ஷ்ட தேவதையை எப்படியாவது லபக்கென்று பிடித்துக் கொள்ள சமயம் பார்த்திருப்பான். இது சீனனுடைய போக்கு. சூதாடி வெற்றி பெறுவதில் சீனர்களுக்கு ஒரே பைத்தியம். ஒரு மூச்சில் உள்ளதையெல்லாம் பணயம் வைத்து விடக் கூச மாட்டார்கள். அனைத்தும் போய்விட்டாலும் அலட்சியமாக இருப்பார்கள். போனால் போகட்டும் போடாதான். சென்றதைப் பற்றிச் சற்றும் சிந்தை செய்யாத பிறவிகள். என்ன முழுகிவிட்டது, இன்னும் பார்ப்போம் என்பது அவர்

கட்டுரையாளர் கே. நடராஜன் நமது வாசகர்களுக்குப் புதியவரல்லர். வடபோர்னியோவில், பொறிஞராக இருந்து ஓய்வு பெற்ற தமிழர். இவரது அரிய கட்டுரைகள் பலவற்றை முன்னர் நமது மலர்களில் வாசகர்கள் படித்து இன்புற்றிருக்கின்றனர். அவர் எழுதிய சீனர்களின் குணசித்திர விமர்சனம் இங்கே தமிழில் மொழிபெயர்த்துத் தரப்படுகிறது.

கள் வழி. கையில் காசு கிடைத்தால் உடனே சொந்த வியாபாரம். உள்ளது போய்விட்டால் இருக்கவே இருக்கிறது களைக் கொட்டு. தோட்டத்தைக் கொத்தப் போய்விடுவார்கள்.

சீனர்கள் சிநேகத்துக்கு மிகவும் இனியவர்கள், விருந்தளிப்பதில் உற்சாகமுள்ள கிரகஸ்தர்கள். ஆனுல் நட்போ, மரியாதையோ எதுவாயினும் அவர்களுடைய காரியத்தில் குறுக்கிடாமல் பார்த்துக் கொள்வதில் சமர்த்தர்கள். பெற்ற உதவிக்கு உடனே விலை கொடுத்துவிட்டுப் பிரிந்து விடுவார்கள். பிறகு நீயாரோ நானுரோ தான். தொடர்ந்து நன்றிக் கடன் பட்டிருப்பதெல்லாம் அவர்களுக்குப் பிடிக்காது. ஒரு உபகாரம் செய்தால் பதிலுக்கு ஒன்று செய்துவிட்டால் கணக்குத் தீர்ந்தது, அவ்வளவுதான். அதற்குமேல் அவர்களிடம் ஒன்றும் எதிர்பார்க்கக் கூடாது. சீனனுடைய நன்றியுணர்ச்சியின் அளவைக் காட்டக்கூடிய பின்வரும் செய்தி ரஸமாக இருக்கும்.

வழிப் போக்கனை ஒரு பணக்காரச் சீனனை வழியில் கொள்ளைக் கூட்டத்தார் வளைத்துக் கொண்டு அவனிடமுள்ளதையெல்லாம் பறித்துக் கொண்டார்கள். அந்தக் கொள்ளையர்களிடையே தனது பழைய வேலைக்காரன் ஒருவனும் இருப்பதை இந்தச் செல்வன் அடையாளம் கண்டு கொண்டான். அந்த வேலைக்காரனைத் தான் முன்பு எவ்வளவு பரிவுடன் நடத்தினுன் என்பதையும், வேலையை விட்டு விலகுமுன்புகூட அவன் கல்யாணத்துக்காகத் தான் நூறு டாலர் இனும் கொடுத்ததையும் நினைவூட்டி நீயுமா என்னைக் கொள்ளையடிப்பதில் சேர்ந்து கொண்டாய் என்று உரிமையுடன் கேட்டான் இந்தச் செல்வன். கொள்ளைக் காரனுன அந்தப் பழைய வேலைக்காரன் என்ன செய்தான் தெரியுமா? கொள்ளையிட்ட பணத்திலிருந்து ஒரு நூறு டாலரை எடுத்து அந்தப் பழைய எஜமானனிடம் எண்ணிக் கொடுத்து விட்டு 'இப்பொழுது நமக்குள் கணக்குத் தீர்ந்து விட்டது' என்றுனும். எப்படி நன்றிக் கடன்?

சாதாரணமாக, வாங்கின கடனைக் கொடுத்து விடவேண்டு மென்பதுதான் அவர்களுடைய கொள்கை. ஆனுல், ஒரு வியாபாரம் முறிந்து போகும்போது அத்துடன் அதுசம்பந்தமாக அவன் பட்டிருந்த கடன்களும் கூடவே தீர்ந்துபோய் விட்டதாகக் கொள்ளவேண்டும். பிறகு அவன் மற்ருெரு தொழிலோ வியாபாரமோ செய்து கோடீஸ்வரனுகி விட்டாலும் கூட, பழைய வியாபாரத்தில் இவனுக்குக் கடன் கொடுத்து நஷ்டப்பட்டவர்கள், இவனுடைய புதிய செல்வத்தை மோந்துபார்க்கக்கூட விடமாட்டான். வாழ்க்கை என்பது ஒரு விளையாட்டு. அதில் வெற்றியும் தோல்வியும் இரண்டுந்தான் இருக்கும். அந்தந்த விளையாட்டு அத்துடன் சரி என்ற கொள்கை இவர்களுடையது.

குடும்பத்திலுள்ள தனிப்பட்டவர்களைக் காட்டிலும் குடும்பம் என்ற பொது அமைப்பை மிகுதியும் நேசிக்கும் இயல்புடையவன் சீனன். அதிலே ஒரு பெருமிதம் அவர்களுக்கு. குலவிருத்திக்கு மேல் மனைவி என்பவளுக்கு முக்கியத்துவம் ஒன்றும் கிடையாது. ஒருவனுடைய செல்வ வளத்துக்கும் செருக்கிற்கும் அடையாளம் அவன் எத்துணைப் பெண்டிரைப் படைத்திருக்கிருன் என்பதைப் பொறுத்திருக்கிறது. செல்வம் கொழிக்கும் காலத்தில் அவர்களிடம் தாராளமாக நடந்து கொள்ளுவான். குழந்தைகளிடம் அவனுக்குப் பிரியம் உண்டு. மிகுந்த பட்சத்துடன் பேணி வளர்ப்பான். எல்லாம் சரிதான். ஆனுல் அவனுக்குக் கோபம் வருமாறு நடந்து கொண்டுவிட்டால் குழந்தையாவது, கோட்டானுவது? அவ்வளவு கொடுமையாக, குரூரமாக நடந்து கொள்வான். கண்ணியமான குடும்பங்களில் கூட குழந்தைகளுக்குத் தடியாராதனை தராளமாக நடப்பதுண்டு.

தனக்கு ஒருவன் இழைத்த பொல்லாங்கைச் சீனன் லேசில் மறப்பதேயில்லை. அது நெஞ்சில் நீங்காது இருந்து வரும். சமயம் வரும்போது வட்டியும் முதலுமாகத் திருப்பிக் கொடுத்து விடுவான். இதில் ஈவிரக்கம், தயவு தாட்சண்யம் ஒன்றும் குறுக்கிடவே முடியாது. பழி தீர்ப்பதில் தயக்கமே கிடையாது. பகைவனை வஞ்சம் தீர்த்து அவன் வருந்துவதைக் கண்டு ரசிப்பதில் அவனுக்குப் பரமானந்தம்.

சீனர்கள் பெரிய ஊதாரிகள். கையில் பணம் இருந்துவிட்டால் ஜமாதான். வாழ்க்கை இன்பங்களை முடிந்த வரை அனுபவித்துத் தீர்ப்பதிலும் எதையும் கோலாகலமாகச் செய்வதிலும் உற்சாகமுடையவர்கள். புகழுக்கும் முகஸ்துதிக்கும் எளிதில் மசியக் கூடியவர்கள். நீண்ட நாள் நட்போ, ஊழியமோ அவர்களிடமிருந்து சல்லிக்காசு கூட பேர்க்க முடியாது. ஆனுல் ஒரு பட்டம் பதவி கிடைக்குமென்றுல் பணத்தை வாரியிறைக்கத் தயங்கமாட்டார்கள். இக பர சுகங்கள் இரண்டிலும் இவர்களுக்கு மிகுந்த சிரத்தையுண்டு. கிடைக்கும் பணத்தைக் கொண்டு இவ்விருவகை யின்பங்களையும் ஈட்டிக் கொள்வார்கள்.

சமயம் என்பது அவர்களுக்கு ஒரு போர்வை. அது கவைக்குதவாதபோது கழற்றியும் எறிந்து விடுவார்கள். சடங்குகளும் சம்பிரதாயங்களும் நிறைந்த வாழ்க்கையில் ஆழ்ந்த சமயப் பற்று ஒன்றும் கிடையாது. மூடநம்பிக்கைகள், கண்மூடிப் பழக்கங்களில் ஆழ்ந்து கிடப்பவர்கள். நேர்ந்து கொள்வதன் மூலம் கடவுள் அருள்பெற்றுத் துயரங்களைப் போக்கிக் கொண்டுவிடலா மென்று எண்ணுகிறவர்கள்.

நன்கு படித்த சீனன் சாதாரணமாக டாம்பீகக் காரனுக இருப்பான். எல்லாம் ரொம்ப மர்மமாக நடந்து கொள்ளுகிற இயல்பு அவனுக்கிருக்கும். மற்றவர்களை வாய்திறக்கவிடாமல் தானே பேசிக் கொண்டிருப்பதும், புதிர் போட்டு எதையும் பூடகமாகப் பேசுவதும் அவனுக்குப் பிடித்த வழிகள். எளிதில் பிறர் புரிந்து கொள்ள இயலாத வகையில் ஒன்றைப் பேசுவதே தனது கல்வியின் பெருமைக்கு

எடுத்துக் காட்டு என்பது அவனுடைய எண்ணம். சீன அரசியல் வாதியோ, அதிகாரப் பொறுப் புள்ளவனே, தெளிவாகவும், பொறுப்பாகவும் பேசுகிற பழக்கம் கிடையாது. சம்பிரதாயமான மரியாதை கடைப்பிடிப்பதும், பிடிபடாமல் ஒன்றைச் சொல்லித் தட்டிக் கழிப்பதும் அவனுடைய பாங்கு. பட்டும் படாமலும் சுற்றி வளைத்தும் விடை கூறுவார்கள். ராஜ தந்திரத்திற்குப் பேர்போன ஆங்கிலேயர்கள் கூட, சீனர்களின் பூடகப் பேச்சி லிருந்து எதையும் தெரிந்து கொள்ள முடியாமல் திணறவேண்டியிருக்கும்.

உத்யோகம் என்ருல் லஞ்சம் வாங்குவதே அதன் லட்சணம் என்று முடிவு செய்திருப்பவர்கள் சீனர்கள். தங்கள் சொந்த ஜனங்களிடமிருந்தே கைக்கூலி பெறக் கூச மாட்டார்கள். கொடுமை யாக அவர்களை அடிமைப்படுத்தி மிருகங்களைப் போல நடத்துவார்கள். ராணுவச் சீனனே, காட்டுமிராண்டியாகவும், அரக்கனுகவும் அட்டூழி யக் காரனுகவும் இருப்பான்.

அதிகாரிகளின் ஆர்ப்பாட்டமும் கொடுமைக ளும் சில துணிந்த கட்டைகளைப் பயங்கர வாதிக ளாக மாற்றிவிடுவதுண்டு. இவர்கள் மர்மக் கூட்ட ணிகளை உண்டாக்கிக் கொண்டு, அந்த அதிகாரி களை மட்டுமல்லாமல், லாபம் கிடைக்கும் போலி ருந்தால் மற்றெவரையுங்கூடத் தாக்குகின்ற அள வுக்குத் தயாராகி விடுவார்கள். இந்தப் பயங்கரக் கூட்டம் சிங்கப்பூரிலும் பரவிவிட்டது. ஆட்களைக் கடத்திப் போவதும் பிணைப் பணம் கேட்டுப் பறிப் பதும் இவர்களுடைய தொழிலாகி விடும் அளவுக்கு வந்துவிட்டது. சூதாட்டக் கிடங்குகளும், குடித்து ஆட்டம் போடும் சாவடிகளும், இவர்களுக்குச் சொந்தம். சிங்கப்பூரில் கள்ளக் கடத்தல் கோஷ்டியாகவே இவர்கள் சேர்ந்துவிட்டனர்.

உலகிலேயே கள்ளக் கடத்தல் கலையில் சீனர் களுக்கு நிகர் கிடையாது. சுங்க அதிகாரிகளை எதிர்ப்பதோ, தப்பி ஓடிப் போவதோ என்பதெல் லாம் அவர்களுக்கு அவசியமில்லை. பொருள்களைக் கள்ளத் தனமாகக் கடத்துவதை முறையாகவும் திறமையாகவும் பயின்ற இவர்களது வலையில் அனு பவமும் ஆற்றலுமிகுந்த சுங்க இலாகாவின் பெரும் புலிகளே மாட்டிக் கொள்ள வேண்டிவரும். மனித மனேதத்துவ நுட்பங்களில் இவர்களது ஞானம் அவ்வளவு துல்லியமாக இருப்பதால், சுங்க அதி காரிகளின் நெளிவு சுளிவுகளை யெல்லாம் ஒரு அசைவில் கண்டுகொண்டு சட்டத்தின் பிடியில் அகப்படாமல் தப்ப அவர்களுக்கு வழி தெரியும்.

ஆனல், படித்துப் பட்டம் பெற்ற நவயுகச் சீன இளைஞர்களுக்குத் தங்கள் சமூகத்து மக்களின் இந்தப் போக்கும் வாழ்க்கை வழிகளும் பெருந் திகைப்பை யுண்டாக்கியிருக்கின்றன என்பதில் ஐயமில்லை. சீனத்து மூடப் பழக்கவழக்கங்களையும் காட்டுமிராண்டிக் கொள்கைகளையும் எண்ணி இவர்கள் நாணுகின்றனர். குறுகிய நோக்கங்க ளைக் கண்டு இவர்கள் குமைகின்றனர். அவர் தம் அறிவீனங்களை இவர்கள் அருவறுக்கின்ற னர். உலகில் மற்ற நாட்டவர்களை மிஞ்சக் கூடிய அறிவாற்றல் சீன சமுதாயத்துக்கு உண்டென்று இந்தக்கால இளைஞர்கள் நன்கு தெரிந்துகொண்டி ருக்கின்றனர். ஆனல் நூற்றுண்டுகளாகப் படிந்து விட்ட வழக்கங்கள், பத்தாம் பசலிப் பணக்காரக் கோட்பாடுகள், மோக வெறிகள் இவையெல்லாம் வேரூன்றிப் போயிருக்கின்றன.

எனினும் அரசியலில் தாண்டவமாடும் லஞ்சங் கள், பொருளாதாரப் பித்தலாட்டங்கள், ராணுவக் காட்டு மிராண்டித்தனம், சொந்த நாட்டு மக்க ளையே சூறையாடும் கீழ்மை, மற்றுந் துயரங்கள், தாழ்ச்சிகள், சீர்கேடுகள் இவற்றை யெல்லாம் இந்த நாள் இளைஞர்களான சீனர்கள் நன்கு அறிந்த போதிலும், வெளிப்பட அவற்றைச் சர்ச் சிக்கவோ, பிறர் அறியச் செய்வதிலோ அவர்க ளுக்கு விருப்பமில்லை. தங்கள் நாட்டைத் தாங்களே காட்டிக் கொடுப்பது போலாகுமென்ற ஒருவித நாட்டுப் பற்று குடிகொண்டிருப்பதால் எல்லாவற் றையும் கட்டிக் காத்து மூடிக்கொண்டு போவதில் அவர்கள் ஊக்கம் காட்டுகிருர்கள். எனவே இந் தத் தலைமுறையினரும் தங்களைத் தாங்களே வஞ் சித்துக் கொள்ளுகின்றனர் என்பது தெளிவு. பரம் பரையான இந்தக் கேடுகளில் இந்தத் தலை முறை யினரும் வேறு வழியின்றி உழல்கின்றனர். லஞ் சப் புற்று நோய் இவர்களையும் அரித்தெடுக்கத் தொடங்குவதில் வியப்பில்லை. இவர்களால் வெறுக் கப்பட்ட கண்மூடிப் பழக்கங்களே இவர்களையும் ஆட்கொண்டு விடுகின்றன. வாழையடி வாழை யாக இளைய சீனரும் இழிவில் சிக்கி உழல்வதால் சீனம் என்பது ஒரு — நச்சுப் பொய்கை. **

எமது புதிய நூல்கள்

தமிழ் இலக்கிய வளத்தையும் வளர்ச்சியையும் காட்டுவன.
பேராசிரியர்கள், அறிஞர்கள் தலைவர்கள் எழுதிய புத்திலக்கியப் படைப்புக்கள்,
பழந் தமிழ் நூல்கள், பிற நாட்டு நல்லறிஞர்கள் சாத்திரங்கள்

எம்மிடம் ஏராளமாக உண்டு

மெர்க்குரி புக் கம்பெனி

புத்தக வியாபாரம்

போன்: 4228 ராஜ வீதி, கோயமுத்தூர்.

குறித்தகாலம்
திறமான சேவை
வீணுக்காமை
பொதுநலம்

நாட்டின் நெருக்கடி வேளையில்
இவையே
நமது நடைமுறை.

★

எப்போழுதும் இவையே
எங்கள் குறிக்கோள்

ஸ்ரீ சிதம்பர விலாஸ் மோட்டார் சர்வீஸ்

துறையூர் & திருச்சி.

R. கிருஷ்ணசாமி ரெட்டி,
உரிமையாளர்.

நாட்டுக்கு நலம் தரும் பணி

மத்திய அமைச்சர், கனம் சி. ஆர். பட்டாபிராமன்

★

நாடு அரசியல் சுதந்திரம் மட்டுமன்றி பொருளாதார வளமும் பெற்றிருந்தால் தான், சுதந்திரத்தின் முழுப்பயனையும் மக்கள் அனுபவிக்க முடியும். மக்களின் வாழ்க்கைத் தரம் உயர உயர, நாட்டில் சுபிட்சம் பொங்கும். மக்களின் வாழ்க்கைத் தரம் உயர வேண்டுமானால், திட்டமிட்டு செயலாற்றுவது மிக அவசியமாகும். பாரதம் விடுதலை பெற்றதுமே இதை நாம் உணர்ந்தோம்; லட்சியம் எவ்வளவு முக்கியமோ அவ்வளவு முக்கியம் அது ஈடேறுவதற்கு நாம் கையாளும் முறைகளும் என்று கருதினோம்.

ஆகவே, ஜனநாயக முறையில் மக்களின் ஒத்துழைப்புடன் திட்டமிட்டு முன்னேற வேண்டும் என்று முடிவு செய்தோம். பொருள் உற்பத்தி பெருகுவதோடுகூட, எல்லா நலன்களும் வசதிகளும் பரவலாக எல்லா மக்களுக்கும் கிடைக்குமாறும், செல்வமோ, செல்வாக்கோ, ஒரு சிலரின் ஏகபோக உரிமையாகக் குவிந்து விடாமலும் பார்த்துக் கொள்வது பெரும் பொறுப்பு ஆயிற்று. அந்தப் பொறுப்பை அரசாங்கம் ஏற்றுக் கொண்டது.

சுபிட்ச நிலையை அடைவதற்கு வேண்டிய ஆற்றலும் திறனும் நாட்டிலேயே வளரவேண்டும். அதை வளர்ப்பதே திட்டத்தின் லக்ஷ்யமாகும். இதற்கு மகத்தான முயற்சி தேவை. ஐந்து ஐந்து ஆண்டுகளாக, ஐந்து திட்டங்களுக்கு —அதாவது 25 வருஷங்களுக்கு — இந்த முயற்சி முழு மூச்சோடு, முழு வேகத்தோடு நடைபெற்றுக் கொண்டே இருக்கவேண்டும்.

நாளடைவில் உறுதியும் உரமும் பெற வேண்டிய துறைகள் எவை, சாதனங்கள் எவை, அவற்றை இணைப்பாகப் பயன்படுத்திக் கொள்வது எப்படி, என்பதையெல்லாம் இரண்டாவது திட்டத்திலேயே காண்பித்தாகிவிட்டது. மூன்றாவது திட்டமும் இதையே வலியுறுத்துகிறது. ஆதாரத் தொழில்களும் பெருந் தொழில்களும் பெருகினால் தானே நாடு எதையும் சாதிக்கவல்ல திறனை விரைவில் அடைய முடியும்.

திட்டம் அமலுக்கு வந்து முதல் பத்தாண்டுகளில் பல துறைகளிலும் நல்ல அபிவிருத்தி கண்டிருக்கிறோம். தேசீய வருமானம் 42 சதவிகிதம் உயர்ந்திருக்கிறது. ஆனால், சராசரி நபர் வருமான உயர்வோ, 16, 17 சதவிகிதம் தான். மக்கள் தொகை அதிகமாகி விட்டபடியால் தனி நபரின் சராசரி வருமானம் கணிசமாய் உயரவில்லை. விவசாயத் துறையில் விளைச்சல் 40 சதவிகிதம் பெருகியிருக்கிறது. தொழில் துறையில் உற்பத்தி 94 சதவிகிதம் பெருகியிருக்கிறது.

சமூக நல வசதிகள் பொதுவாய்ப் பெருகியிருந்தாலும்கூட, கல்வித் துறையின் வளர்ச்சியை முக்கியமாய் குறிப்பிடவேண்டும். இப்போது எங்கு நோக்கினும் முன்னைவிட அதிகமாய் பள்ளிகளும். தொழில் பயிற்சிக் கூடங்களும் இயங்கி வருகின்றன. ஆசிரியர்களின் எண்ணிக்கையும் அதிகரித்திருக்கிறது. ஆயினும் பல சிக்கல்களும் பிரச்னைகளும் இருக்கத்தான் செய்கின்றன. அந்நியச் செலாவணி விலைவாசி முதலிய பிரச்னைகள், நமக்கு ஒன்றும் புதியவை அல்ல. திட்டம் என்று சொன்னால், கூடவே வரும் பிரச்னைகள் தாம் அவை.

அமைதியாகத் திட்டம் போட்டு செயலாற்றி வந்த நேரத்தில் சீனரின் ஆக்கிரமிப்பு பேரிடியாக வந்து விழுந்திருக்கிறது. இதிலே ஆச்சரியம் என்ன வென்றால், எந்த நாட்டுக்காக நாம் அல்லும் பகலும் பரிந்து பேசி வந்தோமோ, அந்த நாடே இப்போது நம்மைத் தாக்கியிருக்கிறது. இந்த ஆக்கிரமிப்பு நம் நாட்டின் பண்பாட்டுக்கு ஒரு சவால், வாழும் முறைக்கு ஒரு சவால், ஜனநாயக நெறிக்கே ஒரு சவால்.

நம் திட்டத்தின் சாதனைகளும், அவற்றை நாம் சாதித்த முறைகளுமே சீன ஆக்கிரமிப்புக்கு முக்கியமான காரணம் என்று தோன்றுகிறது. மக்களுடைய ஒத்துழைப்பைக் கொண்டே, அவர்களுடைய சொந்த உரிமைகளைப் பாதிக்காதபடி பல துறைகளிலும் பல சாதனைகள் புரிந்திருக்கிறோமே அது; ஜனநாயக ஆட்சி முறையில்தான் முடியும்.

இப்போது ஏதோ குமுறல் அடங்கியிருக்கிற மாதிரி தெரியலாம். இதைக்கண்டு நாம் அஜாக்கிரதையாக இருக்கலாகாது. முன்னிலும் அதி உஷாராய் இருக்க வேண்டும். சீனரை எதிர்ப்பதில் மக்களிடையே காணப்பட்ட வேகமும், ஆர்வமும் மங்கி மறையாமல் நீடித்திருக்கச் செய்வது நம் எல்லோருடைய பொறுப்பாகும்.

நாடு காக்கும் பணியில், பொருள் உற்பத்தியைப் பெருக்குவதில் ஊக்கம் காட்டுவது மிக மிக முக்கியம். ஆகவேதான் திட்டத்தைக் கைவிட முடியாது என்று சொல்லுகிறேம். நாட்டின் வளத்தைப் பெருக்குதற்கு முக்கிய சாதனமாய் இருந்து வந்த திட்டம், இனி, பாதுகாப்புத்துறைக்கும் துணையாக அமைய வேண்டும். சற்று விளக்கமாகச் சொல்ல வேண்டுமானல், மக்களின் வசதிகளைப் பெருக்குவதற்காகத் திட்டம் போட்டு நடத்தி வந்த நாம், தற்போது நெருக்கடி ஏற்பட்டிருக்கிற நிலையில், அந்த வசதிகளில் முக்கியமானவற்றைக் குறைக்காமல், அதே சமயத்தில் உற்பத்தித் திறனைப் பெருக்கிக் காவல் படைகளின் தேவைகளையும், அதே திட்டத்தைக் கொண்டே சமாளித்தாக வேண்டும். ஆகவே, ஆக்க முயற்சி முன்னிலும் தீவிரமாக, முழு வேகத்துடன் நடைபெறுவது அவசியமாகிறது.

நெருக்கடி நிலைமையைச் சமாளிக்கப் பணமும் பொருளும் நிறைய வேண்டும். வரிகள் மூலமும், விலைவாசிகளைக் கட்டுப்படுத்துவதன் மூலமும் பண வசதியைப் பெருக்கிக் கொள்ளலாம். இதைவிட முக்கியமானது பொருள் வசதிகளைப் பெருக்கும் முயற்சி. எல்லாத் துறைகளிலும் பொருள் உற்பத்தி பெருக வேண்டும். பொருள் பெருக்கம் மட்டும் போதாது. உற்பத்தித் திறனும் பெருக வேண்டும். இந்த இரண்டும் நிறைவேற நமக்கு வேண்டியது சேமிப்பும், முதலீடும். முதலீடு வளர, தொழில்கள் வளரும். தொழில்கள் வளர்ந்தால் பொருள் உற்பத்தி பெருகும். பொருள் உற்பத்தி பெருகினுல் ஏற்றுமதி அதிகரிக்கும். அதன் மூலம் டாலர், ஸ்டர்லிங் போன்ற அந்நியச் செலாவணியை அதிக அளவில் திரட்டலாம்.

மக்கள் வாழ்க்கை நடத்துவதற்கு அவசியமான பொருள்கள் சரியாகக் கிடைத்து வரவேண்டுமானல், விவசாயத்தை முன்னிலும் தீவிரமாய்ச் செய்வது மிக மிக அவசியமாகிறது. அதேபோல தொழில்களும் மின்சார உற்பத்தியும், போக்கு வரத்து வசதிகளும் பெருக வேண்டும். இந்தத் துறைகளில் ஏற்கனவே உள்ள வசதிகளை முழு அளவுக்குப் பயன் படுத்த வேண்டும்.

பொறுப்பு உணர்ச்சி, காலத்தைக் கடத்தாமல் எதையும் வீணுக்காமல் பணியாற்றுவது, முதலாழி–தொழிலாளர் உறவு நல்லுறவாய் அமைவது, நல்ல பயிற்சி-இவையெல்லாம் ஒன்று சேர்ந்தால் விவசாயத்திலும் தொழில் துறையிலும் நம் நாட்டுத் தொழிலாளரின் உற்பத்தித் திறன் கணிசமாய் பெருகும். நெருக்கடி நிலைமை நமக்கு ஓர் அரிய வாய்ப்பு. தொழிலாளரும் பிறரும் மனம் வைத்தால் ஆகாதது ஒன்றுமில்லை. அவர்களுடைய சக்தியைப் பன்மடங்காகப் பெருக்குவதற்கு இதுவே நல்ல சமயம்.

தேசீய நெருக்கடியில் மக்கள் பல வகையிலும் உதவி செய்யத் தாமாகவே முன்வருகிருர்கள். அவர்களுடைய ஆர்வத்தையும் உழைப்பையும் சரியானபடி பயன்படுத்திக் கொள்வதற்கு நல்ல வழிமுறை ஒன்றுதான் தேவை. கிராமங்களில் மண் அரிப்புத் தடுப்பு, ஏரி குளம் வெட்டுதல், குடிமராமத்து, சாலை அமைத்தல் முதலிய எத்தனையோ வேலைகளுக்கு அந்த உழைப்பு பயன் படும். கிராம மக்கள் ஒவ்வொருவரும் வாரத்துக்கு சில மணி நேரம் உழைப்பு தானம் செய்வதாக இருந்தால் கூட எவ்வளவோ ஆக்க வேலைகளைச் சாதித்துவிட முடியும்.

நாம் ஒரு விஷயத்தை மனதில் நன்ருகப் பதிய வைத்துக் கொள்ளவேண்டும். நாட்டின் பாதுகாப்பே இன்றைய முக்கிய பணி, உழைப்பின் பலன் கணிசமான அளவு அதற்கு உதவுவதாக இருக்க பாதுகாப்புச் செலவு பெருகியிருக்கிறது. அபிவிருத்தித் திட்டங்களை நிறைவேற்றி வைப்பதற்கு அதிகத்தொகை செலவு செய்தாக வேண்டியிருக்கிறது. மக்கள் செலவைச் சுருக்கி சேமிப்பை பெருக்குவது மிக அவசியம்.

நாட்டின் சுதந்திரத்துக்கே ஆபத்து வந்திருக்கிறபோது எவரும் தம்மால் இயன்ற உதவியைச் செய்யத் தயங்க மாட்டார்கள் என்று நம்புகிறேன்.

நாட்டின் பாதுகாப்புக்காக உழைப்பவர் எல்லோருமே படை வீரர்கள்தாம்–போர்க்களத்தில் நிற்கும் ஜவான் மட்டுமல்ல, – ஆசிரியரோ, குடியானவரோ, தொழிலாளியோ, சர்க்கார் அதிகாரியோ, யாரே ஆயினும், அவர்கள் எல்லோருமே அவரவர் துறைகளில் நாட்டைக் காக்கும் வீரர்களே-ஜவான்களே. நெருக்கடியான காலத்தில் நாட்டுக்குத் தம்மால் ஆன உதவி செய்வதை ஒவ்வொருவரும் திருப்பணியாகவே கருதுவார்கள் என்பது நிச்சயம்.

★

மனதால், வாக்கால், செயலால் நாட்டிற்காக உழைப்போம்.

கவிதையின் நடை

★

— பி. கோதண்டராமன்

கவிதையில் இயங்கும் ஓசைகளில் ஓர் ஒழுங்கு அல்லது வரையறை அமைந்தால் ஒரு நயம் ஏற்படுகின்றது. இதைத்தான் ஓசை நயம் என்பர். ஆங்கில மொழியில் இது 'ரிதம்' எனப்படுகிறது. கவிதையில் இந்த ஓசை நயம் இன்றியமையாது அமைந்திருக்க வேண்டும். இது இல்லாமல் கவியின் உணர்ச்சியனுபவம் சொற்களில் தவழ வழியில்லை. அலைபோன்று இயங்கும் ஓசையானது சொல்லினுள் உறையும் சிந்தனை அல்லது உணர்ச்சியின் இயக்கத்தையும் தன்மீது கொண்டு செல்கின்றது. இனிய ஓசை பொருந்திய சித்திரம் கவிதைப் பொருளையும் கடந்து மன அறிவால் வெளிப்படுத்த முடியாததையும் வெளிப்படுத்த உதவுகிறது. இசையொலியின் தனி ஆற்றல் இது. இவ்வுண்மையை இக்காலத்தவரை விட நம் முன்னோர்கள் நன்குணர்ந்திருந்தனர். நாம் இன்று கவிதையைப் படிப்பதுடன் திருப்தியடைகிறோம். படித்தல் அறிவின் அல்லது உணர்ச்சியின் அம்சத்தை மட்டுமே வெளிப்படுத்துகிறது. அது ஒலி நயத்தை அழுத்தி விடுகிறது. நம் முன்னோர்களே கவிதையை ராகத்தோடு பாடினர். பழந் தமிழர் நாம் கவிதையெனக் கூறுவதைப் பா அல்லது பாட்டு என்றே அழைத்தனர். பாட்டுக்கு ஓசை நயம் இன்றியமையாததெனக் கண்ட அவர்கள் தமக்கென யாப்பு முறையொன்றை வகுத்துக் கொண்டனர்.

ஸ்ரீ அரவிந்தரின் கருத்தின்படி, கவிதையில் ஆற்றல் வாய்ந்த நடையொன்று விளங்க வேண்டும்; அதற்கு மந்திரசக்தி இருக்க வேண்டும். நடையில் ஒருவித ஆற்றலும் ஒருவித ஓசைநயமும் இருந்து விட்டால் அதைக் கவிதையெனப் போற்றத் தொடங்கி விடுகிறோம். இவை போதா. கவிதையானது கற்பனை செய்யும் விழிக்கும், ஆத்மீகப் பொருளுக்கும், ஆத்ம உணர்ச்சிக்கும், ஆத்ம விழிக்கும் சீவனுள்ளதாக விளங்க வேண்டும். அங்ஙனம் விளங்குவதற்கான நடையே கவிதையின் உயரிய நடையாகும். இந்த ஆற்றல் வாய்ந்த நடை காணப்படாவிடில் அது யாப்பமைந்த செய்யுளாக இருக்குமே யொழிய கவிதையாகாது.

ஓவியம், சிற்பம் முதலிய கலைகளைப்போல் கவிதையும் பொருள் பதிந்த சித்திரங்கள், உருவங்கள் மூலம் மானிட உள்ளத்தைக் கவர்கின்றது. கவிதை நம்மை வெறுமனே சிந்தனையிலோ உணர்ச்சியிலோ ஆழ்த்துவதோடு நின்று விடுவதாகாது. அது நம்மைப் பார்க்கச் செய்ய வேண்டும்; நம் உள் விழியால் ஆத்மாவைப் பார்க்கச் செய்ய வேண்டும். கவி தீர்க்கதரிசி, அவன் நம் மேற்புற மனம் பார்ப்பதற்கு அப்பால் பார்க்கிறான். அவன் மறை பொருளை வெளிப்படுத்தவல்ல சொல்லைக் காண்கிறான். வெறும் ஆற்றல் வாய்ந்த சொல்லையன்று – ஒளி பெற்ற, ஒளி செய்யவல்ல, ஆவேசம் தரும் அருட்சொல்லை, நம் உள்ளத்தைத் திறந்து நம்மைப் பார்க்க வைக்கும் மொழியைக் காண்கிறான். இத்தகைய இன்றியமையாத மொழியை அடைவதே கவிதை நடையின் முழு முயற்சியாம்.

கவி நம் கற்பனையைக் கவர்கிறான்; வாழ்க்கையின் புற அர்சங்களை ஆற்றலுடன் புலப்படுத்துகிறான். மன, உள்ளத்துணர்ச்சிகளைப் புலப்படுத்துகிறான்; அழகைச் சுவைக்கச் செய்து களிப்பூட்டுகிறான். ஆனால் இவையாவும் கவி நடைக்குரிய முதற்கருவிகளே. உயரிய கவியின் கற்பனை பரமாம் உண்மையைப் படைக்கும் ஆற்றல் வாய்ந்தது. மறைபொருளை விளக்கம் செய்ய வல்லது. உயர் கவிதையின் நோக்கம் இதுவே. பல படிகளைக் கடந்தே இவ்வுயரிய நிலையை அடையமுடியும். உணர்ச்சிகளைப் பாடும் கவிதை இன்பமளிக்கிறது. இவ்வின்பத்தோடு நின்று விட்டால் வாணியின் உச்ச நிலையை எட்டமுடியாது. உணர்ச்சிக் கவிதையில் நடையின் ஆற்றலைக் காணலாம். ஆனால் அந் நடையின் ஆற்றல் போதாது. உயரிய ஆத்மீக மொழியின் நடை வேறு.

"ஆண்டவன் விண்ணில் விளங்குகிறேன்; இம் மண்ணில் யாவும் சீராகவே நடைபெறுகின்றன" என்றான் கவி பிரவுனிங்கு "வீரன் மடிகிறான். சிட்டுக்குருவியும் தரையில் விழுகிறது. யாவற்றிற்கும் நாதனான ஆண்டவன் இவற்றைச் சம விழியுடனே நோக்குகிறான்." என்றான் கவி போப்பு. "நீ வந்துள்ள இவ்வுலகம் அநித்தியமானது, அசுகமானது;" என்றான் கண்ணன். பிரவுனிங்கும், போப்பும் நம்முள்ளே உறையும் ஆழ்ந்த தலையூற்றைத் தொடவில்லை. கண்ணனே அதைத் தொடுகிறான். பகவத் கீதையே உயரிய கவிதை.

மில்டனும் கீட்ஸும் ஷெல்லியும் மறைபொருளை உணர்த்தும் சக்தியை ஓரளவு பெற்றிருந்தனர். ஆனால் கவிதையின் புறவலங்காரங்களும் கருத்துக்களும் அதை மழுங்கச் செய்து விட்டன. அவர்களுடைய கவிதையில் இன்பம் காணலாம். ஆனால் அது தூய ஆத்மீக ஆனந்தமாக மறைபொருளை வெளிப்படுத்தும் பரவசானந்தமாக இல்லை என்கிறார் ஸ்ரீ அரவிந்தர்.

கவி தீவிர ஆற்றலுக்குரிய ஆத்மீக விழி உடையவனாக விளங்கவேண்டும். அவ்விழியினின்று வெளிவரும் உயர் மொழியே, மந்திர மொழியே கவிதையின் உயர்நடையாகும்.

★

உயர்ந்த பட்டு சேலைகள், மேலான சேலம் மயில்கண் வேஷ்டிகள், பட்டு ரகங்கள்,
இதர நூல் புடவைகள், வேஷ்டிகள், மதுரை சரிகை வேஷ்டிகள், அங்கவஸ்திரங்கள், உயர்ந்த சூட்டிங், ஷர்ட்டிங், சீட்டிகள், லான், சில்க் ரகங்கள்

கலியாண காலங்களுக்கென்றே ஏராளமாக வந்துள்ளன

கலியாணக் கொள்முதல்களுக்குத் திருச்சி வருவது செலவென்று நினைக்க வேண்டாம். அந்தச் செலவுக்குத் தகுந்த மனநிம்மதியான தினுசுகள் குறைந்த ஒரே விலையில் வாங்கிக் கொள்ளலாம்.

வேறிடங்களில் வாங்குமுன் எங்களை விசாரியுங்கள்

எங்களிடம் ஜவுளி மொத்த வியாபாரமும் உண்டு.

பிராஞ்சு:
Fancy Hall
சைனு பஜார்,
திருச்சி.
போன்: 2165

P. R. நாராயணசாமி அய்யர்

ஜவுளி வியாபாரம், பெரியகடைத்தெரு, திருச்சி-8.
P. B. No. 401. Phone: 2026. Res: 2026 A

P. R. நாராயணசாமி அய்யர் & கோ, கண்ணன் பஜார், காரைக்குடி. Phone 135.

தந்தி: சென்டெக்ஸ் போன்: 32 & 38

சென்னிமலை நெசவாளர் கூட்டுறவு உற்பத்தி & விற்பனைச் சங்கம் லிமிடெட்,

சென்னிமலை.

★

படுக்கை விரிப்புகள், மேசை விரிப்புகள், நவீன அலங்கார ஆடைகள், துண்டுகள் தரத்திற்கும், நவீன ரகத்திற்கும், அழகான கெட்டிச் சாயத்திற்கும் குறைந்த விலைக்கும் சிறந்தவை.

சென்னை அரசாங்கத்தாரால் முதற் பரிசுகளும், அநேக கண்காட்சிகளில் தங்கமெடல் சர்டிபிகேட்டுகளும் வழங்கப்பட்டுள்ளன.

சென்னை மாநில கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கத்தின் எல்லா விற்பனை எம்போரியங்களிலும் கிடைக்கும்.

எம். பி. நாச்சிமுத்து, பி. ஏ., பி. எல்.
தலைவர்.

இமயம் காக்கும் நம் வீரர்கள்

★

வானளாவிய மலைமுகடுகளில் இரத்தத்தை உறைய வைக்கும் கடுங் குளிரையும் பனிக் காற்றையும் மற்றும் பல இன்னல்களையும் நமது படை வீரர்கள் மிகுந்த மனோதிடத்துடனும் வீரத்துடனும் சமயோசித புத்தியுடனும் சமாளித்துத் தாக்குப் பிடித்து வருகின்றனர்; இவர்களில் பெரும்பான்மையினர் உஷ்ணமான சீதோஷ்ண நிலையுள்ள சமவெளிகளிலிருந்து சென்றுள்ளவர்கள். இவர்கள் தங்களுடைய புதிய சூழ்நிலைகளுக்கு மிகவும் வியக்கத்தக்க முறையில் துரிதமாகப் பரிசயமாகி விடுகின்றனர்.

கடல் மட்டத்துக்குமேல் ஒரு குறிப்பிட்ட உயரத்துக்கு அப்பால் செல்லச்செல்ல,காற்றின் அழுத்த நிலை பொதுவாக மாறிக் கொண்டேவரும்; மேலே போகப் போகப் பிராண வாயு குறைந்துகொண்டே வருவதால், சுவாசிப்பதே கஷ்டமாகி விடுகிறது. நிமிஷத்துக்கு நிமிஷம் களைப்பு அதிகமாகிக் கொண்டே வரும்; அந்த உயத்தில், கூடுமான வரை சமதரையில் நடக்கும்போதுகூட மேல் மூச்சுக் கீழ்மூச்சு வாங்கும். ஆனால், நெஞ்சுரம் படைத்த நமது படைவீரர்கள் இவ்வளவு மோசமான சூழ்நிலைகளுக்கும் மிகச் சில நாட்களுக்குள்ளேயே நன்கு பழகிவிடுகின்றனர். முதல் நாள் இவர்களுக்குக் கொஞ்சம் கஷ்டமாகத் தெரியும்; ஆனால், இரண்டு நாட்கள் கழிந்துவிட்டால், அவர்கள் இயற்கையுடன் போட்டிபோட ஆரம்பித்து விடுகின்றனர். எனவே, தாங்கள் இருக்கும் இடம் எவ்வளவு உயரத்தில் இருந்தாலும் அவர்களுக்குக் கவலை இல்லை. மலை முகடுகளெல்லாம் நமது படைவீரர்களுக்கு விளையாட்டு மைதானங்களாகிவிடுகின்றன. மலை ஏறும் பயிற்சியில் நீண்ட கால அனுபவம் பெற்றவர்கள்போல, அக் கஷ்டமான மலைப் பிராந்தியங்களில் உற்சாகத்துடன் நடமாட ஆரம்பித்துவிடுகின்றனர்.

நாடு காக்கும் நற்பணியில் ஈடுபட்டுள்ள நம் படைவீரர்கள் 14,000 அடிக்கு மேல் உயரமுள்ள இமய எல்லைகளைக் கண்ணுங் கருத்துமாகக் காவல் புரிந்து வருகின்றனர். அங்கு நிலவும் கடுங் குளிரோ முட்டைகளைக் கல்போல் உறைய வைத்து விடும்; தண்ணீர் பனிப் பாறைகளாக உறைந்து கிடக்கும் ஏரிகளின் குறுக்கே தாராளமாக நடந்து செல்லலாம். தண்ணீரின் உறைமட்டத்துக்குக் கீழே 12 டிகிரி வரை உள்ள கடுங்குளிரில், விசேஷ ரக உடுப்புகளை அணிந்துகொண்டு, நமது படை வீரர்கள் தங்கள் தாயகத்தைக் காத்து வருகின்றனர். இவ்வளவு இன்னல்களுக்கிடையேயும், தாங்கள் சமவெளிகளில் இருப்பதுபோலவே, அதே மிடுக்குடனும் ஒழுங்குக் கட்டுப்பாடுடனும் தங்கள் கடமைகளைக் கச்சிதமாக நிறைவேற்றி வருகின்றனர். எல்லைகளில் எதிரிகளின் நடமாட்டங்களைக் கண்காணித்து வரும் வேலை இரவு பகலாகத் தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

அதிக உயரத்தில் மிகவும் குறைந்த சீதோஷ்ண நிலையுள்ள பகுதிகளில் நடமாடும் போது மற்றொரு கஷ்டத்தையும் சமாளித்தாக வேண்டியிருக்கிறது; உடலில் நீர் குறையக் குறைய குமட்டலும் தலைவலியும் ஏற்பட்டுவிடும். திரவப் பொருள்களைப் போதிய அளவில் பருகிக் கொண்டிருப்பதன் மூலமே இத்தகைய வறட்சியைச் சமாளிக்க முடியும். ஜவான்களுக்கான உணவுப் பங்கீட்டில் ஒரு பகுதியாக சப்ளை செய்யப்படுகிற தேநீர், காப்பி, கோகோ முதலிய பானங்களை ஏராளமாகக் குடித்துக் கொண்டே நமது படை வீரர்கள் இந்த வறட்சி நிலையைச் சமாளித்து வருகின்றனர். அதி உயரத்தில் பணியாற்றும் படை வீரர்களுக்கு வாதுமை, வால்நட் ஆகியவையும் விசேஷ உணவுகளாக சப்ளை செய்யப்படுகின்றன. உடலைக் கணகணப்பாகவும் சுதாரிப்பாகவும் வைத்துக் கொள்வதற்கு இத்தகைய உணவுப் பண்டங்கள் மிகவும் உதவியாக உள்ளன. ஆனால், துரதிருஷ்ட வசமாக, தேநீர், காப்பி, கோகோ ஆகிய பானங்களைத் தயாரிப்பதற்கு வேண்டிய தண்ணீர் அத்தகைய பிராந்தியங்களில் எப்போதும் அவ்வளவு சுலபமாகக் கிடைப்பதில்லை. தண்ணீர் வேண்டுமானால் பல ஆயிரம் அடிக்குக் கீழே உள்ள பள்ளத்தாக்குகளில் ஓடும் நீரோடைகளுக்குத்தான் சென்றாக வேண்டும்; அவ்வளவு ஆழத்திலிருந்து தண்ணீரை மலையுச்சிக்குச் சுமந்து சென்றாகவேண்டும்; அல்லது சௌகரியமான இடங்களில் தண்ணீரைச் சேமித்து வைத்துக்கொள்ள வேண்டும். ஆனால் நெருப்பு உண்டாக்குவதற்கான மரக் கட்டைகளுக்கோ அங்கே பஞ்சமே இல்லை. மலைச் சரிவுகளில் ஏராளமாக வளர்ந்து கிடக்கும் உயரமான பைன் மரங்களைச் சுலபமாக வெட்டி உபயோகித்துக் கொள்ளலாம்.

நமது ஜவான்களுக்கு மலைகள்தான் தங்களுடைய வீடு; பாறைகள் அவர்களுடைய நண்பர்கள்; நினைப்பதற்கே பயங்கரமான அப்பகுதிகளில் நம் படைவீரர்கள் வானம்பாடி போல் மகிழ்ச்சிகரமாக உலவி வரும் காட்சியைக் காண நம் மெய்

சிலிர்க்கும். அவர்கள் கையில்தான் நாட்டின் எல்லைப்புறப் பாதுகாப்புப் பணி ஒப்படைக்கப்பட்டிருக்கிறது.

உலகெங்கிலும் வெற்றிப் பணி ஆற்றி வந்துள்ள இந்திய சைனியத்தின் பாரம்பரியம் உலகப் பிரசித்தி பெற்றதாகும். ஸஹாராப் பாலைவனத்திலும், பர்மா, மலேயா ஆகியவிடங்களிலுள்ள அடர்ந்த காட்டுப் பகுதிகளிலும், கடுங் குளிர்மிக்க ஐரோப்பாவிலும், அனல் பறக்கும் மேற்கு ஆசியாவிலும் இந்தியப் படைவீரர்கள் வீரப் போர் புரிந்திருக்கின்றனர். ஆனால், இப்போதோ தமது தாய்நாட்டின் சுதந்திரத்தைப் பாதுகாக்கிறோம் என்ற ஆவேச உணர்ச்சியுடன் அவர்கள் இந்த நற்பணியில் ஈடுபட்டுள்ளனர். சமீப காலம் வரை நண்பன்போல் நடித்து வந்த ஒரு நயவஞ்சக எதிரியுடன் போராடுகிறோம் என்பதை அவர்கள் நன்கு உணர்ந்து கொண்டுள்ளனர். ஆகையால், அவர்கள் தங்களுடைய முயற்சிகளில் மெத்தனமோ, அயர்வோ கொள்வதற்கில்லை. எல்லை காக்கும் வீரர்கள் ஒவ்வொருவருடைய இதயத்திலும் இந்த உணர்ச்சி கொழுந்து விட்டெரிகிறது.

சமீபத்தில், இந்த ஜவான்களில் ஒருவர், முன்னணிப் பகுதிகளின் கண்காணிப்புக்காகச் சென்ற படைத் தலைவர் லெப்டினன்ட்–ஜெனரல், ஹர்பக்ஷ் சிங்கைக் சந்தித்தார். அப்படைத் தலைவர் அந்த ஜவானை நோக்கி, ''ரஜா எடுத்துக் கொண்டு உங்களுடைய சொந்த ஊருக்குச் சென்றிருந்தீர்களா?'' என்று கேட்டதற்கு, அவர் ''இல்லை'' என்று பதிலளித்தார். ''நீங்கள் ரஜாவில் செல்ல விரும்பவில்லையா'' என்று கேட்கப்பட்டதற்கும், அவர் உடனடியாக அளித்த பதில் ''இல்லை''தான். அந்த ஜவான் ''ஆனால்'' என்று சற்றுத் தயங்கினர். ''ஆனல் என்ன?'' என்று படைத்தலைவர் கேட்டதற்கு, அந்த வீர பாரதப் புதல்வன் அளித்த பதில் என்ன தெரியுமோ? ''ரஜா எடுத்துக் கொண்டு என்னுடை சொந்த ஊருக்குச் சென்று, சற்று ஓய்வு எடுப்பதற்கு முன்னர், இந்தச் சீனர்களை ஒழித்துக்கட்டியாக வேண்டும்.'' **

—***—

எங்கள் வாடிக்கைக்காரர்களுக்கு சோபகிருது புத்தாண்டு நல்வாழ்த்துக்கள்.

கரூர் வைஸ்யா பாங்கு லிமிடெட்,

ரிஜிஸ்டர் ஆபீஸ்: 169, ஜவஹர் பஜார், கரூர்.

தலைமை ஆபீஸ்: கரூர் (ஷெட்யூல்ட் பாங்கு) ஸ்தாபிதம். 1916.

கிளைகள்:

சென்னை, திருச்சி, கோயமுத்தூர், மதுரை, சேலம், திண்டுக்கல், ஈரோடு, நாமக்கல், கும்பகோணம், தஞ்சாவூர், தாராபுரம், குளித்தலை, கோபிசெட்டி பாளையம், கரூர் பிராஞ்சு, சத்தியமங்கலம், இடப்பாடி, உடுமலைப்பேட்டை, விழுப்புரம், திருப்பூர், பொள்ளாச்சி, வேலூர் (வ. ஆ.) திருவண்ணுமலை, சிதம்பரம், விருத்தாசலம், கோயமுத்தூர் ஜெயில் ரோடு.

பிக்ஸட் டிபாசிட்டுகள், கால் டிபாசிட்டுகள், மாதாந்திர டிபாசிட்டுகள் கவர்ச்சிகரமான வட்டி விகிதங்களுக்கு வாங்கப்படும். நமது 3 வருஷ கேஷ் சர்டிபிகேட்டுகள், அதிக வட்டியை கொடுக்கக்கூடிய ஒரு சிறந்த முதலீடாகும்.

இன்ஷ்யூரன்ஸ் பாலிசிகள், இதர கம்பெனி பங்குகள், சர்க்கார் கடன் பத்திரங்கள், தங்க நகைகள், வியாபார சரக்குகள் முதலியவைகளின் பேரில் குறைந்த வட்டிக்கு கடன் கொடுக்கப்படும். மேலும், எங்களின் மேலே கண்ட கிளைகளுக்கும், இந்தியாவிலுள்ள, பம்பாய், கல்கத்தா போன்ற நகரங்களுக்கும் குறைந்த வட்டிக்கு கமிஷனில் டிராப்ட்கள், செக்குகள் கொடுக்கப்படும்.

விபரங்களுக்கு தலைமை ஆபீஸிற்கோ அல்லது எங்கள் எந்த கிளைக்கும் எழுதி தெரிந்துகொள்ளலாம்.

C. ராமனுத செட்டி, செக்ரடரி & மானேஜர்.

சாலையில் செல்லாமலேயே கார் ஓட்டப் பயிற்சி

தண்ணீரில் இறங்காமல் குழாயடியில் நீச்சல் கற்றுக் கொள்ளலாம் என்பது போல் இருக்கிறதல்லவா ? அப்படியல்ல. கார் ஓட்டும் பயிற்சியை உண்மையாகவே சாலையில் போகாமலேயே சொல்லித் தருகிறார்கள். தபால் மூலமாகவா என்று சந்தேகப்பட வேண்டாம். படித்துப் பாருங்கள்.

முன்பின் மோட்டார் காரின் ஸ்டியரிங்கைத் தொட்டுக் கூடப் பார்க்க முடியாதவர்களும் ஆக்ஸிலிரேட்டர் பெடலை அழுத்திப் பழக்கமில்லாதவர்களும், சாலையில் செல்ல வேண்டிய அவசியமில்லாமலேயே கார் ஓட்டப் பழகிக்கொள்ள முடியும்.

இதற்கான ஒரு புது வழியை நெதர்லாண்ட்ஸ் ராணுவத்தின் போக்கு வரத்துப் பிரிவினர், பிலிப்ஸ் கம்பெனி மற்றும் வெர்க்ஸ்பூர் எஞ்ஜினீயரிங் கம்பெனி ஆகியோரின் ஒத்துழைப்புடன் உருவாக்கியுள்ளனர். இதற்கு "டிரைவிங் — சிமுலேட்டர்" (ஓட்டுவதற்கு ஊக்கமளிப்பது) என்று பெயரிட்டுள்ளனர்.

இந்தக் கருவியின் உதவி கொண்டு எந்த வண்டியை வேண்டுமானாலும், மிகப் பளுவான ராணுவ மோட்டார்களைக் கூட எவ்வாறெல்லாம் இயக்க முடியுமோ அவ்வாறெல்லாம் இயக்குவதற்குப் பயிற்சியளிக்க முடியும். இத்துடன் உண்மையான ரஸ்தா போக்கு வரத்தில் அவன் என்னென்ன போக்கு வரத்து விதிகளை அனுசரிக்க வேண்டுமோ அவைகளிலும் பயிற்சி பெற்று விடுவதனால், பயிற்சி நிலையத்தை விட்டு வெளியேறியதும், அவன் ஒரு காரில் ஏறிக்கொண்டு பயமின்றி சாலையில் ஓட்டிச் செல்ல முடியும்.

மிக நெருக்கமான போக்கு வரத்து உள்ள இடத்திலும் அவன் நிதானத்தை இழக்காமல் ஓட்டிச் செல்லலாம். இதில் விசேஷம் என்னவெனில் நான்கு சுவர்களுக்கு இடையில் கிட்டத்தட்ட இருட்டடிக்கப்பட்ட நிலையில், வெளியில் ஒரு மைல் கூட கார் ஓட்டிச் செல்ல வேண்டிய நிர்ப்பந்தமில்லாமல் அவன் இத்தனை அனுபவங்களையும் பெற்று விடுகிறான்.

இதற்குத் துணையாக அமைந்தது டெலிவிஷன். இதைக் கண்டுபிடித்தவர் திரு. வான் டென்பெர்க் என்பவர். இருட்டறையில் அசைகின்ற மிகச் சிறிய கார் அவனுக்குக் கார் ஓட்டியின் உண்மையான அனுபவங்களை உண்டாக்கி விடுகிறது. இப்பயிற்சி யந்திரம் ராணுவ முகாமில் இரண்டு அறைகள் உள்ள ஒரு கட்டிடத்தில் வைக்கப்பட்டிருக்கிறது. இந்த அறைகள் ஒன்றில் ஒரு சிறிய நகரம், கட்டடங்கள், அகலமான மற்றும் குறுகலான சாலைகள், சந்திப்புகள், முதலியன கொண்டதாக அமைக்கப் பட்டிருக்கிறது.

சாலை விதிகளை அறிவிக்கும் எல்லாவித பலகைளும் அங்கு உண்டு. இத்துடன் சிறிய கார்கள் அங்குமிங்கும் போய்க் கொண்டிருக்கும். இந்நகர மத்தியில் ஒரு இயங்கும் கைகாட்டி வைக்கப்பட்டிருக்கிறது. இது பயிற்சி மோட்டார் வண்டியுடன் இணைக்கப் பட்டிருக்கிறது. இயங்கும் கை காட்டியின் உதவியினால் இம் மோட்டார் நகரினூடே சாதாரண மோட்டார் வண்டி செல்வதைப் போல் சென்று கொண்டிருக்கும்.

இரண்டாவது அறையில் சன்னல் கதவுகள் கிடையாது. இங்கு ஒரு ராணுவ மோட்டார் வண்டியின் சாஸிஸ் வைக்கப்பட்டிருக்கிறது. இதன் முன் சக்கரங்களும், என்ஜினும் நீக்கப்பட்டு, பின் சக்கரங்கள் சுழலும் ரப்பர் சக்கரங்கள் மீது வைக்கப்பட்டிருக்கிறது. என்ஜின் இணைப்பு துண்டிக்கப்பட்டு ஆக்ஸிலிரேட்டர் ஒரு மோட்டாரும் எண்ணெய் பம்பு செட்டு ஒன்றும் இணைந்த ஒரு பகுதியில் பொருத்தப்பட்டிருக்கிறது.

இந்த மோட்டாரின் வேகத்தை ஆக்ஸிலிரேட்டரைக் கொண்டு கட்டுப்படுத்த முடியும். மோட்டார் ஓட்டி உட்காருமிடத்தில் எல்லா பெடல்களும் மற்ற கட்டுப்படுத்தும் கருவிகளும் உள்ளன. இவைகள் மோட்டார் காரில் உள்ளவைகளைப் போலவே இயங்க வல்லன. கற்கும் மாணவர் மோட்டாரை ஸ்டார்ட் செய்யவும், கியரை மாற்றவும், டிரக்கை ஓட்டிச் செல்லவும் முடியும்.

சாதாரணமாக சாலையில் ஓட்டிச் செல்லும் போது எவ்வாறு கியர் மாற்றம் செய்வது, ஆக்ஸிலிரேட்டரை அழுத்துவது போன்ற செய்கைகளை, வண்டி நின்றபடியே செய்து கொண்டிருக்கலாம். அவ்வாறு செய்யத் தவறினால் என்ஜின் ஆட்டம் கொடுக்க ஆரம்பிக்கும். பிறகு நின்று விடும். இது பிரத்தியட்சமாக நடப்பதைப் போன்றே உள்ளது. விண்ட்ஸ்கிரீன் மூலம் சாலையை பிரத்தியட்சமாகப் பார்த்து ஓட்டுவதைப் போன்றே இப்போதும் மாணவர் ஓட்டுகிறார். இங்கு தான் டெலிவிஷன் ட்யூப் பொருத்தப் பட்டிருக்கிறது. அதை 180 டிகிரி வரை சுழற்ற முடியும். அதனால் 240 டிகிரி அளவு விஸ்தாரமான இடம் தெரியும்.

இருட்டடிக்கப்பட்ட அறையில் எதிர் சுவற்றில் ஒரு திரை தொங்கவிடப் பட்டிருக்கிறது. இங்கு டெலிவிஷன் ட்யூப் காணுகின்ற ஒவ்வொரு பொருளும் பெரிய அளவில் பிரதிபலிக்கப்படுகிறது. கார் ஓட்டும் மாணவர் தலையில் ஒரு இருப்புத் தொப்பி அணிந்திருக்கிறார். இது ஒரு சுற்றக் கூடிய புரொஜக்டருடன் இணைக்கப்பட்டிருக்கிறது. மாணவர் இடது புறமோ, வலது புறமோ திரும்பும்

போது புரொஜக்டரும் திரும்புகிறது. ஆகவே மாணவர் பார்க்கும் திசையிலேயே டெலிவிஷன் ட்யூபும் திரும்புகிறது.

ஆகவே காமிரா காணும் காட்சி புரொஜக்டர் வழியாக மாணவர் பார்க்கின்ற திசையில் திரை மீது பெரிய அளவில் விழுகின்றது. ஆகவே பிரத்தியட்ச நிலையை மாணவர் காண்பதோடு, கார் ஓட்டுவதும் உண்மையில் ஓட்டிச் செல்வது போன்ற அனுபவத்தை உண்டாக்குகிறது. இந்த புதிய இயந்திரத்தை உருவாக்கிய திரு. வான் டென்பெர்க் முன்பு ராணுவ அதிகாரியாக இருந்தவர். இவர் ராணுவத்தில் பல பேர்களுக்கு கார் ஓட்டும் பயிற்சியளிக்க வேண்டிய வேலையில் அமர்ந்திருந்தார்.

திரு. வான் டென்பெர்க் உருவாக்கியுள்ள "டிரைவிங் சிமுலேட்டர்" கார் ஓட்டும் பயிற்சியை படிப்படியாக அளித்து சிக்கல்களை நீக்குகிறது. பயிற்சியின் முதல் கட்டத்தில், டெலிவிஷன் படம் போடப்படுகிறதில்லை. இதனால் பயிற்சியாளர் கியர் மாற்றும் முறைகளையும், கார் ஓட்டும் சாதாரண முறைகளையும் நன்கு கவனித்து அவற்றில் திறமை பெற்றுவிடுவார். காரை ஸ்டார்ட் செய்ய, ஓட்டிச்செல்ல, கியர்களை இரு திசைகளிலும் மாற்ற ஆகிய பயிற்சிகளைப் பெற சுமார் இரண்டு மணி நேரம் ஆகிறதாக அனுபவ பூர்வமாக அறிந்துள்ளனர்.

இந்த 'டிரைவிங் சிமுலேட்டரைக்' கொண்டு பல சோதனைகள் நடத்தப்பட்டு விட்டன. இது வரை இது 700 மணி நேரம் வேலை செய்திருக்கிறது. சாலையில் 19 மணி நேர பிரத்தியட்ச பயிற்சியளிப்பதைவிட இந்த இயந்திரத்தில் ஏழு மணி நேர பயிற்சியளிப்பதே போதுமானது என்றும், பயிற்சிச் செலவும் வெகு குறைவு என்றும் கண்டறியப்பட்டுள்ளது.

★

ஏரிக் கரை

★

ஏரிக் கரையின் அழகை நானும்
எடுத்துச் சொல்லவா ?
இன்ப முடனே அருகில் கண்டு
ரசிக்கத் துள்ளிவா !

ஊருக் கெல்லாம் ஒதுங்கி மிகவும்
உயர்ந்து இருக்குது !
ஒப்பில் லாத கவர்ச்சி யாலே
மனதைக் கவருது !

தொடர்ந்து காணும் மலைக ளெல்லாம்
சுவர்போல் தோன்றுது !
தூய வெள்ளை அன்னம் நீரில்
நீந்தி வருகுது !

அடர்ந்தி ருக்கும் மரங்கள் அங்கே
தூண்போல் விளங்குது !
அடடா பாராய் ! படகும் கூட
நம்மை அழைக்குது !

ஏரி நீரைத் தேக்கி மக்கள்
உயிரைக் காக்குது !
இயற்கை யழகால் கண்க ளுக்கும்
விருந்து படைக்குது !

ஏரிக் கரையைச் சேர்வோம் தம்பி
என்கை பற்றிடு !
என்றும் வீசும் தென்றல் இன்ப
இசையை முழக்குது !

— திருச்சி பாரதன்

கைத்தறித் தொழில்

★

புது வாழ்வும் பொலிவும் பெற்று வரும் இந்தியக் கைத்தறித் தொழில் இன்று அனைவரின் கவனத்தையும் கவர்ந்து விட்டது. ஆலைத் துணிகளின் செல்வாக்கினால் அழிந்து கொண்டிருந்த கைத்தறிக்குக் காந்தியடிகள் புத்துயிர் அளித்தார். சுதந்திரம் பெற்றபிறகு லட்சோப லட்சம் கைத்தறிகளுக்கு வலிவான அடிப்படையும் நிலையான வாழ்வும் கொடுக்க வேண்டுமென்ற கொள்கையுடன் அரசாங்கம் முழு கவனத்தையும் செலுத்தி வருகிறது.

கூட்டுறவு முறையில் கைத்தறித் தொழிலாளர்கள் ஒன்றுபட்டு வேலை செய்வது ஒன்றே வழி என்ற உண்மை இன்று தெளிவாகிவிட்டது. தமிழ் நாட்டில்தான் கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் நல்ல முன்னேற்றம் அடைந்து வருகின்றன.

ஆலைகளின் தயாரிப்பான துணிகளுக்கும் கைத்தறி ஜவுளிகளுக்கும் தயாரிப்புச் செலவில் அதிக வித்தியாசம் இருந்து வருகிறது. யந்திரப் போட்டி மட்டும் இதற்குக் காரணமல்ல. நூல் விலை அடக்கத்திலேயே ஆலைக்கும் கைத்தறிக்கும் வேறுபாடு இருக்கிறது நெசவாலைகள் பெரும்பாலும் நூற்பாலைகளாகவும் உள்ளன. தங்கள் நூலை அவர்கள் அடக்க விலைக்கு எடுத்து நெய்கிறார்கள். கைத்தறிக்கோ ஆலை நூல் வந்து சேரும்போது பற்பல காரணங்களால் விலை கூடிப் போகிறது.

எனவே, மில் தயாரிப்பின் மீது செஸ் வரி விதித்து, அந்தத் தொகையிலிருந்து கைத்தறித் துணியை வாங்கும் பொது மக்களுக்கு விலையில் கழிவு கொடுத்து வருகிறார்கள். இந்த ஏற்பாடு நிரந்தரமாக இல்லாதபடியால், விலைச் சலுகை கிடைக்கும் போது கைத்தறி ஜவுளி வியாபாரம் சீராக நடைபெறுவதும் மற்ற காலங்களில் படுத்துப்போவதுமாக அடிக்கடி கைத்தறிக்கு நெருக்கடி ஏற்பட்டு விடுகிறது.

இந்த ஆண்டு இப்படித்தான் 3 கோடி ரூபாய் மதிப்புள்ள கைத்தறி ஜவுளிகள் தமிழ் நாட்டிலுள்ள 1600 கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களிலும் ராஜ்ய சங்கத்திலுமாகக் கையிருப்பில் தேங்கி விட்டது. இதனால் கைத்தறி வர்த்தகம் தேங்கிப்போய் பெரும் நெருக்கடி ஏற்பட்டது. நமது ராஜ்யக் கூட்டுறவு சங்கப் பதிவாளரும் தொழில் அமைச்சரும் இந்த நிலையை உணர்ந்து கொண்டதுடன், ராஜ்ய சங்கத்தாரின் ஆலோசனைக்கும் அன்புடன் செவிசாய்த்து இந்த நெருக்கடியைத் தீர்க்க முன்வந்தனர். அகில இந்திய கைத்தறி போர்டாரும் ஒத்துழைத்தனர். இதனால் மார்ச் மாதம் முழுமையும் தமிழ் நாட்டில் எல்லா ஊர்களிலும் கைத்தறி ஜவுளித் தீவிர விற்பனைத் திட்டம் அமுலாக்கப்பட்டு ஆங்காங்கு பொருட்காட்சிகளும் நடை பெற்றன. தேங்கிக் கிடந்த மூன்று கோடி ரூபாய் மதிப்புள்ள ஜவுளியில் கிட்டத்தட்ட முக்கால்வாசி இந்த ஒரு மாதத்தில் விற்பனையாகி விட்ட அதிசயத்தைப் பார்க்கிறோம். சென்னையில் ராஜ்ய சங்கத்தார் இந்த ஒரு மாதமும் பெரிய திருவிழாவாகவே பொருட்காட்சியை நடத்திப்பெரும் வெற்றி கண்டிருக்கின்றனர். மாலை மூன்று மணியிலிருந்து இரவு 10 மணி வரை அலையலையாக வந்து குவிந்து கொண்டிருந்த மக்களின் கூட்டத்தை நேரில் கண்டவர்கள் கிறுகிறுத்துப் போயிருப்பார்கள். சுமார் 200க்கு

மார்ச் 2-ல் கைத்தறிப் பொருட்காட்சியை முதல் அமைச்சர் திறந்து வைத்தார். ராஜ்ய சங்கத் தலைவர், முதலமைச்சருக்கு சில அரிய ஜவுளி ரகங்களைக் காண்பிக்கிறார்.

மேற்பட்ட பிரதம சங்கங்களின் ஜவுளிக் கடைகளில் கண்ணைப் பறிக்கும் ரகங்களில் அலங்காரமாக வைக்கப்பட்டிருந்த ஜவுளி ரகங்கள் யாவும் கைத்தறித் தயாரிப்புக்களே என்பதை அறிந்து வியப்பும் பெருமிதமும் அடைந்த மக்களின் எண்ணிக்கைக்கு அளவில்லை. அன்றாடம் அரிய கலை நிகழ்ச்சிகளும் பேரறிஞர்களின் சொற்பொழிவுகளும் பொருட் காட்சியைப் பொருள் நிறைந்த காட்சியாகச் செய்தன. ஒருமாத காலம் சென்னையில் கைத்தறித் துணியைப் பற்றிய பேச்சாகவே இருந்ததென்றால் வியப்பில்லை.

கைத்தறித் தொழிலை விஞ்ஞான முறையில் பலவிதமான புதுமைகளையும் சாதனங்களையும் பொருத்தி அற்புதமான ஜவுளிகளை சாஸ்திரீயமாகவும் நீடித்து உழைக்கக் கூடியதாகவும் செய்து வருகின்றனர். முறையான பயிற்சிகளும் ஆராய்ச்சிக் கூடங்களும் வேலை செய்கின்றன. இந்தத் தொழிலுக்கு நிரந்தரமான பாதுகாப்புத் தருவதில் அரசாங்கம் கவனம் செலுத்தினால் அடிக்கடி நேரக் கூடிய நெருக்கடிகளைத் தவிர்க்க முடியும். இந்தத் துறையில் நிபுணர்கள் பாடுபட்டு வருகிறார்கள் என்றே சொல்ல வேண்டும்.

ராஜ்ய சங்கத் தலைமையை ஏற்றுத் திறம்பட நடத்திவரும் எம். பி. நாச்சிமுத்து அவர்களும் ஏனைய டைரக்டர்களும் ஒத்த மனத்தினராக இருந்து சங்கத்தைச் சிறப்பாக இயக்கி வருகின்றனர். நெசவாளர் நலனை முன்னிட்டு வெளிவரும் ‘நெசவாளி’ என்ற மாத இதழ் மிகச் சிறந்த முறையில் வெளி வந்து கொண்டிருக்கிறது. கூட்டுறவு இலாகா இணைப்பதிவாளர் அந்தஸ்திலுள்ள



அமைச்சர் கனம் கக்கன் அவர்கள் கைத்தறிப் பொருட்காட்சியில் பேசிக்கொண்டிருக்கிறார்.

அதிகாரி ஒருவர் இந்த சங்கத்தின் வர்த்தக நிர்வாகியாக இருந்து பணிபுரிந்து வருகிறார். நாடெங்கும் விற்பனை நிலையங்கள் இதற்கு உள்ளன. "கோ-ஆப்-டெக்ஸ்" என்றதும் நம்பிக்கையும் நாணயமும் உறுதியும் கவர்ச்சியுமிக்க கைத்தறித் துணிகள் என்ற நிலைத்த புகழ் உண்டாகி விட்டது. கைத்தறித் தொழிலின் மேன்மைக்கும் நிலையான நல்வாழ்வுக்கும் அயராது பாடுபட்டு வரும் ராஜிய சங்கத்தாருக்கு நமது பாராட்டுக்கள். ★

அச்சுக்கூடங்களுக்கு

தேவையான யந்திரங்களுக்கு
எம்மை அணுகுங்கள்.
MTF கட்டிங் மெஷின்கள்
உறுதிக்குப் பெயர் பெற்றவை

பாரதி, வள்ளுவர், லலிதா, அம்பிகா
தமிழ் எழுத்துக்கள் விசேஷமானவை.

மதராஸ் டைப் பவுண்டரி, சென்னை-1.

தங்கம்
தரம்
குறைந்தாலும்
புகழ் மிக்க
ஸ்ரீ அம்பாள் ஆபீஸர்ஸ் பொடி
மணமும், குணமும் குறைவதில்லை
58 ஆண்டுகளுக்கு மேலாக
கீர்த்தி பெற்று விளங்குவது,
யாவரும் விரும்புவது.
SRI AMBAL SNUFF
No 1
POST BOX No 3 MADRAS
SRI AMBAL SNUFF
REGISTERED
ஸ்ரீ அம்பாள் மூக்குத்தூள்
ஸ்ரீ அம்பாள் ஆபீஸர்ஸ் பொடி
10, 25. கிராம் டின்களில்
எங்கும் கிடைக்கும்
டிரேட் மார்க் லேபிளை
கவனித்து வாங்கவும்.
ஸ்ரீ அம்பாள் அண் கோ.
201, தங்கசாலைத் தெரு, சென்னை.1.

போர் முனைக்குச் செல்லும் நம் விமானங்கள்

★

விமானி விமானத்தின் வேகத்தை சிறிது சிறிதாகக் குறைத்துக் கொள்கிறார். ஜவான்களுக்கு வேண்டிய உடைகளையும், உணவுப்பொருள்களையும், ஆயுதங்களையும், ஏற்றிச் செல்லுகிற இந்திய விமானம் குறுகிய மலை இடுக்குகளின் வழியாக தாழ்ந்து பறந்து பள்ளத்தாக்கைச் சுற்றியுள்ள மலைகளின் ஓரமாக வட்டமிடுகிறது. மேலே இருந்து பார்க்கும் போது சின்னஞ் சிறியதாகத் தோன்றிய ஊசி இலை மரங்கள் இப்போது மிகப்பெரியதாகத் தெரிகின்றன. விமானம் இப்போது அம்மரங்களைத் தொட்டது போலப் பறக்கிறது. உடனே விமானத்தை நேர் எதிர்புறமாகத் திருப்புகிறார். குன்றின் மீது மோதுவது போல ஒரு தோற்றம். அதைத் தவிர்ப்பதற்காக யந்திரங்களை முடுக்கி விட்டு மலையோரமாக தாற்காலிகமாக அமைக்கப்பட்டிருக்கும் விமானத் தளத்தில் இறங்கத் தயாராகிறார். இன்னும் 100 அடிகள் தான் இருக்கின்றன. கடைசி முறையாக யந்திரங்களையும், வேகத்தைக் காட்டும் கருவிகளையும் ஒரு முறை பார்த்துக் கொண்டு விமானத்தின் அடிச்சக்கரங்களை தாழ்த்துகிறார். இப்போது விமானம் இறங்க வேண்டிய திட்டின் ஓரத்திற்கு வந்து விட்டார். எஞ்சினை நிறுத்தி விட்டு திட்டுக்கு நேராகப் பறக்கிறார். விமானத்தின் சக்கரங்கள் கரடு முரடான அத்திட்டுக்களைத் தொட்டு விட்டு ஓடுகின்றன. இன்னும் கொஞ்சம் சென்றால் திட்டின் மறுகோடி வந்துவிடும். திடீரென்று பிரேக்குகளை பிரயோகித்து நிறுத்துகிறார். இந்திய சரக்கு விமானம் நேபா பகுதியில் இப்போது முன்னணிப் பகுதியில் வந்து நிற்கிறது.

மனிதர்கள் நடமாட்டமில்லாத இப்பகுதியில் இயற்கை தன் செல்வங்களை தாராளமாக வாரி வழங்கியிருக்கிறது. இருபக்கங்களிலும் சுமார் 16,000 அடி உயரத்தில் மலைகள் வானத்தை நோக்கி கம்பீரமாக நிற்கின்றன. மலைச் சரிவுகளில் வானளாவி நிற்கும் ஊசி இலை மரங்கள் பச்சைக் கம்பளம் விரித்தாற்போல் காட்சி தருகின்றன. அவற்றினூடே வீசும் காற்று மெல்லிய நாதத்தை கீழே வளைந்து நெளிந்து செல்லும் நதி வர்ண ஜாலத்தைப் பரப்பிக்கொண்டு ஓடும். ஆற்றின் வெண்மையான மணல், மலைச் சரிவுகளில் பச்சை நிறத்திற்கும், தண்ணீரின் தூய நிறத்திற்



விமானப் படையின் ஒரு சிறப்பு அம்சம் அணிவகுத்துப் பறக்கும் ஒரு சாகஸம். சாரி வைத்தும் நிகராகப் பறந்தும்செல்லும் விமானங்கள் பரஸ்பப் பாதுகாப்புக்குப் பயன்படுவதுடன், அந்த சாகஸத்திற்கு ஒரு பரிசாகவும் அமைகிறது.

கும் அழகு சேர்க்கிறது. இயற்கையின் எழில் செறிந்து கிடக்கிறது.

அமைதியான இந்த இயற்கைச் சூழ்நிலைகளுக்கு இரண்டு மைல்களுக்கப்பால் விரோதியின் பீரங்கிகள் கொடூரமான சப்தத்தை எழுப்புகின்றன. யந்திரத் துப்பாக்கிகள் பயங்கரமாக அலறுகின்றன. நமது விரோதிகள் நமது மண்ணில் புக விடாமல் நமது வீரர்கள் தடுத்து நிற்கின்றனர்.

கிழக்கில் சூரியன் உதயமானது முதல் மாலை இருள் கவிழ்வது வரையில் நமது சரக்கு விமானங்களின் ஓசை இப்பள்ளத்தாக்கில் எதிரொலித்துக் கொண்டிருக்கும். அவைகளில் போர் முனையிலிருக்கும் நமது வீரர்களுக்காக உணவும் உடையும், ஆயுதங்களும் கொண்டு வரப்படுகின்றன. மலை இடுக்குகளுக்கிடையே பறந்து அவைகளை கீழே போடுவதும், கரடு முரடான விமானத் திட்டுகளிலிருந்து மேலே பறப்பதும் இறங்குவதும் சாதாரணமான வேலையல்ல. அதிகாலை முதல் இவ்வேலையில் ஈடுபடுகிற விமானப்படை விமானிகள் மாலை வெகு நேரத்திற்குப் பிறகு தான் நிறுத்திக் கொள்ளுகிறார்கள்.

திட்டுப் பகுதியிலிருக்கும் அவர்களுடைய தளம் அடர்ந்து வளர்ந்த காடுகளை அழித்து உண்டாக்கப் பட்டதாகும். சுற்றியுள்ள மரங்கள் நூறடிக்கும் மேலாக உயர்ந்து வளர்ந்திருக்கின்றன. அதன் கீழே நெருங்கிப் படர்ந்திருக்கும் செடிகள் சூரியனின் ஒளியைக்கூட அவ்வளவாகத் தரையில்பட விடுவதில்லை.

சூரிய உதயத்திற்கு ஒரு மணி நேரத்திற்கு முன் விமானத்திற்கருகில் விமானச் சிப்பந்திகள் அன்றைய வேலைக்கு விமானத்தை தயார் செய்யும் பணியில் ஈடுபடுகின்றனர். கீழ்த் திசையில் சூரியன் உதயமானதும் விமானிகள் அவர்களுக்கேற்ற ஆடைகளை அணிந்து கொண்டு, கையில் தொப்பியைப் பிடித்துக் கொண்டு விமானத்தை நோக்கி வருகின்றனர். போர் முனைக்கும் விமானத் தளத்துக்குமிடையே பறந்து, பொருள்களையேற்றி அங்கு கொண்டு போட்டுக் கொண்டிருப்பார்கள். விமான யந்திரங்களில் விமானி மட்டுமே இருக்கிறார். ஆட்களையும், சாதனங்களையும் ஏற்றிக் கொண்டு யந்திரங்களைச் சரி பார்த்து, விமானத்துக்கு முன்னுள்ள விசிறியை ஓட்டிப்பார்த்து, தக்க சமயத்தில் பிரேக்கைத் தளர்த்தி தரையை விட்டுக் கிளம்பச்செய்யும் வேலை எல்லாம் அவரே கவனித்துக் கொள்ள வேண்டும்.

கரடு முரடான தரையில் முதலில் தள்ளாடிப் பறக்கிற விமானம் சிறிது சிறிதாக வேகத்தை அதிகரித்துக் கொண்டு நிலத்தை விட்டுக் கிளம்புகிறது. விமானி யந்திரங்களை முடுக்கிவிட்டுக் கொண்டு மலை உச்சியை நோக்கிப் பறக்கிறார். காலை வெளிச்சத்தில் மலை உச்சிகள் நிழல் போலவே தோன்றுகின்றன. அவைகளை நோக்கி நெருங்கிப் பறந்து வந்த பிறகு அதற்கிடையே குறுகிய இடைவெளி இருப்பது தெரியும்.

விமானி சிறிதளவு தயக்கம்காட்டாது அபாயகரமான அந்த இடுக்கு வழியாகப் புகுந்து விடுகிறார். கையிலிருக்கும் படத்தின் உதவியாலும், சாதாரணக் கண்களுக்குத் தெரியும் அடையாளங்களைக் கொண்டும் வழி தெரிந்து கவனமாகச் செல்லவேண்டும். திறந்த வழியில் வரும்போது இருமருங்கிலும் மரங்களடர்ந்த மலைச் சரிவுகள் பள்ளத் தாக்கை நோக்கிப் பாய்ந்து செல்லுகின்றன. கீழே குறுகிய மலை ஆறு, பாறைகளை மோதிக் கொண்டு ஓடுகின்றன, இப்பகுதிகளில் விமானத்தை ஓட்டுவதுதான் மிகவும் பயங்கரமானது. ஏதாவது சிறிய கோளாறு ஏற்பட்டாலும் அங்கு இறங்குவதற்கு இடமில்லை. சில இடங்களில் விமானத்தைத் திருப்புவதற்குக்கூட இடமில்லாதபடி பள்ளத்தாக்கு குறுகியதாக இருக்கிறது. இவை எல்லாம் போதாது என்று, சில நேரங்களில் மழையும் மேகங்களும் மறைத்து விடுகின்றன. போர் முனைகளிலிருக்கும் வீரர்களுக்கு உணவையும், உடையையும் வீட்டிலிருந்து வரும் கடிதங்களையும் எடுத்துச் செல்லும் விமானிகள் தினமும் இத்தகைய பயங்கரமான அனுபவங்களைச் சமாளித்து வருகின்றனர். சூரிய ஒளி மறைந்து இருள் கவிழத் தொடங்கியதும் விமானம் கடைசி முறையாக அன்று தளத்தில் இறங்குகிறது. அதிகாலையிலிருந்து மாலை வரை விடாது பணியாற்றி வந்த தள விமானச் சிப்பந்திகள் இன்னும் ஒரு மணி நேரம் வேலை செய்து விமானத்தைச் சரி பார்க்க வேண்டியிருக்கிறது.

இந்த அனுபவம், தளத்திலிருந்து போர் முனைக்கருகில் செல்லும் விமானிகளின் துணிகரச் செயல்களை விளக்குகிறது. ஆனால் இதே மாதிரி தினமும் எத்தனையோ தடவை எத்தனையோ விமானிகள் பறக்க வேண்டியிருக்கிறது. பகல் முழுவதும் பறந்து களைப்படைந்து இரவு களைப்பாறுவதற்காகத் தங்கள் குடிசைகளை நோக்கிச் செல்லுகிறார்கள். விடிவதற்கு முன் மறுபடியும் போர் முனையிலிருக்கும் தங்கள் நண்பர்களுக்கு உதவத் தயாராகயிருக்க வேண்டும். ✱

★

எல்லையைக் காத்திட எல்லையின்றி வழங்குவீர்.

யந்திர சக்தியும் மனித உழைப்பும்

கோவையின் தலைசிறந்த தொழில் அதிபரும் பிரசித்தி பெற்ற எஞ்சினீயரும், டெக்ஸ்டூல் கம்பெனியின் தலைவருமான திரு. D. பாலசுந்தரம் அவர்களுடன் ஒரு பேட்டி.

★

16 கதிர்கள்கொண்ட சிறிய நூற்பு யந்திரம் ஒன்றை, கோவை டெக்ஸ்டூல் கம்பெனியார் தயாரித்திருக்கிறார்கள் என்ற செய்தியை முன்பொரு சமயம் அறிந்தபோது அதைப் பார்க்க விரும்பினேன். கோவைப் பொருட் காட்சி ஒன்றில் அதைப் பார்வையிடும் வாய்ப்புக் கிடைத்தபோது அதன்தோற்றம் பற்றிய பல தகவல்களை அறிந்து பெரிதும் வியப்பும் மகிழ்வும் அடைந்தேன்.

அம்பர் சர்க்கா 4 கதிர்களில் நூல் நூற்பதற்காகக்கண்டு பிடிக்கப்பட்ட பிறகு, இன்னும் சில அதிகப்படியான கதிர்களைப் பொருத்தி சிறிய யந்திரம் ஒன்றை ஏன் தயாரிக்கக்கூடாது என்றஎண்ணமும் எழுச்சியும் உண்டாகியிருக்கிறது. இந்தத் துறையில் சிந்தித்துப் பரிசோதனை மேற்கொண்ட அறிஞர்கள் திரு. பாலசுந்தரமும், பொள்ளாச்சி தொழில் அதிபர் திரு. என். மகாலிங்கமும் ஆவர். டெக்ஸ்டூல் தொழிற் சாலையில் தீவிர ஆராய்ச்சிகள் செய்து 16 கதிர்கொண்ட நூற்ப யந்திரத்தை இவர்கள் உருவாக்கினர். காதி கிராமக் கைத் தொழில் போர்டாரும், பிரதமர் பண்டித நேருவும், திட்டக்கமிஷன் அங்கத்தினர்களும் இந்த யந்திரம் வேலை செய்வதை நேரில்கண்டு இதை அங்கீகரித்திருக்கின்றனர்.

இந்த யந்திரம் சாதாரண குடும்பம் ஒன்றில் சொற்பச் செலவில் அமைக்கப்படக் கூடியது. நாள் ஒன்றுக்கு 5 ராத்தல் பஞ்சை நூலாக்குவதற்கு ஏற்றது. சராசரி நாள் ஒன்றுக்கு மூன்று ரூபாய் வருமானம் ஒரு குடும்பத்துக்கு எளிதில் கிடைக்கக்கூடியதாக இதன் பயன் அமைந்துள்ளது. தக்ளி, ராட்டை, அம்பர் சர்க்கா என்று கொஞ்சம் கொஞ்சமாக முன்னேறி இப்பொழுது 16 கதிரும், பின்னர் 32 கதிரும்கொண்ட சிறிய நூற்பு யந்திரத்தையும் பயன் படுத்துவதென்றால், பெரிய யந்திர சாலைகளையே அமைத்து உற்பத்தியைப் பெருக்குவதில் தானே அதிகமான பலன் இருக்கிறது என்ற எண்ணம் தோன்றுகிறது.

ஆலைகள் மனித உழைப்பைத் தடுத்து வேலையில்லாத் திண்டாட்டத்தை ஏற்படுத்தி விடுமென்றல்லவோ காந்தியடிகள் கைராட்டையைக் குறைந்த பட்ச யந்திரமாக ஏற்றுக்கொண்டார். அப்படியிருக்க இந்தப் பதினாறுகதிர் சிறுயந்திரம் காந்தீய அடிப்படையில் அங்கீகரிக்கத் தக்கது தானா என்ற தத்துவார்த்த சந்தேகம் எனக்குத் தோன்றியது. நெடுநாள் வரையிலும் இந்த எண்ணம் மனதில் உறுத்திக்கொண்டேயிருந்தது. – சமீபத்தில் டெக்ஸ்டூல் ஸ்தாபனத்தின் சாதனைகளை நேரில் கண்டறிந்து விரிவாக அதுபற்றிய விமர்சனம் எழுத விரும்பி நேரில் சென்று கண்டபோது என் அடிப்படை ஐயப்பாட்டைப் பற்றியும், டெக்ஸ்டூல் அதிபர் திரு. பால சுந்தரம் அவர்களுடன் விவாதிக்கும் வாய்ப்புக் கிடைத்தது.

டெக்ஸ்டூல் தொழிற்சாலையின் பிரதான தொழிற் கூடத்தையும் அதன் மற்றும் மூன்று கிளைகளையும் நேரில் சென்று வேலை நடைபெறுகின்ற பாங்கைக் கண்டேன். மண்ணில் கலந்திருக்கும் இரும்புக் கனியை சுத்தம் செய்து எடுப்பது முதல் ராட்சத யந்திரங்களாக அவற்றை உருவாக்கும் வரையில் ஓய்வில்லாத பணி இங்கு நடைபெறுகிறது. தொழிற்சாலைகளையெல்லாம் நண்பர் செல்வராஜ் என்னுடன் இருந்து சுற்றிக் காட்டினார். ஆங்காங்கும் பொறுப்புள்ள நிபுணர்கள் ஒவ்வொருபகுதியின் வேலையையும் அன்புடன் விளக்கினார்கள். யந்திர உற்பத்தித் தொழிலைப்பற்றிய அடிப்படை உண்மைகளைச் சற்றும் அறிந்திராத என்போன்ற ஒரு சாதாரண மனிதனுக்கும் நன்கு விளங்கும்படி தொழில் உலகின் நவீன யந்திர சாதனங்களின் வளர்ச்சியை அவர்கள் தெளிவாக விளக்கியது எனக்குப் பெரு மகிழ்வையும் பல உண்மைகளைப் பற்றிய தெளிவையும் உண்டாக்கியது.

டெக்ஸ்டூல் கம்பெனியார், நமது நாட்டில் நூற்பு நெசவாலைகளுக்கு வேண்டிய சகலவிதமான யந்திரங்களையும் தாங்களே தயாரித்துக் கொடுத்து வருகிறார்கள் என்பது மட்டும் தான் நான் முன்பே அறிந்திருந்த செய்தி. பல நூற்பாலைகளில் டெக்ஸ்டூல் கம்பெனி தயாரித்திருந்த யந்திரங்களையே முழுவதும் அமைத்து வேலைசெய்வதைப் பார்த்திருந்தேன். ஆனால் இது மட்டுமே டெக்ஸ்டூல் கம்பெனியின் சாதனையல்ல வென்றும் இந்தியாவின் யந்திர விஞ்ஞானக் கலையில் டெக்ஸ்டூல் சாதனை அளவிடற்கரிய அளவுக்குத் தலைமை

வகிக்கும் பேராற்றில் பெற்று விளங்குகிற தென்றும் நேரில் கண்டுகொண்டேன்.

தொழிற்சாலைகளைப் பார்வையிட்டுத் திரும்பிய பிறகு அதிபர் பாலசுந்தரம் என்னிடம் கேட்ட முதல் கேள்வி "என்ன கருதுகிறீர்கள்?" என்பது தான். "பாரதியாரின் கனவுகள் பலப்பல ஒவ்வொன்றாகப் பலித்து வருகின்றன. ஆனால் பாரதியாருக்கு யந்திரத் தொழிற்சாலைகளைப்பற்றி எவ்வளவு தீர்க்கதரிசனமான பேரறிவும் இருந்திருக்கிறது என்பதைத் தான் டெக்ஸ்டூல் எனக்கு உணர்த்துகிறது" என்றேன். கோவையிலுள்ள டெக்ஸ்டூல் கம்பெனியார் ஏதோ சில யந்திரங்களை மட்டும் தயாரிக்கிறார்கள் என்று எண்ணக்கூடாது. எந்த யந்திரத்தை வேண்டுமானாலும் தயாரித்துவிடக் கூடிய மூல யந்திரங்களையும் தயாரிக்கிறார்கள். இவற்றைத் தயாரிக்கப் பயன்படும் இரும்பைக்கூட இவர்களே தயாரித்துக் கொள்ளுகிறார்கள். இவற்றை நேரில் பார்க்கும்போது, வெளிநாடுகளைச்சிறிதும் எதிர்பார்க்காமல் ஒரு சிறு இரும்புத் துண்டுக்கும் பிறர்கையை எதிர் பார்க்காமல் எத்தகைய பிரம்மாண்டமான, புதுமையான யந்திரங்களையும் தாமே தயாரித்துக் கொள்ளக்கூடிய சக்தி படைத்த திரு. பாலசுந்தரம் போன்ற கலை நிபுணர்கள் நம்மிடை இருக்கிறார்கள் என்பது புலனாகிறது. இத்தகைய மேதைகளின் உழைப்பால் தான் இந்தியாவின் இயந்திர விஞ்ஞான சக்தி உலகில் பிறநாடுகளுடன் சமமாகத் தலை நிமிர்ந்து நிற்க இயலும் என்பதை உணரும்போது, ஒவ்வொரு இந்தியனின், சிறப்பாக ஒவ்வொரு தமிழனின் தலையும் கம்பீரமாக நிமிர்கிறது.

யந்திரத் தொழிலில் சில அடிப்படையான செய்திகளை வாசகர்கள் முதலில் தெரிந்துகொள்ள வேண்டும். இயந்திரங்களில் இரண்டு வகை உண்டு. ஒன்று பொருளை உற்பத்தி செய்யும் யந்திரங்கள். மற்றொன்று அந்த யந்திரங்களையே உற்பத்திசெய்யும் தாய் யந்திரங்கள். இதை 'கேபிடல் குட்ஸ்' என்பார்கள். நமது நாட்டில் யந்திரங்களில் பல்வேறு பொருள்களை உற்பத்தி செய்யும் ஆலைகள் இருக்கின்றன. இவற்றிற்கான யந்திரங்கள் பெரும்பாலும் வெளிநாடுகளில் இருந்தே நெடுங்காலமாக இறக்குமதி செய்யப்பட்டு வருகின்றன. இந்த இயந்திரங்கள் பொருளை உற்பத்தி செய்கின்றன. இந்த இயந்திரங்களுக்கு வேண்டிய பகுதிகளைப் புதுப்பிக்க வேண்டுமானால் அந்தப் பகுதிகளையும் அவ்வவ்போது வெளிநாடுகளிலிருந்தே நாம் தருவித்துக்கொண்டு வந்தோம். எனவே நமது தொழிற்சாலைகளில் பொருளை உற்பத்தி செய்யும் யந்திரங்களை வெளிநாடுகளில் இருந்து வாங்கும் பொருட்டு ஏராளமான செல்வத்தை வெளிநாடுகளுக்கு நாம் அனுப்பிக் கொடுக்கிறோம்.

இவ்வகையில் நமதுசெல்வம் பெரும் அளவில் வெளிநாடுகளுக்குச் செல்வதைத் தடுக்கவேண்டுமானால் இந்த யந்திரங்களை யெல்லாம் நாம் இங்கேயே தயாரிக்கவேண்டும். ஆகவே யந்திரங்களைத் தயாரிக்கும் மூல யந்திரங்களை மட்டும் வெளிநாடுகளிலிருந்து வரவழைத்துக் கொண்டுவிட்டால், அவற்றைக்கொண்டு இங்கேயே நமக்கு வேண்டிய தொழிற்சாலை யந்திரங்களை யெல்லாம் நாம் தயாரித்துக் கொள்ளலாம். ஆகவே பொருள்களைத் தயாரிக்கும் யந்திரங்களை வெளியிலிருந்து வாங்குவதைக்காட்டிலும் யந்திரங்களைத் தயாரிக்கும் யந்திரங்களையே வாங்கிக்கொள்வது லாபகரமானது என்பது எளிதில் விளங்குகிறதல்லவா? ஆகவே நம்முடைய நாட்டுக்கு வேண்டிய பல மூலயந்திரங்களையும் நாம் இது காறும் வாங்கி வருகிறோம். ஆனால் டெக்ஸ்டூல் கம்பெனியாரோ, அந்த மூலயந்திரங்களைக்கூட வெளி நாட்டிலிருந்து வாங்க வேண்டிய அவசியமில்லாமல் அவற்றையும் நாம் இங்கேயே தயார்செய்து கொள்ள முடியும் என்று நிரூபித்து அந்தத்துறையில் நல்ல வெற்றியைக் கண்டு வருகின்றனர்.

யந்திரசாலைகளை இங்கே அமைப்பதில் மூல யந்திரங்களையே நாம் தயாரிப்பது நலம் என்பது தெரிந்த பிறகு, இவற்றைத் தயாரிப்பதற்கான இரும்புக்கு வெளிநாட்டுத் தயவை எதிர் பார்க்கும் நிர்ப்பந்தம் இருந்துகொண்டே யிருக்கிறது. இதுவும் இப்பொழுது தீர்வு காணப்பட்டு இந்தியாவிலேயே இரும்பு உற்பத்தியும் நடைபெறுகிறது.

எனவே ஆலைகள் வைப்போம் என்று உறுதியுடன் மகிழ்ந்து கூறிய பாரதியார், இரும்பைக் காய்ச்சி உருக்கிடுவீரே என்று கூறிய பிறகே யந்திரங்கள் வகுத்திடுவீரே என்று கூறினார். அதன் பிறகுதான் அந்த யந்திரங்களைக் கொண்டு பல அரிய பொருள்களைத் தயாரிக்க வேண்டுமென்றார். அந்த நாளிலேயே பாரதியாருக்கு, யந்திரத் தொழில் பற்றிய ஆழ்ந்த அடிப்படையான உணர்ச்சி எவ்வளவு அழுத்தமாக இருந்திருக்கிறது என்ற வியப்பைத்தான் டெக்ஸ்டூல் அதிபரிடம் வெளியிட்டேன்.

டெக்ஸ்டூல் கம்பெனியார், மண் கலந்த கனிப்பொருளை உருக்கி இரும்பைக் காய்ச்சிக்கொண்டிருக்கிறார்கள். இரும்பையும் எஃகையும் தயாரிக்கிறார்கள். அவற்றைக்கொண்டு யந்திரக் கருவிகள் தயாரிக்கிறார்கள். அந்தக் கருவிகளைக் கொண்டு மூல யந்திரங்களைத் தயாரிக்கிறார்கள். அந்த மூல யந்திரங்களைக்கொண்டு பற்பல பொருள்களை உற்பத்தி செய்யவல்ல தொழில் யந்திரங்களையும் தயாரிக்கிறார்கள். இப்படியாக மண்ணுக்கு அடியில் இயற்கையன்னை வழங்கும் இரும்புக் கனிப்பொருளைச்செப்பம் செய்து உருக்கி வார்ப்பது முதல் உழைத்துப் பொருளை உற்பத்தி செய்யும் யந்திரங்கள் வரை அனைத்தையும் நாமே செய்து கொள்ளக்கூடிய, சர்வ சக்திபடைத்த தொழில் உலகம் டெக்ஸ்டூல் என்பதை அறியும்

போது நமக்கு எல்லையற்ற மனநிறைவும் நாமே நமது கால்களால் ஊன்றி நிற்க முடியுமென்ற கம்பீர உணர்ச்சியும் பிறக்கின்றன.

யந்திரத் துறையில் நாம் வேகமாக முன்னேறிய போதிலும் அடிப்படையான ஒரு தத்துவார்த்தச் சிக்கல் நமது உணர்ச்சியில் இருந்து வருகிறது. எல்லாம் சரி. யந்திரமயமாக நமது வாழ்வை நாம் மாற்றிக்கொண்டுபோகின்ற வேகத்தைப் பார்த்தால் காந்தியடிகளின் யந்திர எதிர்ப்புக் கொள்கையை நாம் புறக்கணித்து விட்டது போல் ஆகிறதல்லவா என்ற கவலை உண்டாகிறது.

சுதந்திரம் கிடைத்த பிறகு சமுதாய அடிப்படையிலும் தனிமனித உணர்விலும் நமது தேசிய வாழ்க்கை ஒவ்வொரு துறையிலுமே காந்தியடிகளுக்கு மறுப்புச் செய்வது போன்ற ஒரு போக்கில் போய்கொண்டிருக்கிறது. அஹிம்சை, மதுவிலக்கு, யந்திர எதிர்ப்பு இவை மூன்றும் காந்தீயத்தின் அடிப்படைகள். இம் மூன்று துறைகளிலும் காந்தீயத்திற்கு எதிராகவே இன்று இயங்குகிறோம்.

அஹிம்சையைப் பொறுத்த வரையில் காந்தியடிகளின் வாழ்நாளிலேயே அந்தத் தத்துவம் நமது உணர்ச்சி மதிப்பைப் பெற்றிருந்ததேயன்றி நமது அறிவுத் தெளிவில் நிலைபெற்ற ஒரு தத்துவ உண்மையாக இருந்துவிடவில்லை. காந்தியடிகள் அஹிம்சையை வீறுடைய சமயக் கொள்கை என்றே போதித்தார். ஆனால் அஹிம்சையின் முழு உருவத்தையும் முற்றிய பயனையும் தாம் முடிவாகக் கண்டுபிடித்துவிடவில்லை யென்றும், தமது வாழ்வை ஒரு சத்திய சோதனை என்றுமே அவர் கூறிவந்தார். ஆயுதந் தாங்கும் அளவுக்குச் சக்தியற்றுக் கிடந்த மக்களாகிய நமக்கு அவர் காட்டிய அஹிம்சை வழி ஒரு ஆறுதலாக இருந்ததேயல்லாது, அதுவே உலகில் மனிதனுடைய சகல துயரங்களுக்கு மேற்ற துணிவுமிருந்த பரிகாரம் என்ற நிச்சய புத்தியோ நம்பிக்கையோ ஏற்பட்டிருந்ததென்று கூறுவதற்கில்லை. அந்த மகான் எதைப் புனித மென்றும் பொருளுடையதென்றும் கருதிவந்தாரோ அந்த அஹிம்சைக்கு ஒருபெரும் மறுப்புப் போல, ஒரு மூடனின் கைக் குண்டு அவர் முன் யமனுக வந்து நின்றது. தமது சத்ய சோதனையில் கண்ட பேரொளி என்று அவர் நம்பி வந்த அஹிம்சையின் சக்தி, தோற்றுப் போய்விட்டதென்ற அயர்வுணர்ச்சி, உயிர் பிரியும் அந்தக் கணத்தில் அவருக்கு ஏற்பட்டதா? அல்லது தமது சத்ய சோதனையில் அஹிம்சையின் பெருமையை நிலைநாட்டும் மகா தியாகம் ஒன்றைத் தாம் புரிய நேர்ந்தது என்ற மன நிறைவும் அமைதியுமே அவருக்கு அந்த மரண வேளையில் ஏற்பட்டதா? நம்மால் அதைக் கற்பனை செய்யவே முடியாது. கொலைகாரனைப் பழி தீர்க்காமல் நாம் அமைதி பெற முடியவில்லை.

இப்பாலும் இன்று சீன ஆக்ரமிப்பு வந்துள்ள நேரத்தில் அஹிம்சையின் பெருமையைச் சோதிக்கும் சக்தி நமக்கில்லை. யார் மீதும் சினமோ பகையோ கொண்டு நாம் இன்று ஆயுதந் தாங்கவில்லையாயினும் தற்காப்புக்காக வேனும் ஆயுதந் தாங்காமல் தீராது என்ற நிலையில் போர் முனைப்பில் தீவிரமாகவே இறங்கியுள்ளோம்.

அஹிம்சை என்னும் அடிப்படைத் தத்துவம் நமது சக்திக்கு அப்பாற்பட்டதாகிவிட்ட ஒன்றினுலேயே காந்தியடிகளிடமிருந்து நாம் வெகு தொலைவில் எட்டிப் போய்க்கொண்டிருக்கிறோம்.

அடுத்து, மதுவிலக்கை எடுத்துக்கொண்ட போதிலும், நமது போக்கு காந்தீயத்துக்கு மாறுகவே தான் இருக்கிறது. அரசாங்க ரீதியில் மதுவிலக்கை அமுலாக்கத் தொடங்கி 25 ஆண்டுகள் முடிந்த பிறகும் நாடு முழுவதிலும் மதுவை நாம் விலக்கியாகவில்லை. அத்துடன் மதுவிலக்கையே ரத்துசெய்துவிட்டால் என்ன என்ற எண்ணம் சில தேசீயவாதிகளிடையும் சிந்தனையைத் தூண்டியிருப்பதைப் பார்க்கிறோம்.

இவை போன்றே யந்திர மயமாக்குகின்ற பாதையிலும் காந்தீயப் பொருளாதாரக் கொள்கைகளில் நாம் வைத்துள்ள நம்பிக்கை பொருளற்றதாகி வருகிறதோ என்று தோன்றுகிறது. அஹிம்சையைப்போல ராட்டையின் தத்துவம் நமக்கு விளங்காமற் போகவில்லை. ஆனால் அதன் பொருளாதார உண்மை நமக்கு முற்றிலும் விளங்கிவிட்டிருக்கிறதென்று கூறிவிட முடியாது.

ராட்டையின் பொருளாதார உண்மை நமக்கு விளங்கியிருந்த அளவு என்னவென்றால், யந்திரத்தினால் பலபேருடைய உழைப்புக்கு வழியில்லாமல் போகிறது என்பதுதான். எனவே வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்கவேண்டுமானால் கூடுமானவரையிலும் எதையும் யந்திரத்தால் செய்யாமல் மனித உழைப்பைக்கொண்டு தயாரிக்கச் செய்வது அவசியம் என்பதுதான் நமக்கு விளங்கியிருந்த உண்மை. தவிரயும், ராட்டையும் யந்திரம் அல்லவா என்ற குதர்க்க வாதமும் ஒருபுறம் இருந்துகொண்டுதான் இருந்தது. தொடையில் கயிறு திரிப்பது போலக் கையால் பஞ்சைத் திரித்து நூல் இழைப்பதானுல் இன்னும்பல பேருக்கு வேலை யிருந்துகொண்டிருக்குமே என்ற விதண்டா வாதத்தை நாம் சகிக்க முடியாவிட்டாலும், ஒருவேளை இது நியாயமான கேள்விதானே என்றும் சிற்சில சமயம் தோன்றத் தான் செய்யும்.

ஆனாலும் ராட்டையின் சிறப்பை நம் கண் முன் காந்தியடிகள் நிரூபித்துக் காட்டிவிட்டார். கதர் நூலில் தான் நமது சுயராஜ்ஜியம் கட்டித் தொங்குகிறதென்று அவர் நமக்கு உறுதியாகக் கூறினர். அதை நாம் புரிந்துகொண்டோமோ

இல்லையோ. மக்களின் வாழ்வில் ராட்டை ஒரு பெரும் உணர்ச்சிப் புரட்சியை உண்டாக்கத் தவற வில்லை. சாம்ராஜ்யாதிபதிகளான வெள்ளை எஜமா னர்களின் அஸ்திவாரத்தை அசைத்து வேரோடு புரட்டித் தள்ளியும்விட்ட உண்மையை நாம் பார்க்கத்தான் செய்தோம். இத்தகைய மகத்தான தொரு சக்ராயுதத்தின் பெருமையை, நமது புது வாழ்வின் யந்திரமயக் கொள்கை மாசுபடுத்த வில்லையா என்ற எண்ணம் ஒவ்வொருவருக்கும் எழத்தான் செய்யும்.

இந்தக் கருத்தை நான் பாலசுந்தரத்திடம் தெரிவித்த போது அவர் என்னைத் திருப்பி ஒரு கேள்வி கேட்டார்.

"ராட்டை என்பது ஒரு மகத்தான ஆயுதம் என்று நீங்கள் நம்புவது சரிதான். அந்த ஆயுதம் அன்னிய எஜமானர்களை வீழ்த்த மிகவும் உதவி யாக இருந்ததும் உண்மைதான்.

"எனவே அது ஒரு ஆயுதம் தான் என்று கொள்வது மிகவும் சரியானது ஆனால் எதிரி களின் மீது நாம் பிரயோகித்த அதே ஆயுதம், நமது சொந்த அரசாங்க அமைப்பைப் பாதிக்குமா காக்குமா என்பதைச் சிந்திக்க வேண்டாமா?" என்று அவர் வினவினார்.

சரியான கேள்விதான் என்று பட்டது. மேலும் அவர் கூறினார். "கால தேச வர்த்தமானங் களை அனுசரித்து அவ்வப்போது ஏற்ற மார்க்கங் களை உயர் தலைவர்கள் உலகுக்குக் காட்டுகின்ற னர். அவ்வப்போது அவை நமக்குச் சிறந்த பயனைத் தருகின்றன. ஆனால் எந்த ஒன்றை யுமே எல்லாக் காலத்துக்கும் ஏற்ற இறுதிப் பரிகார மாகக் கருதிவிட இயலாது.

"இறுதியான லட்சியம், முடிவான பரிகாரம் என்று எதுவும் கிடையாது. இவையெல்லாம் நமது அவ்வக்காலத்து ஆர்வக் கனவுகளையே அடிப்படையாகக் கொண்டவை. அந்த லட்சியங் களை விடாப் பிடியாகப் பிடித்துக் கொண்டிருப் பதைக் காட்டிலும், அந்த லட்சியங்களை நோக்கி நாம் எடுத்து வைத்துள்ள அடிகள் என்ன பலனைத் தந்திருக்கின்றன – நமது கதியை எவ்வளவு தீவிரப்படுத்தியிருக்கின்றன என்பதே ஒரு சமூக வளர்ச்சியில் முக்கியமாகக் கவனிக்கப்பட வேண் டிய காரியம். ஏனென்றால் எல்லா லட்சியங் களுமே எய்தப் பெற்ற போது அவை ரஸம் குறைந்து சப்பென்று போய்விடுகின்றன. ஆர்வக் கனவுகளை அளவுக்குள் வைக்காவிட்டால் அமைதி யும் நிறைவுணர்ச்சியும் கிடைக்காது.

"ராட்டையும் நமது தேசீய உணர்ச்சி விளைவு களில் ஒன்று. மாறி வருகின்ற நமது பொருளா தாரத்தில் உணர்ச்சியை மட்டுமன்றி, பல பிரத் யட்ச உண்மைகளையும் சாஸ்திரீயமான சமூகப் பொருளாதார விளைவுகளையும் நாம் கணக்கில் எடுத்துக் கொள்ள வேண்டும். இந்தப் பொருள் பற்றி விரிவாக "பொருளாதாரமும் அம்பர் சர்க்கா வும்" என்று நான் ஒரு ஆராய்ச்சி எழுதியுள் ளேன். விரிவாக அவற்றில் நீங்கள் என் கருத்துக் களைக் காணக்கூடும்" என்று கூறி அதன் பிரதி ஒன்றையும் அளித்தார்.

யந்திரங்கள் மனிதனுடைய வேலை வாய்ப் பைக் குறைத்து விடுமென்ற சித்தாந்தத்தை இந்த நூலில் ஆசிரியர் பாலசுந்தரம் அவர்கள் மறுத்து, மாறாக யந்திரங்கள் மனிதர்க்கு வேலை வாய்ப்பைப் பெருக்கு மென்பதை ஆதாரபூர்வமாக விளக்கி யிருக்கிறார்.

குறிப்பிட்ட ஒரு தொழிலில் தான் மனிதர்க்கு வேலை வாய்ப்பு வேண்டுமென்று எண்ணினால் அந்தத் தொழில் யந்திர மயமாகாமல் நிறுத்தப்பட வேண்டியது தான்.

மனிதன் நெசவையோ, விவசாயத்தையோ மட்டும்தான் நம்பியிருக்க வேண்டுமென்று எண்ண வேண்டிய காரணம் கிடையாது. தீவிர மாய் பெருகி வரும் ஜனத் தொகையின் வாழ்வுக்கு வளர்ந்து வரும் நாகரிகத் தேவைகளின் பெருக் கத்தினால் எத்தனையோ புதுப் புதுப் பொருள்கள் தேவைப்படுகின்றன.

துணியை யந்திரத்தில் தயாரிப்பதால் துணி விலையில் ஒவ்வொருவருக்கும் செலவு குறைகிறது. மீதிப் பொருளைக் கொண்டு வாழ்வில் வெவ் வேறு உபயோகப் பொருளை வாங்க முடிகிறது. அதனால் மற்றும் அத்தகைய பொருள்களுக்குத் தேவை உண்டாகிறது. எனவே வேறு பல பொ ருள்களை உற்பத்தி செய்வதற்கான வேலை வாய்ப்பு பெருகுகிறது.

தொழிற்சாலைகள் பெருகப் பெருக, யந்திர உற்பத்தி செய்யும் தொழிலும், ஏராளமான பொரு ள்கள் உற்பத்தியாவதால் அவை இடத்திற்கு இடம் கொண்டு சென்று பரிவர்த்தனை செய்வதற் கான துறையில் பற்பலருக்கு வேலை வாய்ப்பும் சாலைகள் அமைத்தல், வாகன வசதிகள் செய்தல், வியாபாரம் புரிதல் என்றெல்லாம் தொழில் பெருக் கம் ஏற்படுகிறது.

தொழிற்சாலைகளுக்குத் தேவையான மூலப் பொருள்களை உற்பத்தி செய்தல் அவற்றை சேக ரித்தல், வியாபாரம் செய்தல், பொருளாதாரப் புழக் கத்திற்கான பாங்குகள், இன்ஷூரன்ஸ்கள், நிர் வாக வேலைகள், கட்டடங்கள் கட்டுதல், தளவா டப் பொருள்களைத் தயாரித்தல் இப்படி வேலை வாய்ப்புக்கள் பெருகுவதுதான் யந்திர மயக் கொள்கையின் விளைவேயன்றி மனிதர்களின் வேலையைப் பிடுங்கிக் கொள்வதல்ல.

ஒரு குறிப்பிட்ட தொழில் யந்திர மயமாகும் போது அந்தத் துறையில் வேலை செய்த மனிதர் களின் எண்ணிக்கையைக் குறைப்பது போல அது தோன்றினும், பொதுவாக மனிதர்களுக்கு முன்

ளைக் காட்டிலும் அதிக அளவில் புதிய புதிய வேலைகளை உண்டாக்கும் சக்தி இயந்திரத்திற்கு இருக்கிறது.

ஆனால் தொழில்கள் தனிப்பட்டவர்களிடமோ அரசாங்கத்திடமோ ஏகபோகமாக ஆகிவிடாமல் போட்டியிட்டு முன்னேறுவதானால்தான் யந்திர வளர்ச்சியால் மனித குலம் முன்னேற முடியும் என்பதை உணர வேண்டும்.

கிராமங்கள் நிறைந்த நாடு இந்தியா. கிராம வாழ்வின் அமைப்பும் வளமும் சீராக நிலவ வேண்டுமானால் அங்கு பெரிய தொழிற்சாலைகள் உதவா. அவை நகரங்களில்தான் இருக்க வேண்டும். இல்லாவிட்டால் பெரிய தொழிற்சாலைகளை அமைக்கும் கிராமங்கள் விரைவில் நகரங்களேயாகிவிடும்.

எனவே நகரங்களில் உள்ள தொழிற்சாலைகளுக்கு மூலப்பொருள்களை வழங்கும் கிராமங்களின் வாழ்க்கை நகரங்களையே நம்பியிராமல் தன்னையே நம்பி வாழ வேண்டுமானால் மிகப் பெரியதும் ஆகச் சிறியதுமாக இல்லாத நடுத்தரமான தொழில்கள் அங்கு பெருக வேண்டும். பழங்காலத்தில் கிராமத் தொழிற்சாலையான கொல்லம் பட்டறைகளில், உழவுக்கும், வண்டிக்கும் வேண்டிய சிறிய பொருள்களை உற்பத்தி செய்வதும் பழுது பார்ப்பதும் தான் நடை பெற்று வந்தன. இப்பொழுது தையல் யந்திரங்கள், டிராக்டர்கள், பம்பு செட்டுகள், எஞ்சின்கள் பரவி வருகின்றன. இவற்றைப் பழுது பார்க்கும் வேலை கிராமத்துப் பட்டறைகளுக்குக் கிடைத்திருக்கின்றன.

நீங்கள் பார்வையிட்ட இயந்திர ராட்டை நமது கிராம வாழ்வில் அதன் பெருமை குன்றாமலும் மனித உழைப்புக்கு இடமும் இயந்திரத்திற்கு அடிமைப்பட்டு விடாமல் யந்திரத்தின் பயனைப் பெறவும் ஏற்ற தொரு கருவி, என்று விவரிக்கிறார்.

கடந்தகால உணர்ச்சிப் பெருமிதங்களோ எதிர்கால லட்சிய ஆர்வக் கனவுகளோ மட்டும் போதா.

தேசீய உணர்ச்சி அடிப்படையில் ராட்டை ஒரு காலத்தில் நமக்கு ஒரு நன்மையைச் செய்தது. தேசீய வளத்தை நாடுகின்ற இன்றைய நிலையில் ராட்டையின் பொருளாதாரமென்ற ஒன்றை ஒரு லட்சிய உணர்ச்சியுடன் பொருத்திப் பார்க்காமல் யந்திரத்தின் பயனை நாம் இழந்து விடாமல் பயன் படுத்தவே முயல வேண்டும்.

அறிஞர் பாலசுந்தரம் அவர்கள் விளக்கிய அடிப்படை உண்மைகள் சிந்தனையைத் தூண்டுகின்றன, எப்படியும் யந்திரம் நமக்கு வேண்டிய ஒன்றுதான் என்பதும், அதன் எல்லையும் பயனும் தெளிந்து பயன் படுத்தப்பட வேண்டுமென்பதும் எனக்குப் பட்டது. பிறிதொரு சமயம் டெக்ஸ்டூல் கம்பெனியின சாதனைகளைப் பற்றி வாசகர்களுக்கு விரிவாகக் கூறுகிறேன்.

மாணிக்கம்.

★

உள்ளம் உருகுதையா — தலைவா
உன்னுளத் திண்மையிலே
வெள்ளப் படை வீரர் — நெஞ்ச
வீரம் பெருகுதையா — (உள்ளம்)

துள்ளிக் குதித்துவந்தார் — நல்ல
தோழரென நடித்தார்
கள்ளத் தனமிந்தக் — காசினி
கண்டுகொள்ளச் செய்தாய் — (உள்ளம்)

வேண்டுதல் வேண்டாமை — அற்ற
வீர நடுவு நிலை
கண்டு வியந்துலகோர் — உன்றன்
கருணை புகழ்கின்றார் — (உள்ளம்)

உன்றன் விரலசைவில் — எங்கள்
உயிரும் பொருட்டலவே
இன்று புறப்பட்டோம் — இங்கு
எண்ணரும் காளையர்கள் (உள்ளம்)

காந்தியின் சந்ததியாய் — வந்த
கண்ணியனே தலைவா
மாந்தர் குலத்தினிற்கே — ஒரு
மாணிக்க மாமலையே — (உள்ளம்)

நேரு பிரான் எங்கள் — தலைவன்
நேர் நிகர் யாருமில்லை
போருக் கெழுச்சி யுற்றோம் — புண்ணிய
பூமியைக் காத்திடுவோம் — (உள்ளம்)

அருணன்.

அமுதவாக்கு

அன்பென்று கொட்டு முரசே! — மக்கள்
அத்தனை பேரும் நிகராம்;
இன்பங்கள் யாவும் பெருகும் — இங்கு
யாவரும் ஒன்றென்று கொண்டால்.

அசோகா பாக்கு

உங்கள் வீட்டில்

கல்யாணமா?

அழகுக்கு அழகு செய்யும்
உயர்தர பட்டு, நூல்,
கைத்தறி & மில்
ஜவுளிகளுக்கு
தமிழகத்தின்
தலைசிறந்த ஸ்தாபனம்

நியூ பனாரஸ் ஹால்

(முதலியார் கடை)

பெரிய தெரு, :-: கும்பகோணம்.

உரிமையாளர்:

C. பழனியப்ப முதலியார் & பிரத…

லக்ஷ்மி விலாஸ்
பாங்கு லிமிடெட், கரூர்.

ஸ்தாபிதம் 1926. ஷெட்யூல்ட் பாங்கு.

ரிஜிஸ்டர்ட் ஆபீஸ்: 270, ஜவஹர் பஜார், கரூர்.

★

அதிகாரம் பெற்ற மூலதனம்	ரூ.	25,00,000
செலுத்தப்பட்ட மூலதனம்	ரூ.	7,57,270
ரிசர்வுகள் ஷேர்பிரிமியம் உட்பட	ரூ.	10,34,846

டிபாசிட்கள்: ரூ. 3 கோடிக்குமேல்.

பலவகையான டிபாசிட்களும் கவர்ச்சிகரமான வட்டி விகிதங்களில் ஏற்றுக் கொள்ளப்படுகின்றன. எல்லாவிதமான பாங்க் அலுவல்களும் உண்டு.

விசாரணை செய்யுங்கள்.

V. ராஜகோபாலன்,
செக்ரட்ரி & மானேஜர்.

நவநாகரீக வாழ்க்கையில்

எழில் தரவல்லது கோ-ஆப்டெக்ஸ்

பற்பல வண்ணங்களிலும், நூதன ரகங்களிலும் கிடைக்கும் கோ-ஆப்டெக்ஸ் அலங்காரத் துணிகளை நீங்கள் உபயோகிக்கும்போது உங்கள் இல்லம் கவர்ச்சிமிக்க வர்ணங்கள் நிறைந்து அழகுபடுகின்றது. உங்கள் வீட்டை கோ-ஆப்டெக்ஸ் கொண்டு அலங்கரியுங்கள்; அதனால் நீங்கள் பெருமை கொள்வதுடன் உங்கள் விருந்தினரும் மெச்சி மகிழ்வர்.

கோ-ஆப்டெக்ஸ் கைத்தறி துணிகள்

ஆடைக்கும் அலங்காரத்திற்கும்



தமிழ்நாடு கைத்தறி
நெசவாளர் கூட்டுறவு
சங்கம் லிமிடெட்,
எழும்பூர், சென்னை-8

விற்பனை நிலையங்கள்
இந்தியாவில்
எங்கும் உண்டு

ஆங்கிலத் திருக்குறள்

ஆசிரியருக்குப் பாராட்டு

★

திருவாசகத்தை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்துப் பெரும் புகழ் கொண்ட திருவாசக மணி கே. எம் பாலசுப்ரமண்யம், இப்பொழுது திருக்குறளையும் ஆங்கிலம் கூறும் அகல் உலகிற்கு அளித்துத் திருக்குறள் மணியாகத் திகழ்கிறார்.

அரிய முறையில் மிகவும் சிறப்பாக இயற்றப் பெற்ற இந்த மொழி பெயர்ப்பு ஆங்கிலச் செய்யுள் வடிவிலேயே அமைந்திருக்கும் சீர்த்தியையும் நேர்த்தியையும், வெளியீட்டு விழாவிற் பங்குகொண்ட நாவலர், பாவலர், புரவலர் யாவரும் ஒருங்கே பாராட்டினர். வட சென்னையில் விளங்கும் சென்ன மல்லேஸ்வரர் சந்நிதியில் சென்ற வாரம் நடைபெற்ற வெளியீட்டு விழாவில் திரளான பேரறிஞர் நடுவே குறளை ஆங்கிலக் கவிதைகளாக இயற்றியுள்ள திருவாசக மணிக்கு, மணலி அறக்கட்டளை சார்பாக திருக்குறள் மணி என்ற விருதினையளித்துப் பொன்னாடை போர்த்திச் சிறப்புறச் செய்தார், தமிழக சட்ட மன்ற நாயகர் செல்ல பாண்டியன்.

சென்னை உயர் நீதி மன்றத் தலைமை நீதியரசர் இராமச்சந்திரய்யர் அவர்கள் விழாவுக்குத் தலைமை தாங்கி மொழி பெயர்ப்பின் சிறப்பினை விதந்து பாராட்டினார். கல்வி அமைச்சர் பக்தவத்சலம், திருக்குறள் சிறந்த தொரு உலக நூல் என்பதை அகிலம் அறியுமெனினும், இந்த மொழி பெயர்ப்பின் விளைவாக, குறளின் கீர்த்தியை மேலும் நன்குணர்ந்து போற்றுமென்றும் கூறி, இது வெறும் மொழி பெயர்ப்பாக அன்றி ஆங்கிலத்தில் இயற்றப் பட்ட மூல நூல் போன்ற சிறப்புடன் விளங்குகிற தென்றும் பாராட்டி நூலை வெளியிட்டு ஆசிரியருக்கு மைலைக் கபாலீசுர ஆலய தர்மகர்த்தர் அய்யா சுப்ரமணிய முதலியார் சார்பாகப் பொன்னாடை போர்த்தினார். தருமையாதீனத்தின் பிரசாதமும் பொன்னாடையும் தவத்திரு சோமசுந்தரத் தம்பிரான் அவர்கள் வழங்கி ஆசிர்வதித்தார்.

திருக்குறள் மணி என்ற விருதினையும் பொன்னாடையையும் அணிவிக்கிறார் சபாநாயகர் செல்ல பாண்டியன்,

மற்றும் டாக்டர் மு. வரதராசனார், சுத்தானந்த பாரதி, வித்வான் முத்துக் கண்ணப்பர், ஆகியோர் பாராட்டுரை வழங்கினர். தொடக்கத்தில் அறநிலைய ஆணையர் எம். எஸ். சாரங்கபாணி முதலியார் வரவேற்புரை கூறினார். உதவி ஆணையர் இராமலிங்கா ரெட்டி நன்றி பகர்ந்தார்.

ஆசிரியர் கே. எம். பாலசுப்ரமண்யம் தக்கவாறு விடையளித்து தமது மகிழ்ச்சியையும் நன்றியையும் சம்பந்தப்பட்ட அனைவர்க்கும் தெரிவித்துக் கொண்டார். நூலை அழகுற அச்சிட்டுதவிய திருச்சி யுனைடெட் பிரிண்டர்ஸ் அதிபர் து. சிவஞானம் அவர்களுக்கு விழாவினர் பட்டாடை போர்த்திப் பாராட்டினர். ••

அனைவரும் விரும்புவது அன்ருட சேமிப்பு

- ★ சேமிப்பின் சிறப்புணர்த்தும் அன்ருடப் பயிற்சி
- ★ உங்கள் வாசலை நாடி எங்கள் தண்டலர் வருவர்
- ★ தொகை செலுத்த இயலாததால் தொந்திரவில்லை
- ★ சேமிப்பின் மீது கடன் வசதியும் பெறலாம்

பிக்மி

அன்ருடம்

ந. பை. வீதம் 25	ரூபாய் வீதம் 1

7 வருடங்களில்

ரூ 700	ரூ 2,800

சிறுதுளி பெருக்கும்

ஸிண்டிகேட் பாங்க்



T. A. பய்
B.Com., (Bom) A.I.I.B., F.R.E.S (Lond)
மானேஜிங் டைரக்டர்.

Dr. T. M. A. பய்
M. B. B. S.,
சேர்மன்.

தி கனரா இண்டஸ்ட்ரியல் அண்டு பாங்கிங் ஸிண்டிகேட் லிமிடெட்

ரிஜிஸ்டர்ட் ஆபீஸ்: முகுந்த் நிவாஸ், உடுப்பி.

ஸ்தாபிதம் 1925.

தந்தையைப்போல் தனயன் ...

ஆம், சில விஷயங்களில்தான் ... முக்கியமான சில வற்றிலோ? ஊஹூம்! ராமன் தன் தந்தையைப்போல் ஒரு விவசாயியாகத்தான் இருப்பான். ஆனால் அவன் நிலத்தை உழுது பயிரிடும் விதமே வேறுதான். தரத்தில் உயர்ந்த விதைகளையே விதைப்பான். விஞ்ஞான ரீதியில் மாற்றி மாற்றிப் பயிரிடுவான். நீர்ப்பாசன வசதிகளை நன்கு பயன்படுத்துவான். ராலீஸ் தயாரிப்பதுபோன்ற சமநிலை உரக்கலவைகளைக்கொண்டு தனது நிலங்களை வளப்படுத்துவான். ராலீஸ் தயாரிக்கும் ''மரம் மார்க்'' உரங்கள் இந்திய விவசாயிகளுக்குத் தரமான, வளமான விளைச்சலை அளிக்கின்றன. ராலீஸ் உரங்களில் முதலீடு செய்யப்படும் 1 ரூபாய், 4 ரூபாய் அதிகப்படி விளைச்சலைத் தருகிறது.

RALLIS

TREE BRAND

FERTILIZERS

ராலீஸ்(இந்தியா)லிமிடெட்

இந்தியா முழுதும்

RFY-29 TAM

Shivaji Spring Special Supplement to issue 14—4—1963 Regd. No. M. 3398

தரத்துக்கும் சேவைக்கும்
தக்கதோர் சின்னமாக
விளங்கும் பெயர்

வின்ஸென்ட்

ஸோடா, கலர், கிரஷ், கனிச்சுவை பானங்கள்
ரொட்டி, கேக், பிஸ்கட் தயாரிப்பில்
புகழ் பெற்றவர்கள்.

உபசரணை விருந்துகளுக்கு உற்றபணியாளர்கள்

தலைமை நிலையம்: திருச்சிராப்பள்ளி.
கிளைகள்: சென்னை, மதுரை, நெல்லை, சேலம், கோவை, குடந்தை, காரைக்குடி, கடலூர்.

Edited & Published by its owner Sri. Triloka Sitaram & Printed by him at his Shivaji Newsprinters, 24-A, Theradi Bazaar, Tiruchi-2.